Registered as Newspaper

# உதயன் சஞ்சீவி

சுடர் : 36
கதிர் : 149 | ஞாயிற்றுக்கிழமை | சித்திரை 12 நாள் 25 ஏப்ரல் 2021 | வள்ளுவர் ஆண்டு 2052

பக்கங்கள்: 16+24
விலை : ரூ.40

செய்தி : 021 493 0000
விளம்பரம்: 021 493 1111

# கொரோனா! 100,000

## நேற்று தொற்றாளர்கள் 826

கொழும்பு, ஏப்ரல் 25

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை கடந்த சில நாள்களாகச் சடுதியாக அதிகரித்துள்ளது. இதற்கமைய தொற்றாளர்களின் எண்ணிக்கை ஒரு லட்சத்தைத் தாண்டியுள்ளது. 15 ➤

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ்

## ரிஷாத், ரியாஜ் இருவரும் நேற்று அதிகாலை கைது

கொழும்பு, ஏப். 25

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் மற்றும் அவரின் சகோதரரான ரியாஜ் பதியுதீன் ஆகியோர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத் 15 ➤

## பீடாதிபதியாக கண்ணதாசன்

யாழ்ப்பாணம், ஏப். 25

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உயர் பட்டப்படிப்புகள் பீடத்தின் பீடாதிபதியாக மருத்துவபீடத்தைச் சேர்ந்த பேராசிரியர் செல்வம் கண்ணதாசன் பல்கலைக்கழகப் பேரவையால் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பேரவையின் மாதாந் 15 ➤

## டெங்கு தலைதூக்கும் சாத்தியம் குடாநாட்டில்

யாழ்ப்பாணம், ஏப். 25

யாழ்ப்பாணக் குடாநாட்டில் கடந்த வாரம் பெய்த மழை காரணமாக டெங்கு தலை தூக்கும் சாத்தியம் இருக்கிறது என உணரப்பட்டுள்ளது. எனவே மக்கள் 15 ➤

## கொரோனாக் கட்டுப்பாடுகளை மீறிய யாழ்ப்பாண செயலகம்

யாழ்ப்பாணம், ஏப். 25

கொரோனாக் கட்டுப்பாடுகள் தொடர்பான புதிய அறிவித்தல் வெளியாகி 24 மணி நேரத்துக்குள்ளேயே அதை மீறும் வகையில் யாழ்ப்பாண மாவட்டச் செயலகம் நடந்துகொண்டுள்ளது. நேற்றுமுன்தினம் வெளியான புதிய சுற்றறிக்கையின் பிரகாரம், சகல வகையான விருந்துபசார நிகழ்வுகளும் தடை 15 ➤

## குளிக்கச் சென்றவர் சடலமாக மீட்பு!

யாழ்ப்பாணம், ஏப். 25

யாழ்ப்பாணம், அரியாலை நாவலடிப் பகுதியில் குளம் ஒன்றில் குளிக்கச் சென்ற 15 ➤



## மகனின் தாக்குதலில் தந்தை உயிரிழப்பு

### திருநெல்வேலியில் கொடூரம்

யாழ்ப்பாணம், ஏப். 25

குடும்பத் தகராறு காரணமாக மகனின் தாக்குதலில் தந்தை உயிரிழந்துள்ளார் என கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர். சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தில் தாக்குதலை மேற் 15 ➤

## கர்ப்பிணிப் பெண் எரிந்து உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஏப். 25

உடுப்பிட்டி பகுதியைச் சேர்ந்த 19 வயது கர்ப்பிணிப் பெண்ணொருவர் எரிகாயங்களுக்கு உட்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார். அவரது 15 ➤

## அரச பணியாளரை மிரட்டிய அரசியல்வாதியின் தந்தை!

யாழ்ப்பாணம், ஏப். 25

'நீ கூட்டமைப்பு ஆளா?, கூட்டமைப்புக்கா வேலை செய்கிறாய்? கூட்டமைப்பின்ர சரா, சுமந்திரன், மாவை ஆக்களுக்கு வேலைசெய்த பிரதேச செயலர்கள், உதவித் திட்டமிடல் 15 ➤

இலங்கையில் அதிக நன்மைகளை கொண்ட மொபைல் முற்கொடுப்பனவு Planக்கு மாறுங்கள்

TRIPLE BLASTER

D2D 1150 நிமிடங்கள்
D2D 1150 SMS
Anytime Data 550MB
FREE Bonus Data 825MB (Anytime 4G Bonus 275MB, Night Bonus 550MB)

ரூ. 345/-*
*வரிகள் உள்ளடங்களாக

செயற்படுத்திக்கொள்ள ரூ.345/-ஐ ரீலோட் செய்யுங்கள் அல்லது #678# டயல் செய்யுங்கள்

Dialog
எதிர்காலம் இன்றே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரிபடைந்த கொவிட்-19 வைரஸ் இலங்கைக்கு பரவினால் பேராபத்து!

## அரசின் அக்கறையீனத்தையும் வெளிப்படுத்துகின்றார் இராஜாங்க அமைச்சரின் ஆலோசகர் சஞ்சய் பெரேரா

**கொழும்பு, ஏப். 25**

**இந்தியாவில் பரவிவரும் நிலைமாற்றமடைந்த கொவிட் 19 வைரஸ் இலங்கையில் பரவத்தொடங்கினால் அதனை எதிர்கொள்வது மிகவும் கடினமாகும். இந்த நிலையில் பிரதேச எல்லைக்கட்டுப்பாடுகள் விதிக்கப்படுவதுடன் நாடு முழுவதும் பாடசாலைகள் மூடப்பட வேண்டும். இல்லாவிட்டால் நாட்டின் சுகாதாரத்துறை முழுமையாகச் சீர்குலையும் நிலையேற்படும் என்று ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்று நோய்கள் மற்றும் கொவிட் நோய்க்கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சரின் ஆலோசகர் சஞ்சய் பெரேரா தெரிவித்துள்ளார்.**



இது தொடர்பில் தனது டுவிற்றர் பக்கத்தில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

தொற்றுநோய்த் தடுப்பு நிபுணர்கள் சுமுகமான நிலையைக் காண்பித்து, அரசு தவறான தீர்மானங்களை மேற்கொள்வதற்கு வாய்ப்புக்களை ஏற்படுத்திக்கொடுக்கிறார்கள் என்று கடந்த வருடம் மே மாதத்திலிருந்து கூறி வருகின்றேன். நீர்த்துப்போன தீர்மானங்களின் விளைவாக, நாம் கடந்த ஒக்ரோபர் மாதத்தில் மீண்டும் கொரோனா வைரஸ் பரவல் அலைக்கு முகங்கொடுத்தோம்.

அதேபோன்று கொரோனா வைரஸின் தன்மை நிலைமாற்றமடைவதால் பி.சி.ஆர். பரிசோதனைகளின் எண்ணிக்கையை அதிகரிக்குமாறும், தனிமைப்படுத்தல் மற்றும் பிராந்தியக் கட்டுப்பாடுகளை வலுப்படுத்துமாறும் கடந்த ஜனவரி மாதத்திலிருந்து நானும் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே, ரவி குமுதேஷ் ஆகியோரும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கமும் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றோம்.

அவ்வாறிருந்தும் எங்களது வேண்டுகோள்களையும் மீறி பி.சி.ஆர். பரிசோதனைகளின் எண்ணிக்கை நாளொன்றுக்கு16ஆயிரத்திலிருந்து 3 ஆயிரமாகக் குறைக்கப்பட்டது. மேலும் தமிழ், சிங்கள புதுவருடத்துக்கு சில தினங்கள் முன்னர் ஊடக நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு, இந்தியாவில் பரவிவரும் நிலைமாற்றமடைந்த வைரஸ் தொடர்பில் எச்சரித்திருந்தேன். அது இலங்கைக்குப் பரவினால் அதனை எதிர்கொள்வது கடினம் என்றும் கூறியிருந்தேன்.

இராணுவத்தளபதி, பிரதிப் பொலிஸ்மா அதிபர் மற்றும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினர் ஆகியோரைத் தவிர, தொற்று நோய்த் தடுப்புப் பிரிவின் அதிகாரிகள் இந்த அபாயத்தின் தீவிரத் தன்மையை மக்களுக்கு உணர்த்தவில்லை.

இந்த நிலையில், தற்போதெனினும் தொற்றுநோய்த் தடுப்புப் பிரிவின் அதிகாரிகளால் தவறாக வழிநடத்தப்படுவதிலிருந்து மக்கள் விலகிக்கொள்ள வேண்டும். தொழிற்சாலைகள் மாத்திரம் செயற்படுவதற்குஅனுமதியளிக்கும் வகையில் மேல் மற்றும் வடமேல் மாகாணங்கள் பகுதியளவில் முடக்கப்பட வேண்டும் - என்று குறிப்பி டப்பட்டுள்ளது. (த-இ)

## பிடியாணைக் கைதிக்கு கொரோனாத் தொற்று

முல்லைத்தீவு, ஏப்.25

முல்லைத்தீவு -நீதிவான் நீதிமன்றால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டு, கைதுசெய்யப்பட்ட சந்தேக நபருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் சின்னச்சாளம்பன் பகுதியில் குற்றச்செயல்களில் ஈடுபட்டார் என்று தெரிவிக்கப்பட்ட நபர் ஒருவருக்கு எதிராக பிடியாணை பிறப்பிக்கப்பட்ட நிலையில், ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலைய பொலிஸாரால் கடந்த 19ஆம் திகதி சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டார். அவர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டு வவுனியா சிறையில் அடைக்கப்பட்டார்.

குறித்த நபருக்கு வவுனியா சிறைச்சாலையில் கடந்த 20ஆம் திகதி அன்று பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. அதன் முடிவு நேற்றுமுன்தினம் வெளியானது. இதில் அவருக்கு கொரோனாத் தொற்று இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

பிடியாணை பிறப்பிக்கப்பட்ட குறித்த சந்தேகநபரைக் கைதுசெய்த பொலிஸார் அவருடன் சம்மந்தப்பட்டவர்கள், நீதிமன்ற வளாகத்தில் அவருடன் தொடர்பைப் பேணியவர்கள் ஆகியோர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதுடன் ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸாருக்கும் நேற்று பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. (ப-19)

## 'கொவிட்'டால் மூடப்பட்டது கனேவத்த ரயில் நிலையம்

கொழும்பு, ஏப். 25

கொவிட்-19 வைரஸ் தாக்கம் காரணமாக கனேவத்த ரயில் நிலையம் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளது. ரயில் நிலையங்களின் சுகாதாரப் பாதுகாப்பு கேள்விக்குறியாகியுள்ளது. கடந்த ஒக்ரோபர் மாதத்துக்குப் பிறகு சுகாதாரப் பாதுகாப்பு உபகரணங்கள் எதுவும் ரயில் நிலையங்களுக்கு வழங்கப்படவில்லை என்றும், ரயில் நிலைய பொறுப்பதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் கசுன சாமர தெரிவித்தார்.

பெரும்பாலான பயணிகள் சுகாதார பாதுகாப்பு வழிமுறைகளைப் பின்பற்றாது ரயிலில் பயணிக்கின்றார்கள்.

ரயில் நிலையங்களின் சுகாதார பாதுகாப்பை உறுதிப்படுத்தவும், ரயில் நிலையங்களுக்கு வரும் பயணிகள் சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றவும் தேவையான வசதிகளை ரயில்வே திணைக்களம் இதுவரையில் ஏற்படுத்திக் கொடுக்கவில்லை. இவ்வாறான நிலையில் சுகாதாரப் பாதுகாப்பு வழிமுறைகளை முழுமையாகக் கடைப்பிடிப்பது கடினம் - என்றார். (த-இ)

## தனிமைப்படுத்தல் காலம் நீடிப்பு

கொழும்பு, ஏப். 25

இலங்கைக்கு வரும் வெளிநாட்டவர்களுக்கான தனிமைப்படுத்தல் காலம் மீண்டும் 14 நாள்களாக மாற்றப்பட்டுள்ளது. இவ்வாறு கொரோனாத் தடுப்புச் செயலணியின் தலைவரும், இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

கொரோனாவின் திரிபடைந்த வைரஸின் அறிகுறி தென்பட 14 நாள்கள் ஆகும் என்பதால், தனிமைப்படுத்தல் கால நீடிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது என அவர் குறிப்பிட்டார்.

கொரோனாத் தொற்று முடக்க நிலையிலிருந்து நாடு மீண்ட பின்னர், இலங்கைக்கு வரும் வெளிநாட்டவர்களின் தனிமைப்படுத்தல் காலம் 14 நாள்களிலிருந்து 7 நாள்களாகக் குறைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ.இ)

## கொழும்பு, கம்பஹா, குருநாகல் தொற்று ஆபத்தான மாவட்டங்கள்

கொழும்பு, ஏப். 25

கொழும்பு, கம்பஹா மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்கள் கொரோனாத் தொற்று அதிகமுள்ள ஆபத்தான மாவட்டங்களாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாறு இலங்கைப் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

இலங்கையின் பல பாகங்களிலும் தொற்றாளர்கள் எண்ணிக்கை அதிகரித்துச் செல்கின்றது. மக்கள் தங்கள் ஆரோக்கியத்தைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டும்.

தற்போது முஸ்லிம்களின் ரமழான் கொண்டாட்டத்துக்கு உரிய சுகாதார வழிகாட்டல்கள் வழங்கப்பட்டுள்ளன. மதத் தலைவர்களும், மக்களும் அதனை உரிய முறையில் பின்பற்றவேண்டும் - என்றார். (ஒ,22)

### கொரோனாத் தொற்று

# கட்டுப்பாடுகள் இன்றி கட்டுப்படுத்துவதையே விரும்புகின்றோம்

## அமைச்சரவைப் பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 25

நாட்டில் கொவிட் - 19 அச்சுறுத்தல் மீண்டும் ஏற்பட்டுள்ள நிலையில், அதனைக் கட்டுப்படுத்த மக்கள் முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும். போக்குவரத்து கட்டுப்பாடு மற்றும் தனிமைப்படுத்தல், ஊரடங்கு என சட்ட விதிமுறைகள் இன்றி மக்களின் ஒத்துழைப்புடன் தற்போதுள்ள நிலைமையைக் கட்டுப்படுத்தவே அரசு எதிர்பார்க்கின்றது என்று அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

கொவிட் பரவல் தொடர்பில் ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

நாடு தற்போது அபாய நிலையிலுள்ளது. எனவே அதற்கு முகங்கொடுப்பதற்கு தயாராக இருக்க வேண்டும். அதற்கான சகல வேலைத்திட்டங்களும் அரசு மற்றும் சுகாதார தரப்புக்களால் முன்னெடுக்கப்பட்டுள்ளன. எத்தகைய வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டாலும் மக்கள் ஒத்துழைப்பு வழங்கினால் மாத்திரமே அதனை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்த முடியும்.

ஜேர்மன் , பிரான்ஸ் உள்ளிட்ட நாடுகளில் கூட தற்போது கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு வைரஸ் பரவல் தீவிரமடைந்துள்ளது. இந்தியாவிலும் இதே நிலைமை ஏற்பட்டுள்ளது. ஆரம்பத்தில் காணப்பட்டதைவிட தற்போது உருமாறிய வைரஸ் பரவலே இதற்கான காரணமாகும். இது எமக்கு ஏற்பட்டுள்ள சவாலாகும். எனவே இந்த சவாலுக்கு முகங்கொடுப்பதற்கு ஒவ்வொருவரும் தமது கடமையை சரியாக நிறைவேற்ற வேண்டும். - என்றார். (த-இ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org







# இந்திய மீனவர்களோடு தொடர்புகொள்ளாதீர்

## விநயமாகக் கோருகிறார் இராணுவத் தளபதி

**யாழ்ப்பாணம், ஏப். 25**

**வடபகுதி மீனவர்கள் குறிப்பாக தென்னிந்திய மீனவர்களு டன் தொடர்புகளைப் பேணவேண்டாம். இந்தியாவில் தீவிரமாகப் பரவி வரும் கொரோனா வைரஸின் தாக்கத்தை யாழ்ப்பாணத்திலும் ஏற்படுத்திவிடாதீர்கள்.**

இவ்வாறு யாழ்ப்பாண மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் பிரியந்த பெரேரா தெரிவித்துள்ளார். யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நேற்றுக் காலை கொரோனாத் தடுப்புச் செயலணியின் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தின் முடிவில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; மக்கள் ஒன்றுகூடுவதைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் கூட்டத்தில் ஆராயப்பட்டது. இதற்குரிய நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்படும். யாழ்ப்பாண மாவட்டத்தில் பல்வேறு இடங்களிலும் கிருமித் தொற்று நீக்கும் பணிகள் இராணுவத்தினரால் முன்னெடுக்கப்படும்.

யாழ்ப்பாண நகரில் வாகனங்களை நிறுத்தும் இடங்களை மாற்றுவது தொடர்பிலும் ஆராய்கின்றோம்.

கடற்கரையோரங்களில் வாழும் சில மீனவர்கள் தென்னிலங்கை மீனவர்களுடனும், தென்னிந்திய மீனவர்களுடனும் தொடர்புகளைப் பேணுகின்றார்கள். இவர்கள் ஊடாக கொரோனா பரவல் தீவிரமடையலாம். அதனைக் கட்டுப்படுத்துவதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பிலும் ஆராயப்பட்டது-என்றார். (ஓ.26)

# வடக்கில் தினம்தோறும் 500 எழுமாற்றுச் சோதனைகள்

## சுகாதாரப் பணிப்பாளர் தகவல்

யாழ்ப்பாணம், ஏப். 25

வடக்கு மாகாணத்தில் நாள்தோறும் 500 எழுமாற்று பி.சி.ஆர். சோதனைகள் முன்னெடுக்கப்படுகின்றன என வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தில் கொரோனாத் தொற்று அதிகரித்துள்ளதுடன், எதிர்வரும் வாரங்களில் மேலும் அதிகரிக்கும் வாய்ப்புக்கள் இருக்கின்றன என எச்சரிக்கை விடுக்கப் பட்டுள் ளது.

இந்த நிலையில் வடக்கு மாகாணத்தில் எழுமாற்றுச் சோதனைகள் தொடர்பில் அவரிடம் கேள்வி எழுப்பியபோதே மேற்கண்டவாறு கூறினார். 'வடக்கு மாகாணத்தில் நாள்தோறும் 700 பி.சி.ஆர். மாதிரிகள் பெறப்படுகின்றன. அவற்றில் 500 மாதிரிகள் எழுமாற்றாக பெறப்படுகின்றன.

ஏனையவை முதல் தொற்றாளருடன் தொடர்பிலிருந்தவர்களிடமிருந்து பெறப்படுகின்றன' என்றார். இதே வேளை நாடளாவிய ரீதியில் நாள் தோறும் 15 ஆயிரம் பி.சி.ஆர். சோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளன என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ.5.26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஜனநாயக நாடென்ற பெயரை இலங்கை இழந்து வருகிறது

## தேசிய விடுதலை மக்கள் முன்னணி சுட்டிக்காட்டு

கொழும்பு. ஏப்.25

இலங்கையில் இன்று அராஜக ஆட்சி கட்டவிழ்த்து தலை விரித்து ஆடும் நிலையில் தன் குற்றங்களை மூடி மறைக்க முழு பூசணிக்காயை சோற்றில் புதைக்க எத்தனிக்கும் அரசு ஜனநாயக நாடு என்ற கோட்பாட்டை முற்றாக இழந்து வருகிறது என தேசிய விடுதலை மக்கள் முன்னணியின் தலைவர் முஸம்மில் முகைதீன் தெரிவித்துள்ளார்.

அரசியல் நிலவரங்கள் தொடர்பில் அவர் நேற்று வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் உள்ளதாவது;

நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெற்ற நாள் தொடக்கம் தேவையற்ற அரசியல் கைதுகள் இடம்பெற்று வரும் கொடூர ஜனநாயக மீறல் இந்த நாட்டு மக்களை பெரும் வீழ்ச்சியில் தள்ளும் என்பதை நன்கு அறிந்த அரசு, வேண்டுமென்றே அதைச் செய்வது ஒரு வேடிக்கையான விடயமே. ஜனநாயக மீறலுக்கு எதிராக குரல் கொடுத்துவரும் சிறந்த நாட்டுப் பற்றுள்ள அரசியல் தலைவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களை ஜனாதிபதிக்கு உள்ள அதிகாரத்தை வைத்து பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கொடூரமான முறையில் கைது செய்து அவர்களை புலனாய்வுப் பிரிவில் மாதக்கணக்கில் தடுப்புக் காவலில் வைத்திருக்கும் அபாயகரமான அரசியல் நாட்டில் நடைபெறுவது இதுவே முதல் தடவையாகும். இந்நிலை தொடர்வதால் சர்வதேசம் இலங்கையை முரட்டுக் கண் கொண்டு பார்க்க ஆரம்பித்துள்ளது. இதற்கு வெளிப்படையான சாட்சிப் பகிர்தலே கடந்த ஐக்கிய நாடுகளின் மனித உரிமை வாக்கெடுப்பில் இலங்கை படுதோல்வியைத் தழுவியமை- என்றுள்ளது. (ப)

# சர்வதேச குற்றவியல் நடவடிக்கை சரியே என்பதை நிரூபித்துள்ளது கோத்தா அரசு

## கஜேந்திரகுமார் எம்.பி சுட்டிக்காட்டு

கொழும்பு, ஏப்.25

**இந்த அரசு தமிழ் மக்கள் கோரும் சர்வதேச குற்றவியல் நடவடிக்கைகள் நியாயமானவை என்பதை நிரூபிக்கும் வகையில் செயற்பட்டு வருகின்றது. தற்போதுள்ள அரசு, ஜனாதிபதி ஆணைக்குழுக்களை உருவாக்கி நியாயமான தீர்ப்பு முறையில் நம்பிக்கை இல்லை என்பதை உணர்த்தியுள்ளது. இதனைத்தான் தமிழ் மக்களும் கடந்த 2009 ஆம் ஆண்டுமுதல் கூறுகின்றனர்.**

இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக் குழுவின் விசாரணை அறிக்கை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு அவர் மேலும் தெரிவிக்கையில்,

உள்நாட்டு நீதிப்பொறிமுறையில் தமக்கு நம்பிக்கையில்லை என்பதை அரசியல் பழிவாங்கல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக் குழுவின் மூலம் அரசு இந்த நாட்டுக்கும் சர்வதேசத்துக்கும் எடுத்துக் காட்டியுள்ளது. இதனைத்தான் தமிழ் மக்களும் 2009ஆம் ஆண்டு முதல் வலியுறுத்துகின்றனர். இதன் ஊடாக போர்க்குற்ற விசாரணைகளுக்கு சர்வதேச குற்றவியல் நடவடிக்கைகளே பொருத்தமானதாக அமையும் என்பதற்குச் சிறந்த முன்னுதாரணத்தை அரசு வழங்கியுள்ளது. நானும் எனது கட்சியும் அரசியல் பழிவாங்கல்களுக்கு உட்பட்டவர்கள். இது தொடர்பில் நீதிமன்றில் போராடினோம். நீதிமன்றில் வழக்குகளைத் தாக்கல் செய்தோம். அரசியல் ரீதியாகத் தூண்டப்பட்டே எமக்கு எதிரான பழிவாங்கல்கள் மேற்கொள்ளப்பட்டன. இறுதியில் நான் தனிப்பட்ட ரீதியில் குற்றம் சாட்டப்பட்டிருந்தேன். பின்னர் விடுவிக்கப்பட்டேன். எனது நண்பர்மீது குற்றம் சுமத்தப்பட்டது. இந்த நாட்டில் மோசமான ஒரு கலாசாரம் உள்ளது. அமையும் ஒவ்வொரு அரசும் முன்னைய அரசுகளுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதே அது. தற்போதுள்ள அரசு ஜனாதிபதி ஆணைக்குழுக்களை உருவாக்கி நியாயமான தீர்ப்பு முறையில் தனக்கு நம்பிக்கை இல்லை என்பதை உணர்த்தியுள்ளது.

போரின்போது தமிழ் மக்களுக்கு எதிராக பாரதூரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. இந்த விசாரணை ஆணைக்குழுவின் ஆணை, அதிகார வேறாக்கத்தையும் சட்ட விதியையும் மீறுவதான அல்லது அதற்கு முரணானதாக உள்ளது. பல்வேறு நிறுவனங்களின் சுயாதீனத் தன்மைகளை மூழ்கடித்துள்ளனர். சாட்சியங்களை அச்சுறுத்தும் ஒரு நீதிமன்ற முறைமையைத் தான் இது எடுத்துக்காட்டுகின்றது. ஆணைக்குழுவானது இந்த நாட்டின் ஐக்கியத்துக்கு ஆபத்தான முன்னுதாரணத்தை எடுக்காட்டியுள்ளது - என்றார். (ப-22)



# விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவால் எம்மைப் பயமுறுத்தி அடக்க முடியாது

## மு.கா. தலைவர் ஹக்கீம் தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.25

விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவை அமைத்து எம்மைப் பயமுறுத்தி அடக்க முடியாது. முடிந்தால் அதனை செய்து பாருங்கள் என சவால்விட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், அன்று ஜே.ஆர். செய்த நடவடிக்கையால் இறுதியில் ரணில் விக்கிரமசிங்க மக்களிடம் மன்னிப்பு கோரினார் எனவும் சுட்டிக்காட்டினார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அரசியல் பழிவாங்கல் தொடர்பாக ஆராய நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பான விவாதத்தில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஆட்சிக்கு வரும் அரசுகளால் அரசியல் பழிவாங்கல்கள் இரண்டு தரப்பினராலும் மேற்கொள்ளப்பட்டமை வரலாற்றில் இருந்து தெரிய வருகின்றது. இது புதிய விடயமல்ல. ஆனால், அரசியல் பழிவாங்கலுக்கு ஆளாகும் அரச அதிகாரிகள் தொடர்பில் எவரும் எதுவும் கதைப்பதில்லை. இவ்வாறு பாதிக்கப்பட்ட பல அரச அதிகாரிகள் இருக்கின்றனர். அத்துடன் விசேட ஜனாதிபத் ஆணைக்குழு அமைப்பதன் தேவை என்ன?. இந்த நடவடிக்கை சட்டமா அதிபர் திணைக்களத்தின் அதிகாரிகள் பலரை இக்கட்டான நிலைக்கு ஆளாக்கி இருக்கின்றது. சட்டமா அதிபரே இது தொடர்பாக தனது எதிர்ப்பைத் தெரிவித்திருக்கின்றார். இப்பழிவாங்கல் நடவடிக்கை வழக்கு விசாரணை செய்யும் நீதிபதிகளையும் சவாலுக்கு உட்படுத்தி இருக்கின்றது. அதனால் அரசின் இந்த நடவடிக்கை நாட்டின் சட்டத்தின் ஆட்சிக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. எம்மைப் பயமுறுத்தி அடக்க முடியாது. முடிந்தால் செய்து பாருங்கள். அன்று ஜே.ஆர். செய்த நடவடிக்கையால் இறுதியில் ரணில் விக்கிரமசிங்க மக்களிடம் மன்னிப்புக் கோரினார். அவ்வாறான பயங்கரமான விடயங்களை மேற்கொள்ளத் தேவையில்லை. அதற்காக நாங்கள் பயப்படவும் மாட்டோம் என்றார். (ப-22)

# நாட்டில் தமிழர்களின் இன்றைய வாழ்க்கைநிலை அரசியல் பழிவாங்கலுக்கு சிறந்த உதாரணம்

## கோவிந்தன் கருணாகரம் எம்.பி தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.25


இந்த நாட்டில் தமிழர்கள் எப்படி வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள் என்பது அரசியல் பழிவாங்கலுக்குச் சிறந்த உதாரணம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பான விவாதத்தில் இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்:

எமது அரசின் தலைவர்கள் தம் உதட்டளவில் பேசும் பௌத்த தர்மம் மற்றும் தேசாபிமானம் என்பவை தம் உள்ளத்திலிருந்து வெளிவராததன் காரணமாகவே இந்த நாட்டின் உயரிய சபையில் இன்று அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பில் விவாதம் நடைபெறுகின்றது. ஆட்சி மாறும்போது அமைச்சர்கள் மாற்றம் பெறுவார்கள். அமைச்சின் செயலாளர்கள் மாற்றம் பெறுவார்கள். அத்தனை அரச இயந்திரங்களும் அரசுக்குச் சாதகமாக மாறும். கடந்த ஆட்சியில் உயர் பதவிகளில் இருந்தவர்கள் பந்தாடப்படுவார்கள். இது எமது நாட்டில் ஆட்சி மாறும் போது இடம்பெறும் சாதாரண காட்சி. தமது இனத்துக்குள்ளே, தமது மதத்துக்குள்ளே மாறி மாறி ஆட்சியமைக்கும் அரசியல் தலைவர்களால் அரசியல் பழிவாங்கல்கள் ஏற்படுகின்றன என்றால் அர்த்தபுஷ்டியுள்ள அதிகாரப்பகிர்வுக்காகவும் புறக்கணிப்புக்கு எதிராகவும், சமத்துவத்துக்காகவும் போராடும் எமது தமிழ் மக்கள் எத்தனை விதத்தில் பழிவாங்கப்பட்டிருப்பார்கள். இத்தகைய பழிவாங்கல்களுக்கு நியாயம் கேட்க முடியாத நாதியற்ற சமூகமாக எமது மக்கள் எவ்வளவு காலம் வாழ்ந்திருப்பார்கள்? ஆட்சியாளர்களுக்குச் சார்பாக அரச சட்டங்கள் வளைந்து கொடுக்கின்றன. தாயை இழந்து தனியாக உறவினருடன் வாழும் தன் மகளினதும் மகனினதும் வாழ்வைக் காப்பாற்றுவதற்காக ஆனந்த சுதாகரனுக்கு பொது மன்னிப்பு வழங்குங்கள் என்று முழந்தாளில் நிற்காத குறையாக அகிலமே வேண்டியும் கூட ஆட்சியாளரின் அகிம்சைக் கண் திறக்கவில்லை.

எத்தனை அரசியல் கைதிகள் சிறைகளில் வாடுகின்றனர். இவர்கள் செய்த குற்றம் என்ன? தன் இனத்தை தன் மொழியை தன் மண்ணை நேசித்ததா குற்றம்? இதுபோன்ற அரசியல் பழிவாங்கல் இராணுவ ஆட்சி நடக்கும் நாட்டில் கூட நடந்ததாக அண்மைய வரலாற்றுப் பதிவுகள் இல்லை- என்றார். (ப-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## பளிச்சிடும் பற்களுக்கு...

ஒருவரின் அழகை அதிகரித்துக் காட்டுவது சிரிப்புத்தான். இப்படிச் சிரிக்கும்போது பற்கள் மஞ்சள் நிறமாக இருந்தால், எமது சுத்தம் கேள்விக் குறியாகிவிடும்.

ஆரோக்கியமற்ற வாயையும், பற்களையும் வைத்துக்கொண்டு வெளியில் செல்லவோ, வெளிப்படையாகப் பேசவோ கூச்சப்படுபவர்கள் இருக்கின்றனர்.

முத்துப்போன்ற பற்கள் முகத்தை அழகாக்கும். பல் போனால் சொல் போச்சு என ஆதிகாலம் முதலே பேசி வருகிறார்கள்.

பற்கள் பாதிக்கப்பட்டால் பல்வேறு நோய்களும் எம்மை எட்டிப் பார்க்கும். வாய் துர்நாற்றம் வயிற்றில் உள்ள பிரச்சினைகள், உணவுக்குழாயில் உள்ள பிரச்சினைகளைக் காட்டிக்கொடுத்து விடும்.

வாய் துர்நாற்றம் ஏற்படுவதற்கு பல்வேறு காரணங்கள் உள்ளன. உணவுத் துகள்கள் பல் இடுக்குகளில் மாட்டிக்கொண்டு வாய் கொப்பளிக்கும்போதோ அல்லது பல் துலக்கும்போதோ வெளியேறவில்லை என்றால் அழுகிப்போய் துர்நாற்றம் வீசலாம். தொண்டையில் நோய்த் தொற்று ஏற்பட்டு துர்நாற்றம் வீசலாம். ஈறு நோய், சொத்தைப் பல், வயிறு தொடர்பான பிரச்னைகளால் துர்நாற்றம் வீசலாம். இதுபோன்று இன்னும் வேறு பல காரணங்கள் உள்ளன. வாயில் துர்நாற்றம் எதனால் வீசுகிறது என்பதைக் கண்டறிந்து அதற்கு சிகிச்சை எடுப்பது மட்டுமே இந்த பிரச்னைக்குத் தீர்வு.

ஒரு நாளைக்கு காலை மற்றும் இரவு என இருமுறை பல் துலக்குவது மிகவும் அவசியம். பற்கூச்சம் போன்ற பிரச்னை உள்ளவர்கள் மென்மையான பற்தூரிகைகளையும், மற்றவர்கள் நடுத்தர வகைத் தூரிகைகளையும் மட்டுமே பயன்படுத்தவேண்டும். பல் வரிசையின் எல்லாப் பகுதிகளுக்கும் சென்று சுத்தம் செய்ய வசதியாக கைப்பிடி நன்றாக சௌகரியமாக இருக்க வேண்டும். அது மாதிரியான தூரிகைகளை மட்டுமே வாங்க வேண்டும். பல் துலக்கிய பிறகு ஈறுகளை மென்மையாக அழுத்தி மசாஜ் செய்ய வேண்டும். நாக்கில் உள்ள பசையை அகற்ற வேண்டும். 60 முதல் 90 நாள்களுக்கு ஒரு முறை தூரிகையை மாற்றுவது நல்லது.

பொதுவாகவே பற்களின் முரசுகளில் ஒரு நிறமற்ற படலமாக பக்டீரியாக்கள் படிகின்றன. பற்சூத்தை மற்றும் பற்சுற்றி நோய்களின் ஆரம்ப நிலையில் ஏற்படும் இத்தகைய படலம் "பிளாக்" என்று அழைக்கப்படுகிறது. இந்தப்படலமானது ஆரம்பத்தில் இலகுவாக விரல் நகம் கொண்டு அகற்றப்படக்கூடியளவு இளகலாகக் காணப்படும். இது அகற்றப்படவில்லை என்றால் 48 மணி நேரங்களுக்குள் கடினமடைந்துவிடும். மேலும் பத்து நாள்கள் சென்ற பின்னர் மேலும் தீவிரமடைந்து அகற்ற முடியாததாகவே ஆகிவிடும். அல்லது தாத்தார் எனப்படும் மஞ்சள் நிறமுடைய நிலையை அடைந்துவிடும். எனவேதான் நாளாந்த பல் மற்றும் வாய் சுகாதாரம் அவசியம். ஒழுங்காக பல் துலக்காதவிடத்து இத்தகைய சிக்கல்கள் பற்சிதைவு, பற்சூத்தை மற்றும் பற்சுற்றி நோய்களைத் தோற்றுவிக்கும்.

ஆக, பற்கள் எனப்படுபவை எம் மனதினதும், தோற்றத்தினதும் வெளிப்பாட்டின் ஒரு பகுதி. அதைப் பேணிப் பாதுகாப்பதுதான் எம் அனைவருக்கும் மகிமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## பொறுப்பிலிருந்து அரசு நழுவ முடியாது

கொரோனாத் தொற்று நிலைமைகளில் இருந்து மீண்டு வழமைக்குத் திரும்பிக் கொண்டிருந்த நாடு, மீளவும் நெருக்கடிகளை எதிர் கொள்ள ஆரம்பித்திருக்கின்றது. கடந்த சில நாள்களாக நாளாந்தம் இனங்காணப்படும் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை எகிற ஆரம்பித்திருக்கின்றது.

புத்தாண்டு தினத்துக்கு முன்னதாகவே கொரோனாத் தொற்று நிலைமை தொடர்பாகப் பல எச்சரிக்கைகள் பல மட்டங்களில் இருந்தும் வெளியாகியிருந்தன. புத்தாண்டு காலப்பகுதியில் கட்டுப்பாடுகளை இறுக்காவிட்டால், பொதுமக்கள் சுகாதார நடைமுறைகளைச் சரியாகக் கடைப்பிடிக்காவிட்டால் விபரீத விளைவுகள் தோன்றலாம் என்று எதிர்வுகூறப்பட்டிருந்தது. அந்த எதிர்வுகூறல்கள் இப்போது நிஜமாகத் தொடங்கியிருக்கின்றன.

பொதுமக்கள் சுகாதார நடைமுறைகளைச் சரியாகக் கடைப்பிடிக்காமையே இந்த நிலைமைக்குக் காரணம் என்று அரசு மட்டத்தில் காரணம் கற்பிக்கப்படுகின்றது. அதில் உண்மை இருந்தாலும், முழுப் பொறுப்பையும் அரசு மக்கள் தலையில் கட்டிவிட்டுத் தப்பிவிட முடியாது. கொரோனா வைரஸ் தொற்றுக் கட்டுப்பாட்டு விடயத்தில் அரசின் செயற்பாடுகள் திருப்தி தரும் வகையில் இல்லை. பூசி மெழுகுவது போன்றே அரசின் செயற்பாடுகள் உள்ளன என்பதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

நாட்டில் மக்கள் நூறு வீதம் சுகாதார விதிமுறைகளைக் கடைப்பிடிப்பார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. அதற்குக் கடந்தகால சம்பவங்கள் அனுபவங்களாக உள்ளன. தொற்று நிலைமையின் வீரியத்தைப் பொறுத்து, பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியவர்கள் அதிகாரிகளே. மக்கள் சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும், பொறுப்புணர்ந்து செயற்பட வேண்டும் என்று அறிவித்துவிட்டு வளாவிருக்க முடியாது.

அயல்நாடான இந்தியாவின் தற்போதைய நிலைமை இலங்கைக்கு ஒரு அபாய சமிக்ஞை. பொதுமக்கள் பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டும் என்ற அறிவிப்புடன், கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டதன் விளைவுகள் இப்போது அங்கு வெளிக்கிளம்பியுள்ளன. புத்தாண்டுக் கொண்டாட்டங்களுக்குப் பின்னர் அங்கு நாளாந்தம் லட்சக்கணக்கானோர் கொரோனாத் தொற்றுடன் இனங்காணப்பட்டு வருகின்றனர். உயிரிழப்புகள் ஆயிரங்களைத் தாண்டுகின்றன. மக்கள் மருத்துவத்துக்காக அல்லாடி வீதிகளில் திரிகின்றனர்.

நாட்டின் தற்போதைய பொருளாதாரச் சூழ்நிலையில் நாட்டை முடக்குவது அரசுக்குச் சாத்தியமற்ற விடயமாக இருக்கலாம். அதற்காக தொற்றின் வீரியத்தை மறைத்து, துறைசார் நிபுணர்களின் அறிவுறுத்தல்களை மறுத்து, நாட்டையும், மக்களையும் பெரும் ஆபத்தில் தள்ளிவிடக்கூடாது. மக்களுக்குப் பாதுகாப்பளிக்கும் தனது கடமையில் இருந்து அரசு நழுவிட முடியாது.

தற்போது திரிபடைந்த கொவிட் வைரஸ் நாட்டில் பரவுகின்றது என்றும், அதன் பரவல் வேகம், முன்னரை விட மிக அதிகம் என்றும் மருத்துவர் நீலிகா மலவிகே குறிப்பிட்டிருக்கிறார். இந்த திரிபடைந்த கொரோனா வைரஸ் காற்றிலும் பரவும் என்று துறைசார் நிபுணர்கள் எச்சரித்திருக்கின்றனர். இது முன்னரை விடவும் ஆபத்தான காலகட்டம். மக்கள் பொறுப்புணர்ந்து செயற்பட வேண்டும். அரசும் பொறுப்புணர்ந்து செயற்பட வேண்டும்.

**வெள்ளம் வரும் முன்னர் அணை கட்டுவதே சிறந்தது.**



## பண்டிகைக்கால நிகழ்வுகளை நிறுத்துமாறு அமைச்சு பணிப்பு

**கொழும்பு, ஏப். 25**

**தமிழ்-சிங்கள புத்தாண்டை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பண்டிகைக்கால விழாக்கள் மற்றும் விளையாட்டுப் போட்டிகள் ஆகியவற்றை நிறுத்துமாறு சுகாதார அமைச்சு கேட்டுக்கொண்டுள்ளது.**

நாட்டில் தற்போது கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றமையால்; கூட்டமாகக் கூடுவதைத் தவிர்க்குமாறு சுகாதார அமைச்சு பொதுமக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளது.

சித்திரைப் புத்தாண்டுக் காலத்தின்போது மக்கள் கடைத் தெருக்களில் மிகவும் நெருக்கமாக இருந்தமை, உல்லாசப் பயணங்களை மேற்கொண்டமை உள்ளிட்ட காரணங்களால் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. ஆகவே, மக்கள் கூட்டம் கூட்டமாக கூடுவதைத் தவிர்க்குமாறும் சுகாதார அமைச்சு கேட்டுக்கொண்டுள்ளது.

மேலும், யாத்திரைகள், உல்லாசப் பயணங்கள் என்பவற்றையும் தவிர்த்துக்கொள்வதுடன், அத்தியாவசியத் தேவைகளுக்காக மாத்திரம் வீடுகளிலிருந்து வெளியேறுமாறு சுகாதார அமைச்சு பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (த-இ)



## தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறினால் கடும் நடவடிக்கை

கொழும்பு, ஏப். 25

தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறுபவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கைஎடுக்கப்படும்என்றுபொலிஸ் ஊடகப்பேச்சாளரும், பிரதி பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண நேற்று தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

2020ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 15 ஆம் திகதி சுகாதார அமைச்சால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் கட்டாயம் முகக்கவசம் அணிய வேண்டும். பொது வெளிக்குவரும்போதும், பொதுப்போக்குவரத்தை மேற்கொள்ளும் போதும் முகக்க வசம் அணிந்திருக்க வேண்டியது கட்டாயமாகும்.

இந்த நடைமுறையை மீறுபவர்களுக்கு அபராதமும் சிறைத் தண்டனையும் விதிக்கமுடியும். பொது மக்களின் நடத்தை தொடர்பில் பொலிஸார் அவதானமாகவே இருக்கின்றனர். எனவே, முகக்கவசம் அணியாவிட்டாலும், சமூக இடைவெளியை பின்பற்றாவிட்டாலும் உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (த.44)

## பாடசாலைகளை இழுத்து மூடுங்கள்!

### அதிபர்கள் சங்கம் வலியுறுத்து

கொழும்பு, ஏப். 25

கொரோனா அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதால் பாடசாலைகளை உடனடியாக மூடுமாறு இலங்கை அதிபர்கள் சங்கம் கல்வி அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் சங்கத்தின் செயலாளர் பியசிரி பெர்னாண்டோ தெரிவித்ததாவது:

பாடசாலைகளை மூடாமல் விட்டால் அது நாட்டு மக்களுக்கு தீங்கு விளைவிக்கும் சூழ்நிலைக்கு வழிவகுக்கும். புத்தாண்டு காலத்தில் நடந்த பல கலாசார விழாக்கள், கொரோனாத் தொற்று அதிகரிக்க வழிவகுத்துள்ளன.

பொதுமக்கள் சுகாதார வழிகாட்டுதல்களை பொறுப்பான முறையில் பின்பற்றத் தவறிவிட்டனர்.

மருத்துவமனை வளங்களின் பற்றாக்குறை காரணமாக பிள்ளகளை பாடசாலைகளுக்கு அனுப்புவதில் பெற்றோர்கள் தயங்கக்கூடும்.

கல்வி அமைச்சு வெளியிட்ட சுற்றறிக்கையின்படி பாடசாலைகள் மீண்டும் இயங்கத் தொடங்கினாலும், மாணவர்களின் வருகை குறைவாகவே காணப்படும் - என்றார். (த-இ)

## திருகோணமலைக்கு வருவதை வெளிமாவட்ட மக்கள் தவிர்க்கவும்

### கிழக்கு ஆளுநர் தெரிவிப்பு

திருகோணமலை,ஏப்.25



கொரோனாத் தொற்று அதிகரித்துக் காணப்படும் நிலையில், அவசர தேவைகள் தவிர, திருகோணமலை மாவட்டத்துக்கு வருவதை பொதுமக்கள் தவிர்க்கவும் என்று கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் தெரிவித்துள்ளார்.

வீதித் தடைகளைப் போட்டு பிற மாவட்டத்தவர்களது வருகையைத் தடுக்குமாறும், தனிமைப்படுத்தப்பட்ட நிலையில் சட்டத்தை மீறும் எவருக்கும் எதிராக சட்டத்தை கடுமையாக அமுல்படுத்துமாறும் ஆளுநர் பாதுகாப்பு படையினருக்கு பணிப்புரை விடுத்துள்ளார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செலிங்கோ லை:ப்

## இலக்கு நோக்கி செல்லும்
## உங்களுக்கு உறுதுணையாய் என்றுமே நாமிருப்போம்!



உங்களின் வாழ்வில் இலக்குகள் மற்றும் கனவுகளை நோக்கிச் செல்ல ஒருபோதும் தயங்க வேண்டாம். ஏனெனில் நாம், உங்கள் வாழ்வின் ஒவ்வொரு சவால் மிகு தருணத்திலும் உங்களின் நிழல் போல உடனிருந்து வலுவூட்டுவோம். 2020 ஆண்டில், ரூ.12 பில்லியன் வாடிக்கையாளர் அனுகூலங்கள் மற்றும் ரூ.100 பில்லியனுக்கும் அதிக ஆயுள் நிதியினையும் கொண்டு தொடர்ச்சியாக 17வது வருடமாகவும் இலங்கையின் காப்புறுதித் துறையில் முதல்வனாகவும், இலங்கை மக்களின் நன்மதிப்பினையும் நம்பிக்கையினையும் வென்ற ஆயுள் காப்புறுதி நிறுவனமாகவும், நாம் எப்போதும் தயார் நிலையில் உங்களின் வெற்றிப் பாதையில் பக்கபலமாயிருப்போம்.

நீங்கள் உங்கள் இலக்கு நோக்கிப் பயணியுங்கள் - நாம் இடர்களை எதிர்கொள்வோம்!

செலிங்கோ லை:ப் காப்புறுதி நிறுவனத்தினால் ஒழுங்குபடுத்தப்பட்டது. (PB5183)

CEYLINCO LIFE®

வாழ்க்கைக்கான நிரந்தர உறவு™

செலிங்கோ லை:ப் காப்புறுதி நிறுவனம், செலிங்கோ லை:ப் டவர், 106, ஹெவ்லொக் வீதி, கொழும்பு 5. கம்பனி பதிவு இல. PB5183 தொ.இல.: (011) 2461461 ஈமெயில்: service@ceylife.lk இணையம்: www.ceylincolife.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

பிறப்பு 25 . 03 . 1956

இறப்பு 28 . 03 . 2021



அமரர்
திரு.இராமநாதன் லோகநாதன்
Management Director
V V Ramanathan &Company (Pvt) Ltd

மருமகன் - விதுர்சன்



14ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி மங்கையற்கரசி கந்தசாமி
பிறப்பு 06.03.1939
இறப்பு 30.04.2007
திதி: 25.04.2021

காரைநகர் பொன்னாவளை களபூமி
764, K.K.S.Road, யாழ்ப்பாணம்.
11/2 Charlement வீதி, வெள்ளவத்தை
29, Douglas Aveneue,Wenbley
U.K.HAO 4DT
திருமதி மங்கையற்கரசி கந்தசாமி
(முன்னாள் வட. கிழக்கு மாகாண நீர்ப்பாசன பணிப்பாளரின் மனைவி)

அன்னாரை இழந்து தவிக்கும்
கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.


## வடக்கில் தடுப்பூசி: மே 3 இல் ஆரம்பம்

கொரோனாத் தடுப்பூசியின் இரண்டாவது 'டோஸ்' வடக்கு மாகாணத்தில் எதிர்வரும் 3ஆம் திகதி முதல் போடப்படவுள்ளது என வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். (ஒ.5)

# தமிழர் தரப்பின் ஐக்கிய முயற்சிக்கு கைகொடுக்கிறது ஈ.பி.ஆர்.எல்.எவ்.

*ரெலோவின் நிலைப்பாட்டை வரவேற்று சுரேஸ் அறிக்கை*

யாழ்ப்பாணம், ஏப். 25

தமிழர் தரப்புக்கள் ஒன்றிணைய வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான ரெலோ விடுத்த வேண்டுகோளை ஈ.பி.ஆர்.எல்.எவ். வரவேற்றுள்ளது. இது தொடர்பில் அந்தக் கட்சியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் இணைப் பேச்சாளருமான க.சுரேஸ் பிறேமச்சந்திரன் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள தாவது;

ஈ.பி.ஆர்.எல்.எவ்., ஈ.என்.டி.எல்.எப். ஆகியவை இணைந்து இணைந்த வடக்கு கிழக்கு மாகாண சபையை உருவாக்கினோம். 1990ஆம் ஆண்டு மாகாணசபை கலைக்கப்பட்டு 2009 ஆம் ஆண்டுவரை போர் நீடித்தது. தமிழீழ விடுதலைப் புலிகள் மௌனிக்கப்பட, இலங்கை அரசு தமிழ் மக்களுக்குக் கிடைத்த அற்ப சொற்ப சலுகையான மாகாணசபை உரிமைகளைப் பறிக்கின்ற அதேசமயம், புதிய அரசமைப்பு ஊடாக மாகாணசபை முறைமையை இல்லாமல் செய்ய முயல்வதாக ஒரு கருத்தும் நிலவுகின்றது.

**கோட்டை விட்டுவிடக் கூடாது**

மாகாணசபை முறைமை இந்திய - இலங்கை ஒப்பந்தத்தினூடாக கொண்டு வரப்பட்டது என்ற அடிப்படையில், 13ஆவது திருத்தம் முழுமையாக நிறைவேற்றப்பட வேண்டும் என்றும் உடனடியாக மாகாணசபைத் தேர்தல்கள் நடத்தப்படவேண்டும் என்பதாலும் இந்தியா இலங்கைக்கு தொடர்ந்தும் அழுத்தங்களைப் பிரயோகித்து வருகின்றது. இந்தச் சூழ்நிலையில், மாகாணசபை முறைமையை ஏற்றுக்கொள்ளாத தமிழ் பேசும் மக்கள் மத்தியில் இருக்கக்கூடிய பல தரப்புகள் கையில் இருப்பவற்றைக் கோட்டை விட்டுவிடக்கூடாது என்ற அடிப்படையில், மாகாணசபையைக் காப்பாற்ற முற்படுவது வரவேற்கத்தக்கது.

**நிலைப்பாடு மாற்றம்**

கடந்த காலத்தில் 13ஆவது திருத்தம் என்பதே தமிழ்மக்களின் அபிலாசைகளைத் தீர்ப்பதற்குப் போதுமானதல்ல. அதனை தும்புத்தடியால்கூட தொடுவதற்கு நாங்கள் தயாரில்லை என்ற அடிப்படையில்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனது கருத்துக்கள் அமைந்திருந்தன. அதே கருத்தை ரெலோ கொண்டிருந்தாலும் கூட, இன்று தனது நிலையை மாற்றிக் கொண்டதானது கூரிய அவதானத்துக்குரியது. ஆனால் இது வெறும் ஊடக அறிக்கையையும் தாண்டி இதற்கு செயல் வடிவம் கொடுக்க வேண்டிய தேவையும் இருக்கின்றது. அதற்கான முயற்சிகளை எடுத்து, தமிழ்த் தேசியப் பரப்பிலுள்ள அனைத்துக் கட்சிகளுடனும் பேசி அடுத்த கட்டத்துக்கு நகர்த்த வேண்டிய கடமைகளை ரெலோ தரப்பினர் செய்வார்கள் என்று எதிர்பார்க்கின்றோம்.

**தமிழ் அரசின் எதேச்சாதிகாரம்**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது தமிழ் அரசுக் கட்சியின் மேலாதிக்கம் காரணமாகவும் தன்னிச்சையான செயற்பாட்டின் காரணமாகவும் கூட்டமைப்புக்கென புரிந்துணர்வு ஒப்பந்தங்களோ அல்லது ஒரு யாப்போ இல்லாமல் ஒழுங்கற்ற போக்கைக் கைக்கொண்டு செயற்பட்டது. தமிழ் அரசுக் கட்சியினர் அங்கத்துவக் கட்சிகளை ஒதுக்கி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒற்றுமைக்கே குந்தகமாக விளங்கினர். தனது தன்னிச்சையான முடிவுகளை அங்கத்துவக் கட்சிகள் ஏற்க வேண்டும் என்று நிர்ப்பந்தித்தனர். இவர்களது தன்னிச்சையான முடிவுகள் அனைத்தும் தமிழ் மக்களின் அபிலாசைகளுக்கும் எதிர்பார்ப்புகளுக்கும் எதிராகவே இருந்தன.

**ரெலோவும் உடந்தை**

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் இத்தகைய மக்கள் விரோத நடவடிக்கைகளுக்கு கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியாகிய நீங்களும் உறுதுணையாக இருந்து வந்திருக்கிறீர்கள். இவ்வாறான ஒரு சூழ்நிலையில், கூட்டமைப் புக்குள் இருக்கக் கூடிய கட்சிகளுடனும் தமிழ்த் தேசியப் பரப்பிலுள்ள ஏனைய கட்சிகளுடனும் பேசி அவற்றை ஒருங்கிணைப்பதனூடாகவே நீங்கள் கூறிய மாகாணசபை முறைமையைக் காப்பாற்றிக்கொள்ள முடியும் என்றுள்ளது. (ஒ.5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கனினி தட்டெழுத்தாளர் (பெண்) தேவை

உரும்பிராய் கிட்ஸ் பார்க் O/L தகைமையுடை- யவர் மற்றும் Computer தகைமையுடையவர் விண்ணப்பிக்கவும்.

**இறுதித் திகதி: 30.04.2021**

முருகன் வீதி,
உரும்பிராய்.
**077 656 5258**

## நாகபூஷணி திருமண சேவை

### மணமகள் தேவை

1) 1989, 15 பாவம், சூரி/செவ் Network Engineer க்கும்
2) 1992, 30 பாவம் செவ்வாயற்ற BSC Civil Engineer க்கும்
3) 1991, 48 பாவம் 7 இல் செவ்வாய் Doctor க்கும்
4) 1977 40 பாவம் செவ்வாயற்ற BSC Civil Engineer க்கும்
5) 1985, 15 பாவம் செவ்வாற்ற Lawyer க்கும்
மணமகள்கள் எதிர்பார்க்கப்படுகிறது.

### மணமகன் தேவை

1) 1992, 25 பாவம், 12இல் செவ்வாய் Banker க்கும்
2) 1994, 38 பாவம் செவ்வாயற்ற BSC IT, IT officer க்கும்
3) 1995, 50 பாவம் 1 இல் செவ்வாய் BA,AAT,ACCA part மணமகளுக்கும்
4) 1994, 30 பாவம் செவ்வாயற்ற Doctor க்கும்
மணமகன்கள் எதிர்பார்க்கப்படுகிறது.

அரச, தனியார் துறை உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் ஜாதங்கள் மிகப் பொருத்தமாக உடன் தரப்படும்.

**071 9999 306, 021 222 9306, 077 138 7596**
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

## ஆலய வருடாந்த விழா

**முல்லைத்தீவு மாவட்டம் அம்பகாமம் அருள்மிகு மம்மில் பிள்ளையார் ஆலய வருடாந்த சித்திராப் பௌர்ணமி விழா நாளை 26.04.2021 திங்கட்கிழமை 2021**

மேற்படி உற்சவமானது நாளை (26.04.2021) திங்கட்கிழமை காலை 5.00 மணி தொடக்கம் எம்பெருமானுக்கு விஷேட அபிஷேகம் ஆராதனைகளுடன் வழமை போன்று உற்சவம் ஆலயத்தில் இடம்பெறும்.

குறிப்பு – எம் பெருமானின் தரிசனத்தில் கலந்து கொள்ளும் பக்த அடியார்கள் நாட்டில் நிலவும் கொரோனா சுகாதார நடைமுறைகளுக்கு அமைவாககலந்து கொள்ளுமாறு ஆலய பரிபால- சபையினர் கேட்டுக் கொள்கின்றனர்.

ஆலய பரிபாலன சபையினர்,
அருள்மிகு மம்மில் பிள்ளையார் ஆலயம் அம்பகாமம்,
முல்லைத்தீவு மாவட்டம்

## யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் பிரபல்ய வியாபார நிறுவனத்தில் பணிநிலை வெற்றிடம்


1. **பொதி செய்தல்** (ஆண்)-வயது 22-35
(இயந்திரம் மூலம் பொதி)
2. **விற்பனை உதவியாளர்:** தங்கி நின்று பணி
(உணவு, தங்குமிடம் இலவசம்)

திங்கள் முதல் வெள்ளி வரை (மு.ப 10.00-பி.ப 3.00 மணிவரை) தொலைபேசியில் அழைப்பை ஏற்படுத்தி நேரில் வரவும்.

**021 221 6889, 077 477 3481, 077 623 1295**

## மரண அறிவித்தல்

தோற்றம் 05 . 06 . 1955



மறைவு 24 . 04 . 2021

### கதிரவேலு சிவராசா

**(காங்கேசன்துறை சீமெந்து கூட்டுத்தாபன முன்னாள் பணியாளர் - சின்னன்னை)**

கிளானை கொல்லங்கலட்டியை பிறப்பிடமாகவும் சுன்னாகம் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சிவராசா நேற்று (24.04. 2021) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு - பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை- இலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும், இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், நிசாந்தினி (QS), யெறுசாந்தினி (பிரதேச செயலகம்-உடுவில்), மதுரா (Virtusa (Pvt) Ltd- Colombo) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுயிந்தனின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.04.2021) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக றொட்டியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுன்னாகம் கிழக்கு, சுன்னாகம்.
**076 736 3371**

தகவல்:
குடும்பத்தினர்.

## கடற்புலிகளின் கருவிகள் மீட்பு

யாழ்ப்பாணம், ஏப். 25

பருத்தித்துறை பொலிகண்டியில் கடற்புலிகளின் தாக்குதல் கருவிகள் சில நேற்று மீட்கப்பட்டுள்ளன. இராணுவப் புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து மேற்படி கருவிகள் மீட்கப்பட்டன என்று தெரிவிக்கப் படுகின்றது.

போர்க் காலத்தில் கடற்புலிகள் தாக்குதலுக்கு பயன்படுத்தும் நோக்கில் பரல்களில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையிலேயே, மேற்படி தாக்குதல் கருவிகள் மீட்கப்பட்டன. பலாலி இராணுவ புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து குறித்த பகுதியில் இராணுவத்தினர் தேடுதலில் ஈடுபட்டபோதே குறித்த ஆயுதங்கள் மீட்கப்பட்டன என்று தெரிவிக்கப்படுகின்றது. (ம-20,26)








## மரண அறிவித்தல்

பிறப்பு 25 . 10 . 1947



இறப்பு 24 . 04 . 2021

### திரு. பரமநாதர் தர்மராஜா

நாவற்குழி கோவிலாகண்டியைப் பிறப்பிடமாகவும் முருகேசர் வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும், தற்போது கோகுலவீதி கோண்டாவிலை வதிவிடமாகவும் கொண்ட பரமநாதர் தர்மராஜா அவர்கள் 24.04.2021 சனிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலம் சென்ற பரமநாதர் செல்லம்மா தம்பதியினரின் அன்பு மகனும், காலம் சென்ற வன்னியசிங்கம் மங்கையற்கரசி அவர்களின் அன்பு மருமகனும், காலம் சென்ற சுவர்ணராணி அவர்களின் அன்புக் கணவரும், நிருபன், நிரஜா, நித்ஜா ஆகியோரின் அன்புத்தந்தையும், சுபசுரியரினின் அன்பு மாமனாரும், காலம் சென்ற செல்வராசா , பாலசுப்பிரமணியம், அன்னபூரணம் ஆகியோரின் அன்பு சகோதரரும், கிருஷ்ணகுலசிங்கம், காலம் சென்றவர்களான இந்திராணி, தவபாலசிங்கம், சிவானந்தசிங்கம், தேவராணி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 25.04.2021 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் இல.28, கோகுலவீதி கோண்டாவில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு
**077 1435795, 076 4344254**

தகவல்
குடும்பத்தினர்

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 07 . 01 . 1939



மறைவு 26 . 03 . 2021

### அமரர் சின்னையா ஞானசேகரம்

**(களஞ்சிய காப்பாளர், இலங்கை கனிப்பொருள் மணல் கூட்டுத்தாபனம்-புல்மோட்டை)**

*தனக்காய் சுழன்ற பூமியிலே*
*அன்றோ எமக்காய் சுழன்ற சாமி – நீங்கள்*
*காட்டி வைத்த பாதை தன்னில்*
*கடல்கடந்தும் சென்று விட்டோம்*
*நேர்மையுடன் உம் கடமைகளை*
*நேர்த்தியுடன் செய்து வென்ற – உங்கள்*
*ஆத்மா விண்ணுலகிலும் அமைதிபெற்று*
*வாழ்ந்திருக்க இறைஞ்சுகின்றோம்.*

அன்னாரின் வீட்டுகிருத்திய நிகழ்வுகள் இன்று (25.04.2021) ஞாயிற்றுக் கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற விருப்பதால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வேதவனப்பிள்ளையார் கோவிலடி,
கல்வயல்,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்.
**077 984 8669**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## கந்தசாமி இரத்தினம்

கொக்குவில் மேற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி இரத்தினம் நேற்று (24.04.2021) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம் பொன்னம்மா ஆகியோரின் அன்பு மகளும் காலஞ்சென்ற ஆறுமுகம் இராசம்மா (அராலி) ஆகியோரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கந்தசாமி (இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான இராசையா, குணரத்தினம், தங்கம்மா, அன்னம்மா, சீவரத்தினம், இராசரத்தினம் மற்றும் ஞானரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சர்வாம்பிகைதேவி (கனடா), கமலேஸ்வரன் (லண்டன்), சிவனேஸ்வரன் (கொழும்பு / யாழ்ப்பாணம்), நிர்மலாதேவி (சுவிஸ்), லலிதாதேவி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற நடராஜா மற்றும் ஜெயலட்சுமி, பத்மலோஷனி, விஜயசுந்தரம், மோகனதாஸ் ஆகியோரின் அன்பு மாமியும், கோபிநாத், ஆதி, பபின், சதுர்ஷன், சாயினி, நிதுஷன், சரணியன், கிரிஷன், கேசவி, ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சார்விக், தீரன் ஆகியோரின் அன்பு பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.04.2021) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

**மணியர்பதி வீதி,**
**கொக்குவில் மேற்கு,**
**கொக்குவில்**

**தகவல்:**
**க. சிவனேஸ்வரன் (மகன்)**
**077 768 4407**

# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 04 . 09 . 1942



இறப்பு 17 . 04 . 2019

## தியாகராசா கனகசபாபதி

### (இ.போ.ச ஓய்வுபெற்ற லிகிதர்)

ஆண்டு இரண்டு மறைந்துவிட்டது அப்பா!
அகலுமா உங்கள் பிரிவின் சோகம்
மறையுமா உங்கள் நினைவின் பாசம்
எங்களை நிர்க்கதியாய் அநாதையாய்ப் பரிதவிக்க
விட்டு விட்டு எங்கு சென்றீர்கள்
காலங்கள் ஆயிரம் போனாலும்
மறக்க முடியுமா உங்கள் நினைவுகளை
எங்கள் உயிர் உள்ளவரை உங்கள்
நினைவுகள் தொடரும்
ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

**130, லவ்லேன்,**
**உடுவில்.**

**குடும்பத்தினர்**

# மரண அறிவித்தல்

## கிருஷ்ணபிள்ளை அன்னலஷ்மி



தோற்றம் 27.12.1931

மறைவு 23.04.2021

கந்தரோடையைப் பிறப்பிடமாகவும் நல்லூர் சங்கிலியன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட "குஞ்சியம்மா" என எல்லோராலும் அன்பாக அழைக்கப்பட்ட கிருஷ்ணபிள்ளை அன்னலஷ்மி அவர்கள் 23.04.2021 செவ்வாய்க் கிழமை அன்று நல்லூர் கந்தனின் பாதாரவிந்தத்தை சென்று விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா விசாலாட்சி தம்பதிகளின் இளைய புதல்வியும், காலஞ்சென்ற நரசிங்கம் கிருஷ்ணபிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான நரசிங்கம் சீதேவி தம்பதியினரின் அருமை மருமகளும், காலஞ்சென்றவர்களான முத்துக்குமார், சங்கரப்பிள்ளை, தங்கம்மா, கணேசபிள்ளை ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்றவர்களான லட்சுமி, கந்தையா, பொன்னம்பலம், பார்வதி, மாணிக்கம், சின்னத்துரை ஆகியோரின் அன்பு மைத்துனியும் காலஞ்சென்ற தனபாலசிங்கம், தனேந்திரன், வரதராஜன், சுசீந்திரன், திலகாம்பிகை, அமிர்தாம்பிகை, தயாபரன் ஆகியோரின் அன்பு சிறிய தாயாரும் (குஞ்சியம்மா), ஞானகலாதேவி, காலஞ்சென்ற நளினி, நீற்றா ஜீவமலர், தங்கராஜா, உருத்திரன் ஆகியோரின் சின்னமாமியும், ரவிச்சந்திரன், அனுராதா, சந்திரவதனா, அன்ரன் தேவதாசன், சந்திரகலா, கௌரிசங்கர், ஸ்கந்தகுமார் ஆகியோரின் அன்பு மாமியாரும், அஜந்தினி, அனுக்கிரகதா, அமுதினி, அபிநவன், ஆதிவிருட்சன், ஆராவமுதன், ஆரணி, அச்சுதன், ஆரண்ன், அம்புஜன், விபூசன், அரிஞ்சயன், அனந்தினி, அக்ஷசயன், பவிஷன் ஆகியோரின் பேர்த்தியும், ரித்திகா, ஹர்சிதா, சோபியா ஜவினி (கனடா), ஜவின் (லண்டன்), என்வின் (லண்டன்), ஒஜினியா (லண்டன்) ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

மேலும் நல்லூரைச் சேர்ந்த மோகன் என்றழைக்கப்படும் வேலாயுதம் கந்தசாமியின் அன்பு அம்மாவும் திலகறோஜனியின் மாமியும், அபிமன்யு உபமன்யு, மற்றும் அபிமன்யு தர்மிஷாவின் பாசமிகு பேர்த்தியும், சம்யுக்தாவின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (25.04.2021) ஞாயிற்றுக்கிழமை இல. 63, சங்கிலியன் வீதியில் அமைந்துள்ள அவரின் பாசமிகு மகள்மாரில் ஒருவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**வேலாயுதம் கந்தசாமி (மோகன்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணமகள் தேவை

யாழ் உடுவில் இந்து கௌரவ குடும்ப 1992 உத்தரம் சிம்மராசி 12இல் செவ்வாய், உயரம் 5`8`` உடைய அரச தொழில் முகாமைத்துவ சேவை உத்தியோகஸ்தர் (M.S.O) B.B.M பட்டதாரி படிப்பில் ஒரு பாடத்தில் மட்டும் சித்தி பெற வேண்டும் எதிர்பார்ப்பு அரச பள்ளி ஆசிரியை முழு விபரங்களும் போட்டோ சாதகம் உட்பட முதல் கடிதத்திலேயே எதிர்பார்க்கப்படுகிறது.

**0094 765 362 562, 077 339 8157**

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 17 - 10 - 1944

மறைவு 05 - 05 - 2020

கடந்த 05.05.2020 செவ்வாய்க்கிழமை அன்று இறைபதமடைந்த எங்கள் குடும்பத்தலைவி

### அமரர் குணசிங்கம் இராஜேஸ்வரி

அவர்களின் முதலாம் ஆண்டு ஆத்மசாந்திக் கிரியைகள் இன்று (25.04.2021) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.

குடும்பத்தினர்

## பதவி வெற்றிடம்

### வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கம்

**AROD நிறுவனத்தில் கீழ் உள்ள பதவிக்களுக்கு வெற்றிடங்கள் கோரப்படுகின்றது**

1. **விடுதி மேற்பார்வையாளர் கடமைகளுடன் விற்பனை நிலைய பொறுப்பாளராக தொழிற்படல் - பெண் (வெற்றிடம் - 01)**
   - வயதெல்லை : 40-65 வரை
   - சம்பளம் : 30,000.00 (மாதாந்தம்)
   - தகைமை : விடுதியில் தங்கி நின்று கடமையாற்றுதல் கட்டாயமானது.
   - தங்குமிட வசதி , உணவு வழங்கப்படும்.

2. **நிர்வாக உத்தியோகத்தர் - இருபாலாரும் (வெற்றிடம் - 01)**
   - வயதெல்லை : 40-65 வரை
   - சம்பளம் : 20,000.00 (மாதாந்தம்)
   - தகைமை : க.பொ.த உயர் தரம் சித்தி
     கணினி அறிவு
     சமூக சேவை நிறுவனங்களில் /அரச சேவை நிறுவனங்களில் கடமையாற்றியோருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**குறிப்பு :** கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வின் மூலம் வெற்றிடம் நிரப்பப்படும். விண்ணப்பப்படிவம் **AROD** நிறுவனத்தில் / **WEB SITE/E.MAIL** மூலம் பெறலாம்.

ஆர்வமுள்ளவர்கள் **08 மே 2021** முன்பாக கீழ் உள்ள முக வரிக்கு தங்களால் தெரிவுசெய்யப்படும் **பதவியை இடது பக்க மூலையில் எழுதி விண்ணப் பங்களை பதிவுத்தபாலில்** அனுப்பி வைக்கவேண்டும் இத் திகதிக்கு பின் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**தலைவர்,**
**வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கம்,**
**47/2,ஆடியபாதம் வீதி,**
**திருநெல்வேலி வடக்கு.**

**E.MAIL : arodinjaffna@gmil.com**
**WEB SITE : www.arod.org.lk**
**T.P. : 021 221 5925, 021 321 7718**

## LANKA TEC

## வேலையாட்கள் தேவை

IT / Application support specialist க்கான விண்ணப்பம் கோரப்படுகின்றது. Basic computer Hardware, Windows 7 / 10, MySQL / MS SQL அறிவு அவசியம்.

சாவகச்சேரிக்கு அண்மையில் வசிக்கும் தமிழ், ஆங்கிலம் (English Must) பேசத் தெரிந்த ஆண்கள் விரும்பத்தக்கது.

**தொடர்பு:**
**accounts@lankatec.com**

## யாழ். கலாலயா பயிற்சியகம்

இலங்கையின் மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணையத்தால் (TVEC) பதிவு செய்யப்பட்ட பயிற்சி நிலையம்
விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)

**2020 A/L, 2021 O/L எடுத்த மாணவிகளே! வெளிநாடு செல்லவிருக்கும் மங்கையரே! சொந்தமாக தொழில் செய்ய விரும்பும் நங்கையரே! மற்றும் ஆர்வம் உள்ள மகளிரே!**

**உங்களுக்கான 3 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!**

- ***கேக் ஐசிங்*** - றோயல், Parchment, Frosting, Fondant, Whipping Cream Icing, மாச்சீனி மலர்கள். (Sugar Flowers).
- ***உணவு தயாரித்தல்*** - உணவு வகைகள், 6 வகையான Cakes, Cup Cake மற்றும் பீஸா, சிற்றுண்டிகள் குளிர்பானங் கள், ஐஸ் கிறீம், புடிங் தயாரித்தல்.
- FACIALS *(முக அழகுக்கலை)* Pedicure, Manicure, Nail Art, கண் புருவம் சீராக்குதல் (Eye Brow Threading), தேவையற்ற முடிகளைஅகற்றுதல் (Waxing)
- ***கூந்தல் வடிவமைப்புகளும் முடி சீராக்குதலும்*** 40 வகையான கொண்டைகள் போடுதல், முடி அயன் செய்தல், முடி சுருட்டுதல், Hair Colouring, முடி வெட்டுதல், Hair Perming.
- BRIDAL DRESSINGS *(மணப்பெண் அலங்காரங்கள்)* இந்து, கிறிஸ்தவ இஸ்லாம் மணப் பெண் அலங்காரமும் Modern, கவர்க்காஸ், சிங்கப்பூர் குஜராத்தி, மடிசார், சிங்கள முறையிலான சேலை அணியும் முறைகள். முறைகளும் பயிற்று விக்கப்படும்.

**பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.**


இம்முறை A/L, O/L எடுத்த மாணவிகளுக்கு கட்டணத்தில் கழிவு வழங்கப்படும்

**சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம்**
**02.05.2021 ஞாயிறு காலை 10.00மணி**
**கிழமை நாள் புதிய பிரிவுகள் ஆரம்பம்**
**05.05.2021 புதன் காலை 10.00 மணி**

-இயக்குநர்-

'ஓம் விராட் விஸ்வப் பிரமனே நம'

## மரண அறிவித்தல்



### விஸ்வப்பிரம்மஸ்ரீ பரஞ்சோதி தெய்வேந்திரன்
(ஓய்வுபெற்ற கிராம அலுவலர்)

யாழ்ப்பாணம் அராலியைப் பிறப்பிடமாகவும் 3 ஆம் வட்டாரம் முள்ளியவளையை வசிப்பிடமாகவும் கொண்ட விஸ்வப் பிரம்ம ஸ்ரீ பரஞ்சோதி தெய்வேந்திரன் (ஓய்வுபெற்ற கிராம அலுவலர்) நேற்று முன்தினம் (23.04.2021) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் பரஞ்சோதி - அன்னபூரணம் தம்பதியரின் அன்பு மகனும், சங்கரப்பிள்ளை - அன்னப் பிள்ளை தம்பதியரின் மருமகனும், லலிதாவின் அன்புக் கணவரும், சாகித்தியா (முகாமைத்துவச் சேவை உத்தியோகத்தர் - மாவட்ட பொதுவைத்தியசாலை முல்லைத்தீவு), ராகவன் (உடற்கல்வி ஆசிரியர் - கலைமகள் வித்தியாலயம் முள்ளியவளை), ராகுல் ஆகியோரின் அன்புத் தந்தையும், தர்சிகாவின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.04.2021) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தனக்கிரியைக்காக முள்ளியவளை கற்பூரப்புல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 055 1085**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடல் எடை குறைய வேண்டுமா?

◎ எடை கூடுகிறதா?
◎ வயிறு, மார்பு குறைய வேண்டுமா?
◎ உடல் எடை குறைகிறதேயில்லை என்கின்ற கவலையா?

**பால்மா குளிசை** - வயிறு, மார்பு குறைக்கும் கிறீம்
15 நாள்களில் அற்புத மாற்றத்தை உணர்வீர்கள்.

## தலைமுடி நீளமாக வளர வேண்டுமா?

தலைமுடி வளரவேண்டுமா? பேன், பொடுகு தொல்லையா?
➤முடிகொட்டுகிறதா? ➤இளநரையா? ➤தலையிடியா? முடி அடர்த்தி இல்லையா?➤புதிதாக முடி முளைக்க வேண்டுமா?
➤பொன்னாங்காணி? கரிசலாங்காணி, இலாமிச்சை வேர், கருவேப்பிலை, வல்லாரை, நெல்லி சேர்த்துக்காய்ச்சிய எண்ணைய் குளிசை
**இந்த எண்ணையைப்பாவித்து பயனடைய**

## உடல் எடை இலகுவாக கூட வேண்டுமா

எடை கூட வேண்டுமா?, கணச்சூடா?, பலகீனமா?, ஒட்டிய கன்னங்கள் குண்டுக்கன்னங்களாக மாற வேண்டுமா?, மார்பு கூட வேண்டுமா?, உடல் குறைபாடுகளா?

**குளிசை, பால்மா என்பன விற்பனைக்குண்டு**

**கருமை நிறம் நீங்க வேண்டுமா?**

**077 210 6155 221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.**

Immediate Vacancy (Road Construction Work)

Location - Jaffna.

| Position | Qualification and Experience Required |
|---|---|
| Technical Officer | NCT (Civil) or equivalent qualification with Minimum 5 years of experience of which a minimum 2 years of experience in Road construction work |
| Site Supervisor | NVQ Level-4 (Civil) or equivalent with Minimum of 01 years of experience in road construction work |
| Drivers- Heavy Vehicle Operators - JCB, Roller, Skid Loader | Should have Valid License With Minimum 2 years of experience in road construction work |

The ideal candidates should be a team player, must have positive interpersonal and communication skills with the willingness to work extended hours Please send your CV to E-mail: iroudljf2.gemkk@gmail.com

WKK Engineering Pvt Ltd.
Project Office,
Main Street,Chankanai.
0212250137

## 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



மலர்வு 07 • 08 • 1944

உதிர்வு 26 • 03 • 2021

கடந்த 26.03.2021 வெள்ளிக்கிழமைஇறையடி சேர்ந்த எமது இல்லத் தலைவி

### அமரர் கந்தையா நல்லம்மா

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (25.04.2021) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும். இந்த நிகழ்வில் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் பங்குபற்றுவதுடன் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

எமது இல்லத்தலைவியின் மறைவுச் செய்தி கேட்டு நேரில் வந்தும் இறுதிக்கிரியை மற்றும் இறுதி நிகழ்விலும் பங்குபற்றியோருக்கும், தொலைபேசி, மின்னஞ்சல் மூலம் அனுதாபங்கள் தெரிவித்தோருக்கும், பதாகைகள், கண்ணீர் அஞ்சலி பிரசுரங்கள் வெளியிட்டோருக்கும், நேற்று வரை உண்டி கொடுத்தவர்களுக்கும், எமக்கு பல்வேறு வழிகளில் உதவிகள் புரிந்த அன்புள்ளங்களுக்கும் உளமார எமது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பொற்றொழிலாளர் வீதி,
சங்கத்தானை, சாவகச்சேரி

குடும்பத்தினர்

**சர்வதேச அங்கிகாரமான சான்றிதழ்கள்**

SDFL Creating Career Confidence...

- Certified Computer Expert
- Diploma in Montessori Teaching
- Diploma in Spoken English
- Diploma in Nursing
- Diploma in Psychology & Counseling

City & Guilds Approved Centre
ISO 9001 : 2015 CERTIFIED

DIPLOMA ▶ HND ▶ DEGREE

எமது பாடநெறிகள் அனைத்தும் IPA UK நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட்டது

INTERNATIONAL PROFESSIONAL ACADEMY, UK
WWW.IPAUK.ORG.UK

- BSc in Psychology
- Bachelor of Education
- Bachelor Business Administration
- Master of Education (MED)
- Master of Business Administration

IIC UNIVERSITY OF TECHNOLOGY

UGC APPROVED

தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம்

புலமை பரிசில்களும் உண்டு

Hotline +94772 703 494

விண்ணப்ப முடிவுத்திகதி 20.05.2021

**AMAZON COLLEGE**
87, Kandy Road, (Opposite to Old Park) Jaffna
0215 61 21 51 | amazonjaffna@gmail.com

amzoncollege | www.amazoncollege.lk

# மேலும் 8 பேருக்கு யாழில் கொரோனா

யாழ்ப்பாணம், ஏப். 25

யாழ்ப்பாணத்தில் மேலும் 8 பேருக்கு கொரோனாத் தொற்றுள்ளமை நேற்று உறுதிப்படுத்தப்பட்டது என்று சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் ஆய்வுகூடத்தில் 386 பேரின் மாதிரிகள் நேற்று பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. 11 பேருக்கு தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் 7 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்ட ஒருவருக்கு தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

மல்லாவி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் மூவருக்கு தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவர்கள் மூவரும் சுயதனிமைப்படுத்தப்பட்டிருந்த இராணுவத்தினர்' - என்றார்.

(ம-26)

## மனநிறைவளிக்கும் காப்புறுதி உலகுக்குள் நுழையுங்கள்

எமது வாடிக்கையாளர்கள் சாதனை பிரதிபலன்களுடன் தனது துறையில் வேகமாக வளர்ந்துவரும் வர்த்தக நிறுவனமாகவும் தர அடிப்படையில் தொழில் தரங்களை அடைந்தவர்களாகவும் இருப்பதோடு முதன்மையான இலக்கு ஒன்றில் வாடிக்கையாளர்களுக்கு சேவை அளிக்கின்றனர். இந்த நிறுவனத்தின் வளர்ச்சி மற்றும் நிலைத்தன்மையை வலுப்படுத்தும் நோக்கில் தேசிய விற்பனை செயற்பாட்டு இலக்கை நோக்கி ஆர்வத்துடன் பணியாற்றுவதன் மூலம் நம்பகத்தன்மை, நம்பிக்கை மற்றும் இணையற்ற சேவையை மேற்கொள்ளக் கூடிய கடின உழைப்புடன் புகழை கட்டியெழுப்ப முடியுமான சுறுசுறுப்பான தொழில்முறையாளர்களை தேடுகிறோம்.

### பிராந்திய முகாமையாளர் - விற்பனை (வட கிழக்கு)

**சிறந்த அபேட்சகர் பின்வரும் அம்சங்களை கொண்டிருத்தல் வேண்டும்:**

- பணியமர்த்தப்படும் புவியியல் பகுதிகளுக்கான விற்பனை மூலோபாயங்கள், செயற்பாட்டு நடைமுறைகள் மற்றும் கொள்கைகளை செயற்படுத்தல் வேண்டும்.
- பணியமர்த்தப்படும் விற்பனை அளவு, உற்பத்திக் கலவை மற்றும் ஏனைய மூலோபாய இலக்குகளை அடைதல்.
- இலக்கு வைக்கப்பட்ட வாடிக்கையாளர்களிடம் இருந்து வர்த்தகத்தை கட்டியெழுப்பல் மற்றும் வளர்ப்பதன் ஒட்டுமொத்த செயற்பாடுகளுக்கான பொறுப்பு.
- இலாபகரமான பிராந்திய கிளைகள், மேற்பார்வையை மேற்கொள்வதை உறுதி செய்வதற்கு விற்பனை மூலோபாயம் மற்றும் திட்ட இலக்குகள் மற்றும் விநியோகத் திட்டங்களை அமைப்பதற்காக விற்பனை நிறைவேற்றுனர்கள்/ ஆலோசகர்களை நியமித்தல்.
- பிராந்திய வர்த்தகம் மற்றும் விற்பனை செயற்பாட்டு பரப்புகளை பொருந்தும் வகையில் கையாளுதல் மற்றும் சேவை தேவைகளை முன்னெடுத்தல் மற்றும் வாடிக்கையாளர் திருப்தி மதிப்பீடு.
- முகாமைத்துவம் மூலம் பணியமர்த்தப்படும் முக்கிய ஒப்படைகள்/ திட்டங்களை கையாளுதல்/ பங்கேற்றல்.
- நிறுவனத்திற்குள் ஏனைய செயற்பாடுகளுக்கு முக்கியமான மூலோபாய நோக்கங்களை அடைவதற்கு உதவுதல்.

**விண்ணப்பதாரர் பின்வருவனவற்றை கொண்டிருத்தல் வேண்டும்:**

- அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து சந்தைப்படுத்தல்/ விற்பனை பட்டம் ஒன்றுடன் காப்புறுதித் துறையில் விற்பனையில் குறைந்தது 6 ஆண்டுகள் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும் என்பதோடு அதில் குறைந்தது 3 ஆண்டுகள் பிராந்திய முகாமையாளர் தரத்தை கொண்டிருத்தல் வேண்டும்.

அல்லது

- CIM/SLIM அல்லது அதற்கு இணையான தொழில்முறை நிறுவனம் ஒன்றில் இருந்து சந்தைப்படுத்தல் டிப்ளோமா உடன் காப்புறுதித் துறையில் விற்பனையில் குறைந்தது 7 ஆண்டுகள் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும் என்பதோடு அதில் குறைந்தது 4 ஆண்டுகள் பிராந்திய முகாமையாளர் தரத்தை கொண்டிருத்தல் வேண்டும்.
- 40 வயதுக்கு குறைவாக இருத்தல் வேண்டும்.

பண்புக்கூறுகள் மற்றும் திறன்கள்:

- சிறந்த பகுப்பாய்வு திட்டமிடல், ஆளிடை தொடர்பு, தொடர்பாடல் மற்றும் தலைமைத்துவ திறன்கள்,
- மூலோபாய உந்துதல், முடிவு நோக்குநிலை மற்றும் இணங்குவித்தலுக்கான உளச்சார்பு,
- சந்தைப்படுத்தல் மற்றும் விற்பனையில் சிறந்த அறிவு மற்றும் திறன், வாடிக்கையாளர் வாழ்க்கைச் சுழற்சி மற்றும் விற்பனை நடைமுறை, வர்த்தக அறிவு மற்றும் போட்டியாளர் முன்முயற்சி பகுப்பாய்வில் பயன்பாட்டு அறிவு.

**அடைவு முடிவுகள் அடிப்படையில் பதவி நிலை கருத்தில்கொள்ளப்படும்.**

**தேர்வுசெய்யப்பட்ட அபேட்சகருக்கு கவர்ச்சிகரமான ஊதியப் பொதி ஒன்றுடன் சேர்த்து குழுவாக இயங்கும் வர்த்தக சூழலில் மேலும் முன்னேறுவதற்கான வாய்ப்பு காத்துள்ளது.**

உங்கள் மின்னஞ்சலின் பொருள் தலைப்பில் MSL Ref. No. 7604 இனை குறிப்பிட்டு இந்த விளம்பரம் வெளியான 10 நாட்களுக்குள் mslr@sltnet.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு உறவினர் அல்லாத இரு நடுவர்களின் தொடர்பு விபரங்களுடன் PDF வடிவத்தில் உங்களது முழுமையான விண்ணப்பத்தை அனுப்பவும்.

MSL Management Systems (Pvt) Ltd.

No: 08 Tickell Road, Colombo 08.
mslr@sltnet.lk
www.bposrilanka.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணமக்கள் தேவை

## மணமகள் தேவை
1991 யாழிந்து. திருவோணம். Development Officer, யாழ்ப்பாணம். பதிவு: 5456. தரகர் கூலி இல்லை Unlimited குறிப்புகள் பதிவுக்கட்டணத்தில் 30% கழிவு.

Ensured Quality Lanka, Colombo - 04
www.EQMarriageService.com
076 664 9401

## மணமகள் தேவை
1991 யாழிந்து, உத்திரட்டாதி. Bank, யாழ்ப்பாணம். பதிவு: 4396. தரகர் கூலி இல்லை Unlimited குறிப்புகள் பதிவுக்கட்டணத்தில் 30% கழிவு.

Ensured Quality Lanka, Colombo - 04
www.EQMarriageService.com
076 664 9401

## மணமகன் தேவை
1987 யாழிந்து. சதயம். Teacher, யாழ்ப்பாணம். பதிவு: 4021. தரகர் கூலி இல்லை. Unlimited குறிப்புகள் பதிவுக்கட்டணத்தில் 30% கழிவு.

Ensured Quality Lanka, Colombo - 04
www.EQMarriageService.com
076 664 9401

## மணமகன் தேவை
1986 யாழிந்து. பரணி. Electronic & Communication Engineer, பதிவு: 4064. தரகர் கூலி இல்லை. Unlimited குறிப்புகள் பதிவுக்கட்டணத் தில் 30% கழிவு.

Ensured Quality Lanka, Colombo - 04
www.EQMarriageService.com
076 664 9401

## மணமகன் தேவை
1982 யாழிந்து. கோட்டை. Bank, யாழ்ப்பாணம். பதிவு: 4096. தரகர் கூலி இல்லை. Unlimited குறிப்புகள் பதிவுக்கட்டணத் தில் 30% கழிவு.

Ensured Quality Lanka, Colombo - 04
www.EQMarriageService.com
076 664 9401

## மணமகள் தேவை
1982 யாழிந்து. அனுஷம். Accountant, பருத்தித்துறை. பதிவு: 4280. தரகர் கூலி இல்லை. Unlimited குறிப்புகள் பதிவுக் கட்டணத்தில் 30% கழிவு.

Ensured Quality Lanka, Colombo - 04
www.EQMarriageService.com
076 664 9401

## மணமகன் தேவை
1989 யாழிந்து. சித்திரை. Doctor, யாழ்ப்பாணம். பதிவு: 4105. தரகர் கூலி இல்லை. Unlimited குறிப்புகள் பதிவுக் கட்டணத்தில் 30% கழிவு.

Ensured Quality Lanka, Colombo - 04
www.EQMarriageService.com
076 664 9401

## மணமகள் தேவை
1985 யாழிந்து. உத்திராடம். Bank, யாழ்ப்பாணம். பதிவு: 4329. தரகர் கூலி இல்லை. Unlimited குறிப்புகள் பதிவுக் கட்டணத்தில் 30% கழிவு.

Ensured Quality Lanka, Colombo - 04
www.EQMarriageService.com
076 664 9401

## கிரக பாவம் குறைந்த மணமகள் தேவை
1985 திருவாதிரை கிரகபாவம் 6. 12 இல் செவ்வாய் வீடுவளவு சீதனமாக உள்ள ஆசிரியர் மணமகள் தேவை.

திருக்குமரன் மங்கல ஏஜன்சி
இல 100/10 தாவடி வடக்கு, கொக்குவில்

## மணமகள் தேவை
1983 ஒக்டோபர் பிறந்த இலண்டன் பிரஜா உரிமையுள்ள சிறந்த வியாபார பின்னணியுள்ள இலங்கை வருகை தந்துள்ள மணமகனுக்கு அழகான ஒழுக்கமான குடும்பப் பின்னணி கொண்ட மணமகளை (1990 - 1994) இடையில் தேடுகின்றார்கள், உரித்துடையோர் தொடர்பு கொள்ளவும்.

076 397 2130, 077 604 0373

## மணமகன் தேவை
1985இல் யாழ்ப்பாணத்தில் பிறந்த கொழும்பை வதிவிடமாகவும் பிரபல கத்தோலிக்க கன்னியர் மடத்தில் கல்வி பயின்ற கத்தோலிக்க சமயத்தைச் சேர்ந்த இரண்டு முதுமானி பட்டங்களைப் பெற்று Boimudical Science விரிவுரையாளராக கடமையாற்றும் மணமகளுக்கு அதே சமயத்தைச் சேர்ந்த தகுந்த கல்வித் தகைமையும், உயர் தொழில் தகைமையுள்ள (Preferred Doctor) மண மகனை பெற்றோர் எதிர்பார்கின்றனர்.

proposal4750@gmail.com

## மணமகள் தேவை
யாழ். இந்து கௌரவ குடும்பம் 1977 உத்திரட்டாதி மீன ராசி கி.பா.17 சொந்த தொழில் செய்யும் மணமகனுக்கு மணமகள் தேவை. நேரடித் தொடர்புகளுக்கு:

076 449 6275

## மணமகள் தேவை
யாழ் இந்து கௌரவ குடும்பம் 1995 அவிட்டம் 8 இல் செவ்வாய் 53 பாவம் France PR,1987 அனுசம் 4 இல் செவ்வாய் 38 பாவம் UKPR

திருமணசேவை 077 078 3832

## மணமகன் தேவை
யாழ்.இந்து கௌரவ குடும்பம் 29 வயது செவ்வாய் இல்லை அரச உயர் பதவி வகிக்கும் மணமகளுக்கு பொருத்தமான மணமகன் தேவை. திருவாதிரை, அத்தம், சுவாதி, உத்தராடம், திருவோணம், சதயம் பொருத்தமில்லை. தொடர்பு பெற்றோர் மட்டும்.

076 376 9381

## மணமகள் தேவை
யாழ். இந்து கௌரவ குடும்பம் 6' உயரம் அனுஷம், 1985 MORATUWA PASS OUT QUANTITY SURVEYOR மணமகனுக்கு மணப்பெண் தேவை. தொடர்பு பெற்றோர்:

076 183 3744

## மணமகள் தேவை
யாழிந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 33 வயதுடைய கொழும்பில் Accountent ஆகப் பணிபுரியும் மணமகனுக்கு பெற்றோர் படித்த சைவபோசனமுள்ள மணப்பெண்ணை தேடுகின்றனர் நட்சத்திரம் பரணி 4ம் பாதம் செவ்வாய் தோஷமில்லை கிரக பாவம் 35. உயரம் 5 - 11 பெற்றோரின் நேரடி

Email:Sriskandaroyalcrown2021@gmail.com

தரகர் இல்லை

## மணமகள் தேவை
யாழ் இந்து கௌரவ 41 வயது சொந்தமாக தொழில் புரியும் திருமணமாகாத மணமகனுக்கு மணமகள் தேவை. சீதனம் எதிர்பார்ப்பில்லை.

தொடர்பு:- 077 905 8615 (வைபர் & வாட்ஸ் அப்)

## மணமகள் தேவை
லண்டனில் வசிக்கும் 1979 ல் பிறந்த மணமகனுக்கு மணமகள் தேவை.

தொடர்பு: 071 689 1269

# தேவை

## வீடு வாடகைக்கு தேவை
யாழ்ப்பாணம் இலுப்பையடி - நாவலர் வீதிக்கும் அண்டிய பகுதிகளில் வீடு தேவை.

தொடர்பு 076 977 4628 Viber: 077 264 8927

## வாடகைத்தாய் தேவை
IVF ஊசிமூலம் மகப்பேற்றிற்கு 30 வயதுக்குட்பட்ட வாடகைத் தாய் தேவை. இரகசியம் பேணப்படும் மேலதி விவரங்களுக்கு: 075 441 2764

## பணியாளர் தேவை
வயதான அம்மா ஒருவரை பராமரிக்க பெண் பணியாளர் ஒருவர் தேவை. வீட்டில் தங்கியிருந்து பராமரிப்பவர் விரும்பத்தக்கது.

தொடர்பு: 077 773 1361

## வேலையாட்கள் தேவை
அரியாலை நகரில் உள்ள உணவகம் ஒன்றிற்கு அனுபவம் உள்ள (சப்ளை, ரீமாஸ்ரர்) தேவை தங்கி நின்று வேலை செய்யக்கூடியவர்கள் மட்டும்.

077 799 3331

## வேலையாள்கள் தேவை
யாழ் நகரில் இயங்கிவரும் உணவகம் ஒன்றுக்கு பின்வரும் வேலையாள்கள் தேவை.
சமையலாளர், [illegible]

T.P: 077 288 5224
076 591 7107

## சிறுநீரகம் தேவை
B+ குரூப் வகையைச் சேர்ந்த சீறுநீரகம் தேவை.

தொடர்பு: 077 363 1891

## தேவை
வட்டா, TATA பிக்கப், மகேந்திரா போன்ற வாகனங்கள் விலைக்குத் தேவை.

தொடர்பு:077 445 8886, 077 2646 104

## வேலையாள்கள் தேவை
**சாவகச்சேரி தேவாலய வீதியில் இயங்கும் ஸ்ரீ விக்னேஸ்வரா களஞ்சிஞ்ய வாகனத்தில் பொருள்கள் விநியோகத்திற்கு** வேலையாள்கள் தேவை. சாவகச்சேரியை அண்மித்த பகுதியில் உள்ளவர்கள் 27.04.2021 செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு நேரில் வரவும்.

077 817 0381, 076 297 9267

## Gratuate Admin Officer தேவை
யாழ் ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள பிரபல அழைப்பிதழ் காட்சியறைக்கு Admin வேலை செய்யக்கூடிய பட்டதாரி பெண் ஊழியர் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

076 397 6062

## வீடு கொள்வனவுக்கு தேவை
யாழ்ப்பாணம், திருநெல்வேலி சுண்டிக்குளி அண்மித்த இடங்களில் நல்ல குடும்பத்திற்கு மாடி அல்லது தனி வீடு கொள்வனவுக்கு தேவை.

077 230 0379

## வீடு வாடகைக்குத் தேவை
நல்லூர் கோயிலிருந்து 3Km தூரத்திற்குள் சிறிய குடும்பம் ஒன்றிற்கு சமையலறை ஒன்று அல்லது இரண்டு Bedroom வாகனத்தரிப்பிடம் (சிறியரக வான்) கொண்ட வீடு வாடகைக்குத்தேவை

076 193 7144

## உடனடி வேலைவாய்ப்பு
பிரபல்யக் கம்பனிக்கு பகுதி நேர/முழுநேர வேலைவாய்ப்பு. உழைக்க விருப்பமுள்ள ஆண்/பெண்.

தொடர்பு: 077 3020 874

# வாடகைக்கு

## கடை வாடகைக்கு
யாழ்ப்பாணம் கச்சேரிக்கு அருகில் கடை வாடகைக்கு உண்டு.

077 616 1376

## வீடு வாடகைக்கு
ஆனைக்கோட்டை நவாலி பிரதான வீதியில் (மூத்த நயினார் கோயிலுக்கு அருகில்) சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு.

**குறிப்பு:** அரச உத்தியோகத்தர்களுக்கு மட்டும்

தொடர்பு: 077 369 6820
077 084 5583

## வீடு வாடகைக்கு (மேல்தளம்)
சிவன் புதுவீதி, நல்லூரில் 3 அறைகளுடன் கூடிய வீட்டின் மேற்தளம் வாடகைக்கு உண்டு. பல்கலைக்கழக மாணவிகள், தொழில் புரியும் பெண்கள், சிறிய குடும்பம் விரும்பத்தக்கது.

தொடர்பு: 077 618 4524

## வீடு வாடகைக்கு
யாழ்ப்பாணம் கொழும்புத்துறையில் வீடு வாடகைக்கு

- 4 அறைகள்
- 2 இணைந்த குளியல் அறைகள்
- 1 சாதாரண குளியல் அறை
- 1 சமையல் அறை
- Hall with Varanta

பயன் தரும் மரங்கள் சுற்று மதில் Office ஆகவும் வீடாகவும் பயன்படுத்த முடியும்.

**மாத வாடகை : 36 000 ரூபா**

மேலதிக விபரங்களுக்கு

074 027 2778

## வீடு வாடகைக்கு
கிளிநொச்சியில் வீடு ஒன்று உடன் வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 0777 111 716, 076 860 4501

# விற்பனைக்கு

## விற்பனைக்கு
60 நாள்கள் நிரம்பிய பொம்மேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தடுப்பூசி போட்டு பூச்சி நீக்கியது.

077 869 5005

## காணி விற்பனைக்கு
யாழ் தையிட்டியில் காங்கேசன்துறை துறைமுகம் பலாலி விமான நிலையம் என்பவற்றிக்கு 1km (ஒரு கிலோமீற்றர்) தூரத்தில் 8 1/2 மற்றும் 12 பரப்பு காணிகள் விற்பனைக்கு உண்டு.

076 172 4033

## வீடு, காணி விற்பனைக்கு
சரவணை கிழக்கில் 04 பரப்பு காணியும், வீடும் விற்பனைக்கு உண்டு. விலை பேசித்தீர்மானிக் கப்படும்.

தொடர்பு:
077 255 0807

## மாஸ்க் விற்பனைக்கு
One day மாஸ்க், பேபி One day மாஸ்க். (Kn95 வெள்ளை, கலர்). Kn95 பில்ரர் கறுப்பு வெள்ளை, Kn95 பேபி மாஸ் பிரிண்டற். பிலேன். சனிரேசர். கொரோனா கண்ணாடி, நியூ பாட்டா மொத்தமாக பெற்றுக் கொள்ளலாம். கடையொன்றிற்கு கணக்கு தெரிந்த பொறுப்பாளர் தேவை.

தொடர்புகளுக்கு: 077 8794 148

## வீடு, காணி விற்பனைக்கு
சரவணை கிழக்கில் 04 பரப்பு காணியும், வீடும் விற்பனைக்கு உண்டு. விலை பேசித்தீர்மானிக் கப்படும்.

தொடர்பு:
077 255 0807

# ஏனையவை

## சிங்கள வகுப்பு
நீங்கள் சிங்களம் பேச தெரியாதவரா? வகுப்பில் இணையுங்கள், ஒரு வகுப்பு 02 மணி நேரம் இடம் நல்லூர். அழையுங்கள்: 077 473 7737

## வேலைவாய்ப்பு
யாழ்ப்பாணத்தில் விநியோகஸ்தர் நிலையத்துக்கு SALES REP தேவை. மோட்டார் சைக்கிள் வைத்திருத்தல் அவசியம். அழைக்கவும்.

077 473 7737, 077 325 7747

## வீடு அமைப்பு
உங்கள் இல்லங்களை தரமாக விரைவாக அமைத்திட அழையுங்கள் (ரூபா 50 இலட்சத்திலிருந்து) தொடர்பு:077 60 111 35

## சேவை
நீங்கள் அடகுவைத்து மீட்டெடுக்கமுடியாத நகைகளை எமது நிறுவனத்தின் ஊழியர்கள் மூலமாக நீங்கள் அடகு வைத்த நிறுவனத்திற்கு வருகை தந்து மீட்டு எடுத்து அதற்கான பெறுமதிப்பணம் அவ்விடத்திலேயே தரப்படும் நாடளாவிய ரீதியில் சிநேக பூர்வமான சேவை.

**AAA Gold Center**
076 568 4346

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியர் அடித்து மாணவனின் கண்ணில் பாதிப்பு: அதைத் தாயாரிடம் கூறியமையால் அதிபரும் அடி

யாழ்ப்பாணம், ஏப். 25

ஊர்காவற்றுறை பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் கல்விகற்கும் மாணவன், கண் உட்பட உடலில் பல இடங்களில் அடிகாயங்களுடன் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். பாடசாலையில், 'குட் மோர்னிங்' சொல்லவில்லை என ஆங்கில ஆசிரியை தடியால் அடித்ததால் மாணவனின் கண் பாதிப்படைந்துள்ளது என்றும் அடித்த விடயத்தை தாயாருக்கு ஏன் கூறினாய் என்று கேட்டு அதிபர் உடல் முழுவதும் அடித்தார் என்றும் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் யாழ்ப்பாணம் ஊர்காவற்றுறையில் கடந்த 18ஆம் திகதி இடம்பெற்றுள்ளது.

இது பற்றி மேலும் தெரியவருவதாவது:

கடந்த 18ஆம் திகதி வகுப்பு ஆங்கில ஆசிரியை, தான் வகுப்புக்கு வரும்போது எழுந்து 'குட் மோர்னிங்' சொல்லவில்லை என கூறி தடியால் மாணவனை அடித்துள்ளார். அதன்போது தடி கண்ணில் பட்டுள்ளது. அவரது பாடம் முடிந்த பின்னர் வகுப்பு மாணவர்கள் தமது வகுப்பாசிரியரிடம், ஆசிரியை அடித்து கண்ணில் தடிபட்டு மாணவன் அழுதுகொண்டு இருக்கின்ற விடயத்தைக் கூறியுள்ளனர். வகுப்பாசிரியர் மாணவனை அழைத்துச்சென்று தண்ணீரால் கண்களை கழுவி விட்டுள்ளார். பாடசாலை முடிந்து விடுதிக்கு சென்ற பின்னரும் மாணவன் வலியால் துடித்து அழுதுள்ளான். அது தொடர்பில் சக மாணவர்கள் விடுதி பொறுப்பாளரும், பாடசாலை அதிபருமான பாதிரியாரிடம் கூறியுள்ளனர்.

அவர் மாணவனை அழைத்து அருகில் உள்ள ஊர்காவற்றுறை மருத்துவமனைக்குச் சென்று சிகிச்சை பெறுமாறும், அங்கு மருத்துவர்கள் கேட்டால் விளையாடும்போது கண்ணில் தடி பட்டுவிட்டது என்று கூறுமாறும் சொல்லி சக மாணவனுடன் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துள்ளார்.

மருத்துவமனையில் கண்ணுக்குள் இருந்து சிறு தடித்துண்டு ஒன்றை மருத்துவர்கள் மீட்டுள்ளனர். இது தொடர்பில் அறிந்த மாணவனின் தாயார் மறுநாள் பாடசாலைக்குச் சென்றுள்ளார்.

அதிபர், தான் ஆசிரியைக்கு எதிராக நடவடிக்கை எடுத்துள்ளேன் என்றும் ஆசிரியை தொடர்பில் உரிய தரப்புக்களும் அறிவித்துவிட்டேன் என்றும் இனி அவ்வாறு நடக்காது என்றும் தாயாருக்கு சமாதானம் கூறி அனுப்பிவிட்டு மாணவனை விடுதிக்கு அழைத்து சென்றுள்ளார். தாயார் சென்றதும், சக மாணவர்கள் முன்னால் சகட்டு மேனிக்கு மாணவனை அதிபர் திட்டி அடித்துள்ளார். அதனால் மாணவனின் உடல் முழுதும் தழும்புகள் ஏற்பட்டுள்ளன. மறுநாள் பாடசாலைக்குத் தாயார் வந்து கதைத்துவிட்டு சென்ற ஆசிரியர்களிடம் மன்னிப்பு கோருமாறும் கூறியுள்ளார். மறுநாள் மாணவன் ஆசிரியர்களிடம் மன்னிப்பும் கோரியுள்ளார் என்று மாணவன் தரப்பு குற்றம் சாட்டியுள்ளது.

இது பற்றி மருத்துவமனைப் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட வாக்குமூலம் ஊர்காவற்றுறை பொலிஸாருக்கு அனுப்பப்பட்டுள்ளது. (த26)


## மரண அறிவித்தல்



### குணரட்ணம் நவரட்ணராஜா

(ஓய்வு பெற்ற வைத்தியசாலை ஊழியர்)

மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும், இலக்கம் 5 முதலியார் லேன் நல்லூர் தெற்கு யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட குணரட்ணம் நவரட்ணராஜா அவர்கள் (24.04.2021) சனிக்கிழமை மாலை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற குணரட்ணம் பொன்னம்மா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்ற செல்லையா தங்கம்மா தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற லோசினி என அன்பாக அழைக்கப்படும் தர்மாம்பாளின் அன்புக் கணவரும், தர்சினி (துணிகா- ஆசிரியை, வேலணை மேற்கு நடராசா வித்தியாலயம்) அவர்களின் பாசமுள்ள தந்தையும், விஜயகுமார் (ஆசிரியர், செல்வாநகர் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை) அவர்களின் அன்பு மாமனாரும், மேகனாவின் பாசமான பேரனும், ராஜேஸ்வரி, ரஞ்சிதாதேவி, நடராசா (அவுஸ்திரேலியா) ஆகியோரின் சகோதரனும், சுந்தரலிங்கம், சிவானந்தன், யசோதரா (அவுஸ்திரேலியா), காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு, மகேந்திரன், குலேந்திரன் மற்றும் விக்னேஸ்வரன், ஆகியோரின் மைத்துனரும், நிரோஜா, அபிசேக், அக்ஷயா ஆகியோரின் பெரியதந்தையும், சுஜனின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இல.5 முதலியார் லேன், நல்லூர் தெற்கிலுள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று இன்று (25.04.2021) ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணிக்கு தகனக்கிரியைகளுக்காக அரியாலை சித்துப்பாத்தி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

## பணிப்பெண் தேவை

கிளிநொச்சியில் தங்கியிருந்து வீட்டுப் பணிகளை மேற்கொள்வதற்கும் வயதானவர்களுக்கு உதவியாக இருப்பதற்கும் பணிப்பெண் தேவை. சம்பளம் பேசி தீர்மானிக்கலாம்.

077 604 0373

## மரண அறிவித்தல்



### பொன்னுச்சாமி முருகதாஸ்

பிறப்பு 26.11.1953 இறப்பு 23.04.2021

காலஞ்சென்ற பொன்னுச்சாமி இராமலட்சுமியின் இரண்டாவது புதல்வன் பொன்னுச்சாமி முருகதாஸ் என்பவர் 23.04.2021 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் இராசலட்சுமியின் அன்புக் கணவரும், ஜதீஸ்-பயோதரி-நிரஞ்சனி, சுபஸ்திகா, சிவதாஸ் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.04.2021) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் கிழாங்கொடை அளவெட்டியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று மணல்பிட்டி இந்துமயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமக

## மரண அறிவித்தல்

தோற்றம் 07 . 11 . 1928



மறைவு 24 . 04 . 2021

### கந்தையா பொன்னுத்துரை

தாவடி வடக்கு, ஆச்சாரி லேனைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா பொன்னுத்துரை ஆச்சாரியார் 24.04.2021 அன்று சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா சின்னம்மாவின் ஏக புத்திரனும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் தெய்வானையின் அன்பு மருமகனும், கனகம்மாவின் அன்புக் கணவரும், குகராசா, குகனேஸ்வரி (சுவிஸ்), கைலாயநாதன் (சின்னத்தம்பி-மெக்கானிக்), சறோஜினி தேவி, புனிதவதி, பத்மநாதன் (சுவிஸ்), காலஞ்சென்ற கேதீஸ்வரன் (சுவிஸ்), பிறேமாவதி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும், கலாநிதி, காலஞ்சென்ற துரைசிங்கம் (சுவிஸ்), (வண்ணார்பண்ணை) சத்தியநாதன் (ஓய்வுபெற்ற அதிபர், தொழிநுட்பக் கல்லூரி-வவுனியா), மனோகரன் (நீராவியடி), அங்கஜகன்னி, சுகந்தி (சுவிஸ்), முரளிதரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார். அவர்களின் பேரப்பிள்ளைகளும், பூட்டப்பிள்ளைகளும் இத்தகவலை அறியத் தருகின்றனர்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.04.2021) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆச்சாரி லேன்,
தாவடி வடக்கு,
கொக்குவில்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 419 2184

## துயர் பகிர்வு

நல்லூர்ப்பதியில் வீற்றிருந்து அருள் பாலிக்கின்ற நல்லூர்க் கந்தன் திருமேனி தீண்டி தன்னலம் அற்ற தெய்வப்பணி புரிந்த

### சிவஸ்ரீ இரத்தினசாமி குருக்கள் உருத்திரதாஸசர்மா

தோற்றம் 27 . 11 . 1940



மறைவு 14 . 04 . 2021

அவர்களின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல நல்லூர்க் கந்தன் நயினை ஸ்ரீ நாகபூசணி அம்பாளின் பாதம் பணிகின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

ப.முத்துக்குமாரசாமி குருக்கள்
மு.பர்வதபர்த்தினி அம்மா (கோப்பாய்)
மு.குருபரசாமி குருக்கள் (மருமகன்)
[illegible]லக்ஷ்மி (மகள்)
பேரப்பிள்ளைகள்: ச.ஸ்ரீராமசர்மா, ச.ஸ்ரீலக்ஷ்மணசர்மா,
கு.நிதீஸ்சர்மா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொரோனா...

நேற்று மாத்திரம் 826 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதியாகியுள்ளது. இதன்படி தொற்றாளர்களின் எண்ணிக்கை ஒரு லட்சத்து 517ஆக அதிகரித்துள்ளது.

வைரஸ் தொற்றிலிருந்து 94 ஆயிரத்து 155 பேர் குணமடைந்துள்ளனர். அத்துடன் 638 பேர் உயிரிழந்துள்ளனர்.

கடந்த 24 மணித்தியாலங்களில் குருநாகல் மாவட்டத்திலேயே அதிகளவிலான கொரோனாத் தொற்றாளர்கள் பதிவாகியுள்ளனர். அங்கு கடந்த 24 மணிநேரத்தில் 251 தொற்றாளர்கள் பதிவாகியுள்ளனர். கம்பஹா மாவட்டத்தில் 236 தொற்றாளர்களும், கொழும்பு மாவட்டத்தில் 194 தொற்றாளர்களும் பதிவாகியுள்ளனர். இராணுவத்தினரால் நிர்வகிக்கப்படும் 111 தனிமைப்படுத்தல் நிலையங்களில் 10 ஆயிரத்து 643 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

கடந்த இரு நாள்களாக 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதனிடையே, கொரோனா புதிய பிறழ்வை அறிந்துகொள்வதற்கான பரிசோதனைகளின் நிலைமை தொடர்பில் சிறிஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை, நோய் எதிர்ப்பு மற்றும் உயிரியல் பிரிவின் பணிப்பாளர் மருத்துவர் சந்திம ஜீவந்தர தெளிவுபடுத்தியுள்ளார். மரபணு பிறழ்வின் மூலமாகவே பரவுவதாக தாம் கண்டறிந்துள்ளோம் என, இது தொடர்பான பரிசோதனை கட்டமைப்பு இன்று இலங்கைக்குக் கிடைக்கவுள்ளது எனவும் சந்திம ஜீவந்தர குறிப்பிட்டுள்ளார். இலங்கையில் கடந்த வருடம் ஜனவரி மாதம் முதலாம் திகதி முதலாவது கொரோனா நோயாளியாக சீனப் பெண்ணொருவர் அடையாளம் காணப்பட்டிருந்தார்.

அதன்பின்னர் கடந்த வருடம் மார்ச் மாதம் 11ஆம் திகதி இலங்கையைச் சேர்ந்த வெளிநாட்டுப் பயணிகளுக்கான சுற்றுலா வழிகாட்டியான குடும்பஸ்தர் ஒருவர் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டிருந்தார். (ம-22)

## ரிஷாத்...

தினரால் நேற்று அதிகாலை 2 மணியளவில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் முன்னெடுக்கப்படும் விசாரணைகளுக்கமைய இருவரும் கைதுசெய்யப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார். ஈஸ்டர் தாக்குதலுடன் தொடர்புடைய தாக்குதல்தாரிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கியமை மற்றும் அவர்களுடன் தொடர்புகளைப் பேணிய குற்றச்சாட்டிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன், கொழும்பு பௌத்தாலோக மாவத்தையிலுள்ள அவரது வீட்டில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினரின் சகோதரரான ரியாஜ் பதியுதீன், கொழும்பு வெள்ளவத்தையில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளார் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கூறினார்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் தொடர்பில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் ரியாஜ் பதியுதீன் ஏற்கனவே கைதுசெய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டிருந்தார். அதேவேளை ரிஷாத் பதியுதீன், வேறொரு குற்றச்சாட்டுக்காக கைது செய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ஒ.22)

## டெங்கு...

அவதானமாகச் செயற்படவேண்டும். இவ்வாறு வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

'மழையைத் தொடர்ந்து டெங்கின் தாக்கமும் அதிகரித்துள்ளது. கோப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 4 பேர் டெங்குக்கு இலக்காகியுள்ளனர். பிரதேச செயலகங்களிலுள்ள சுகாதாரக் குழுக்களை உடனடியாகக் கூட்டி கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை ஆரம்பிக்கப் பணித்துள்ளோம்' என்றார் கேதீஸ்வரன். (ஒ.26)

## கொரோனாக்...

செய்யப்பட்டுள்ள நிலையிலும், யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் உத்தியோகத்தர்களின் பங்கேற்புடன் விருந்துபசார நிகழ்வு நடைபெற்றுள்ளது.

கொரோனாவின் தாக்கம் அதிகரித்து வரும் நிலையில் அதைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன. இது தொடர்பில் ஆராயும் யாழ்ப்பாண மாவட்ட கொரோனாத் தடுப்புச் செயலணியின் கூட்டமும் அவசர அவசரமாக யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில், மாவட்டச் செயலரின் அறையில் நேற்றுக் காலை நடைபெற்றது.

கூட்டம் முடிந்ததும், யாழ்ப்பாண மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற, மாவட்டச் செயலக நலன்புரிச் சங்கத்தின் வருடாந்த விருந்துபசாரத்தில் மாவட்டச் செயலர், மேலதிக மாவட்டச் செயலர், திட்டமிடல் பணிப்பாளர் உள்ளிட்ட அதிகாரிகளும், ஊழியர்களும் பங்கேற்றிருந்தனர்.

தற்போதைய சூழலில் திருமண மண்டபங்களில் நடத்தப்படும் திருமணங்களுக்கு ஆகக்கூடியது 150 பேர் மாத்திரமே அனுமதிக்கப்படுவர் என்றும் விருந்துபசாரங்கள், ஒன்றுகூடல்கள் எதற்கும் அனுமதி வழங்கப்படாது என்றும் சுகாதார அமைச்சால் நேற்றுமுன்தினம் புதிய சுற்றறிக்கை வெளியிடப்பட்டிருந்தது. இவ்வாறானதொரு நிலையிலேயே யாழ்ப்பாண மாவட்டச்செயலகத்தில் இந்த விருந்துபசார நிகழ்வு நடைபெற்றுள்ளது.

இதற்கு முன்னரும் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் கொரோனா கட்டுப்பாடுகள் தொடர்பில் மக்களுக்கு அறிவித்துவிட்டு அதை மீறும் வகையில் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கும் நிகழ்வும் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (ஒ.5)

## பீடாதிபதியாக...

தக் கூட்டம் பதில் துணைவேந்தர் பேராசிரியர் பு.ரவிராஜன் தலைமையில் நேற்று இடம்பெற்றது. இதுவரை காலமும் உயர் பட்டப்படிப்புகள் பீடாதிபதியாக விளங்கிய பேராசிரியர் கு.மிகுந்தனின் பதவிக் காலம் கடந்த பெப்ரவரி மாதத்துடன் நிறைவடைந்துள்ளது.

அதன்பின்னர், உயர் பட்டப்படிப்புகள் பீடாதிபதி பதவிக்கு விண்ணப்பம் கோரப்பட்டு, ஒருவர் மட்டுமே விண்ணப்பித்திருந்த நிலையில் மீள் விண்ணப்பம் கோரப்பட்டிருந்தது. இதற்கமைய மூவர் குறித்த பதவிக்கு விண்ணப்பித்திருந்தனர்.

விண்ணப்பித்திருந்த மூவரும் பேரவை உறுப்பினர்கள் [illegible] தமது எதிர்கால நோக்கு [illegible] மளித்ததைத் தொடர்ந்து தெரிவு இடம்பெற்றது. இந்நிலையில் 26 வாக்குகளைப் பெற்று பேராசிரியர் செல்வம் கண்ணதாசன் தெரிவு செய்யப்பட்டார். (ம-ஒ,இ)

## குளிக்கச்....

வர் சடலமாக மீட்கப் பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதே இடத்தைச் சேர்ந்த பிரதீபன் என்பவரே சடலமாக மீட்கப்பட்டவர் என்று பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை யாழ்ப்பாண பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-26)

## கர்ப்பிணி...

இறப்பில் சந்தேகம் தெரிவிக்கப்பட்டு பெண்ணின் கணவனைக் கைது செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது.

8 மாதமான குறித்த கர்ப்பிணிப் பெண், கடந்த 17ஆம் திகதி எரிவடைந்த நிலையில் பருத்தித்துறை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அவர் மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் நேற்றுமுன்தினம் அவர் உயிரிழந்தார்.

இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரியான ந.பிறேமகுமார் மேற்கொண்டார். கர்ப்பிணிப் பெண்ணின் இறப்பில் சந்தேகம் உள்ளது என்று தெரிவித்த அவர், குறித்த பெண்ணின் கணவனைக் கைதுசெய்து நீதிமன்றில் முற்படுத்துமாறு பொலிஸாருக்கு அறிவுறுத்தியுள்ளார். (ம-26)

## அரச....

பணிப்பாளர் உள்ளிட்ட பலரையும் இடமாற்றினோம். கவனமாக இருக்க வேண்டும்' இவ்வாறு சங்கானை பிரதேச செயலகத்தைச் சேர்ந்த அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவரை, அரசியல்வாதி ஒருவரின் தந்தை, யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற பகிரங்கக் கூட்டம் ஒன்றில் வைத்து மிரட்டியுள்ளார்.

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் மாலை கலந்துரையாடல் இடம்பெற்றது. 15 பிரதேச செயலகங்களிலும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழு அலுவலகங்களிலும் பணிபுரியும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மாவட்டச் செயலரால் அனுப்பப்பட்ட கடிதத்துக்கு அமைவாக கலந்துரையாடலில் கலந்துகொண்டனர். கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாவட்டச் செயலர் உள்ளிட்ட உயர் அதிகாரிகள் எவரும் கலந்துகொள்ளவில்லை. கூட்டத்தின் ஆரம்பத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் தந்தை, முகநூலில் இருந்து எடுக்கப்பட்ட சில தகவல்களைக் காண்பித்துள்ளார்.

அதில் சங்கானை பிரதேச செயலகத்தில் பணியாற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் பதிவை, மறு பதிவு செய்திருந்தார். அத்துடன் ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரின் பதிவு ஒன்றின் கீழ் அவரை விமர்சிக்கும் பதிவு ஒன்றையும் மேற்கொண்டிருந்தார். அவை தொடர்பான ஆதாரங்களை அச்சுப் பிரதி எடுத்து அவற்றைக் கூட்டத்தில் பகிரங்கமாகக் காண்பித்து மேற்படி அபிவிருத்தி உத்தியோகத்தரை நாடாளுமன்ற உறுப்பினரின் தந்தை மிரட்டியுள்ளார். (ஒ.5)

## மகனின்...

கொண்டார் எனக் கூறப்படும் மகனும் அவரது சகோதரர் மற்றும் மைத்துனர் ஆகியோரைக் கைது செய்துள்ளோம் என அவர்கள் தெரிவித்தனர்.

கோப்பாய் கலாசாலை வீதி, பாரதிபுரத்தைச் சேர்ந்த 5 பிள்ளைகளின் தந்தையான இராசமணி இரத்தினசிங்கம் (வயது -52) என்பவரே உயிரிழந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் இரவு கொலைசெய்யப்பட்டவரது வீட்டில் கைகலப்பு இடம்பெற்றது எனத் தெரியவருகின்றது. நேற்றுக் காலை தந்தையின் உடல் அசைவற்றுக் கிடப்பதைக் கண்டு தமக்குத் தெரியப்படுத்தப்பட்டது என கோப்பாய் பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

மதுபோதையில் வந்த தந்தை மனைவியுடன் முரண்பட்டுள்ளார். இதனால் ஆத்திரமடைந்த மகன் தந்தையைத் தாக்கினார் என விசாரணைகளில் அறியக் கிடைத்துள்ளது என பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

இதேவேளை போதைப்பொருளுக்கு அடிமையான மகன் தந்தையிடம் பணம் கேட்டு அவரை அடித்துக் கொலைசெய்துள்ளார் என இன்னொரு தகவலும் தமது விசாரணைகளின் போது கிடைக்கப் பெற்றுள்ளது என பொலிஸார் கூறுகின்றனர். மேலதிக விசாரணைகளின் பின்னரே உண்மை தெரியவரும் என்று அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

மேற்படி பிரதேசம் 4 வாரங்கள் தனிமைப்படுத்தப்பட்டிருந்து கடந்த வியாழக்கிழமையே விடுவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ,10,26)

# கொரோனா எச்சரிக்கையால் இலங்கைக்கு சவூதி கதவடைப்பு!



கொழும்பு, ஏப். 25

இலங்கை, இந்தியா உள்ளிட்ட 5 நாடுகளில் இருந்து பயணிகள் சவூதி அரேபியாவுக்குச் செல்வது தடை செய்யப்பட்டுள்ளது.

கொரோனாவின் மூன்றாவது அலை தீவிரமாகப் பரவி வருவதைக் கருத்தில் கொண்டு, சவூதி விமானப் போக்குவரத்து அதிகார சபை நேற்றிலிருந்து மறு அறிவித்தல் வரை இவ்வாறு தடை விதித்துள்ளது.

பாகிஸ்தான், இந்தோனேசியா மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகியவை ஏனைய நாடுகளாகும். சவூதி அரேபிய குடிமக்கள் மேற்படி நாடுகளுக்குப் பயணம் செய்வதும் தடை செய்யப்பட்டுள்ளது.

சவூதி அரேபியா பிரஜைகள் குறித்த நாடுகளில் இருந்தால், அவர்கள் 72 மணித்தியால நேரத்துக்குள் நாட்டை வந்தடைய அவகாசமும் வழங்கப்பட்டுள்ளது. (ஒ,22)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தந்தை செல்வா ஞாபகார்த்த விருது வழங்கல் பிற்போனது

யாழ்ப்பாணம், ஏப். 25
கொரோனாப் பெருந்தொற்றுக் காரணமாக தந்தை செல்வா ஞாபகார்த்த சமூகத் தலைவர்கள் கௌரவிப்பு விழா மறு அறிவித்தல் வரை பிற்போடப்பட்டுள்ளது என்று அதன் ஸ்தாபகத் தலைவர் கணபதிப்பிள்ளை தளையரட்ணம் அறிவித்துள்ளார். விரைவில் இது தொடர்பான மறு அறிவிப்பு விடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (ம-50)

## நூல் வெளியீடு

கிளிநொச்சி, ஏப். 25
வள்ளியம்மையின் 'அகரம் எனது சிகரம்' என்ற நூலின் வெளியீட்டு நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சி அக்கராயன்குளம் மகா வித்தியாலயத்தில் காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.
சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகளைப் பேணி மேற்படி நிகழ்வு இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

### வீடு வாடகைக்கு
யாழ் பிறவுண் வீதியில் நான்கு அறைகள் இரண்டு குளியலறை, சமயலறை, விறாந்தையுடன் முற்றிலும் மாபிள் உடனான வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 076 675 8263

### வேலையாட்கள் தேவை
சைவ உணவகமொன்றிற்கு
அனுபவமுள்ள சமையலாளர், சமையல் உதவியாளர் தேவை.
வண்ணை சாந்தையர்மடம்.
கற்பக விநாயகர் கோவில் அருகாமை (K.K.S. றோட்)
074 093 0200

### முதலீட்டாளர்கள் தேவை
யாழ்நகரில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள பலநோக்கு கம்பனிக்கு முதலீட்டாளர்கள் தேவை.
தொடர்பு: 077 844 4518
021 315 3131

### பணிப்பெண் தேவை
கோண்டாவிலில் வசிக்கும் குடும்பம் ஒன்றிற்கு வீட்டு வேலைகளைச் செய்வதற்கு பெண் வேலையாள் தேவை.
தொடர்பு:- 077 261 9386

### தேவை
மேசன், கூலியாள்கள் தேவை. பழவிரும்புவோரும் தொடர்புகொள்ளலாம்.
தொடர்பு: 075 992 3497

### காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம் உரும்பிராய் கோப்பாய் வீதியில் மெயின் றோட்டுடன் 1 1/2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (கோப்பாய் வீதி கிருஸ்ணன் கோயிலுக்கு அருகாமை)
தொடர்பு:-
077 288 0152, 077 468 3354, 077 203 6402

### வீடு விற்பனைக்கு உண்டு
31/3, டேவிற் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள வீடு விற்பனைக்கு உண்டு
தொடர்புக்கு: 076 106 1407, 077 526 1407
021 222 1270

### Software Engineer, QA, UI/UX
கொழும்பில் சில பிரபல மென்பொருள் நிறுவனங்களில் வேலை வாய்ப்பு பெற்றுக் கொடுப்பதுடன், அனுபவமற்றவர்களுக்கு வேலை வாய்ப்பினை பெறுவதற்கான 3 மாத பயிற்சியும் வழங்கப்படும்.
Dewmas,
51 Amman Road, Nallur.
dewmasweb.com
074 138 3368, 021 315 2500

### குழு தனி வகுப்புக்கள்
புலமை பரீட்சை தரம் : 4 & 5
வினாத்தாள் 1 மற்றும் கணித விசேட வகுப்புக்கள் அதிகூடிய புள்ளிகளை பெற இலகுவான முறையில் வழிகாட்டப்படும்.
070 636 3529

### ALLIANCE FRANCAISE DE JAFFNA
af பிரெஞ்சு மொழி

- யாழ்ப்பாணத்தில் French Embassy கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் Alliance Francaise மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட Certificates International Diplomas (delf)
- தமிழ் மொழிமூலம் பிரஞ்சு நாட்டு ஆசிரியரினாலும் கற்பிக்கப்படும்
- French Embassy இன் அனுமதியுடன் திருமண அத்தாட்சிப் பத்திரங்கள் தமிழ் மொழி மூலம் மொழி பெயர்ப்புச் செய்து கொடுக்கப்படும். (இங்கே மட்டும்).



021 222 8093 17, Kandy Road, Jaffna

### காணி விற்பனைக்கு
தெல்லிப்பழை கிழக்கு ஐயனார் வீதியில்
2 பரப்புக்காணி மட்டும்
விற்பனைக்கு உண்டு
(தெல்லிப்பழை வைத்தியசாலையில் இருந்து 600 m தூரம்)
பார்வையிடும் நேரம் காலை 8.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை (தரகர் தேவையில்லை)
ஒரு பரப்பு 5 இலட்சம்
077 814 7389, 077 614 7333

### வேலைக்கு ஆள்கள் தேவை
இல.226, பிரதான வீதியில் அமைந்துள்ள
VV MART SUPERMARKET இற்கு
ஆள்கள் தேவை ஆர்வமுள்ளவர்கள்
தொடர்புகொள்ளவும். (வயது எல்லை : 20 - 30)
021 221 4266,
076 199 7016, 077 945 5167

### Vacancy
Programmer, Web Developer, Receptionist, Graphic Designer, Data Entry Operator (Female), Clerk (Female)
074 138 3368
dewmasweb.com

### விற்பனைக்கு
1. கோண்டாவில் சைவப்பாடசாலை வீதியில் 2½ பரப்புக் காணியுடன் வீடு.
2. தையிட்டி சாந்தச் சந்தி அருகே 30 பரப்புக் காணி
3. பளையில் 20 ஏக்கர் தென்னங்காணி
4. தெல்லிப்பளை ஆஸ்பத்திரிக்கு அண்மையில் 2½ பரப்புக் காணி
5. கொடிகாமம் A9 வீதியில் இருந்து 300 M இல் 8 பரப்புக் காணி

தொடர்பு: 077 221 6683

### பதவி வெற்றிடங்கள்
நவீல்ட் செவிப்புலன் விழிப்புலன் இழந்தோர் பாடசாலை, கைதடி

1. பதவி : சமையலாளர் (ஆண் பெண்)
   வயதெல்லை : 20 - 55
   விடுதியில் தங்கியிருந்து வேலை செய்தல் வேண்டும்.
2. பதவி: சுத்திகரிப்பு தொழிலாளர் (ஆண்)
   வயதெல்லை : 20 - 55
   சம்பளம் : நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்

ஆர்வம் உடையவர்கள் 27.04.2021 முதல் 30.04.2021 வரையான நாட்களில் மு.ப 9.00 - பி.ப 3.00 மணிக்குள் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் விலாசத்திற்கு
தங்களிடமிருக்கும் ஆவணங்களுடன் நேரடியாக சமூகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.
முகவரி :
நவீல்ட் செவிப்புலன் விழிப்புலன் இழந்தோர் பாடசாலை,
A9 வீதி, கைதடி.
தொ.பே.இல: 021-2232202
077-2527256

அதிபர்,
நவீல்ட் செவிப்புலன் விழிப்புலன் இழந்தோர் பாடசாலை
கைதடி.

### வேலையாட்கள் தேவையா?
உங்கள் Vacancy களுக்கு பொருத்தமான உத்தியோகத்தர்களை எமது நிறுவனம் மூலம் தெரிவு செய்யலாம்.
DEWMAS Job Bank
51 Amman Road, Nallur
dewmaswed.com
074 138 3368, 021 315 2500.

### காணி தேவை
வட மாகாணத்தில் கடற்கரையோரத்தை அண்டிய பகுதியில் 40 ஏக்கருக்கு மேற்பட்ட காணி தேவை
தொடர்புக்கு: 076 207 8289, 076 582 1456

### மாஸ்க் விற்பனைக்கு
One day மாஸ்க், பேபி One day மாஸ்க், (Kn95 வெள்ளை, கலர்), Kn95 பில்ரர் கறுப்பு வெள்ளை, Kn95 பேபி மாஸ் பிரிண்டற், பிலேன், சனிரேசர், கொரோனா கண்ணாடி, நியூ பாட்டா மொத்தமாக பெற்றுக் கொள்ளலாம்.
கடையொன்றிற்கு கணக்கு தெரிந்த பொறுப்பாளர் தேவை.
தொடர்புகளுக்கு: 077 8794 148




# உதயா ஜுவல்லர்ஸ்

அக்ஷய திருதியை
மே 14.2021

பொன் சேரும் பொன்னான நன்நாளாம் அக்ஷய திருதியை உங்கள் எண்ணம் போல் தரம், நம்பிக்கை, நவநாகரிகத்திற்கு ஏற்ப என்றும் மாறாத உதயா ஜுவல்லர்ஸ் உடன் கொண்டாடி மகிழ்ந்திடுங்கள்.
**அக்ஷய திருதியை அன்று நகை கொள்வனவு செய்யும் 3 அதிஸ்டசாலிகளுக்கு குழுக்கல் முறையில் தங்க நாணயங்கள் வழங்கப்படும். அன்று நகைகள் கொள்வனவு செய்யும் அனைத்து வாடிக்கையாளருக்கும் பெறுமதி மிக்க பரிசில்களும் காத்திருக்கின்றன.**



- ✓ அதி நவீன டிசைனுக்கேற்ப நம்பமுடியாத விலைக்கழிவுகள் வழங்கப்படும்.
- ✓ குறிப்பிட்ட நகைகள் தங்க விலைக்கே சேதாரம் இல்லாமல் வழங்கப்படும்.



**வாடிக்கையாளர் நன்மை கருதி ஏப்ரல் 14 தொடக்கம் மே 13 வரை உங்களின் மனதிற்கு ஏற்றவாறு நகைகளை ஓடர் செய்து அக்ஷய திருதியை தினத்தில் பெற்றுக்கொள்ளலாம்.**

சுகாதார நடைமுறை காரணமாக வாடிக்கையாளர்கள் சிரமத்தை தவிர்க்கும் முகமாக முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

Email-uthayaa Jewellerss@gmail.com / Facebook - uthayaa Jewellerss / No - 074 069 4449 / 021 222 4434


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி [illegible] இல் உள்ள அவர்களது பணிமனையில் 25.04.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

மலை : 33
வள்ளுவர் ஆண்டு : 2052
சித்திரை 12
ஞாயிற்றுக்கிழமை (25.04.2021)
சிகரம் : 45

Registered as a Newspaper



# சஞ்சீவி

புதுமையும் எழிலும் பொலியும் பல்சுவை வார இதழ்

கொஞ்சமும் இரக்கமின்றி திரும்பவும் நாட்டில்
வஞ்சம் கொண்டு பரவுதே கொரோனா - தஞ்சமினி
முகமூடி வாழ்வும் முடிவில்லா முடக்கமுமே
அகமெலாம் அவதானத்தோடு காப்போம் நமை!

—ஒட்டுக்குழுச் சுவாமிகள்

உளவாளி

# குடி! அடி! கொலை!





அண்மைக்காலத்தில் கிளிநொச்சி பகுதியில் களவு, கொலை போன்ற பாரதூரமான குற்றங்கள் பல்கிப்பெருகியமைக்கு காரணம் போதைப்பொருள் பாவனையே.

## போதையால் சிதைந்த குடும்பம் அவசரத்தனத்தால் நேர்ந்த விபரீதம்

01.04.2021.

பரந்தன் சிவபுரம்.

பள்ளிகூடம் முடிந்ததும், ம்'அம்மா கூட்டிக் கொண்டு போக வருவாவோ?' எணக் கொஞ்சநேர காத்திருந்தான் அவன். அம்மா வரவில்லை. இனியும் காத்திருப்பதை விட வீட்டுக்குப் போவோம் என்று நடக்கத் தொடங்கினான் அந்த 6 வயதுச் சிறுவன். வெயிலும், நடந்த களைப்பும் அவனுக்குப் பசியையும்,தாகத்தையும் ஒன்றான உண்டாக்கின. அவன் வீட்டை அடைந்தபோது வழமைக்கு மாறாக அன்று அப்பா வீட்டில் இருந்தார்.

" அப்பா! அம்மா எங்க?" என்று கேட்டபடியே பார்வையை உள்ளே படரவிட்டான். உள்ளேயும் அம்மா இல்லை. குசினிக்குள் எதுவும் சமைக்கப்பட்டிருக்கவுமில்லை. "சாப்பிட லேட்டாகும்" என்ற கவலையோடு அவன் முன்புறத்தில் வந்து காத்திருந்த சிறிது நேரத்திலேயே கை நிறைய வீட்டுக்கு தேவையான சாமான்களோடு அம்மா வந்துவிட்டாள்.

" அம்மா கூட்டிக்கொண்டு வர வந்திருப்பன் தானே? ஏன் பள்ளிக்கூடத்தில் நிக்காமல் வந்தனீங்கள்?" என்று கேட்டபடியே , மள மளவென்று குளிர்பானமொன்றைக் கரைத்து மகனுக்கும், கணவனுக்கும் கொண்டு வந்து கொடுத்தாள் அம்மா. சிறுவனுக்கு இருந்த தாகத்துக்கும், பசிக்கும் ஒரே மூச்சில் குடிக்கத் தொடங்கினான். ஆனால் அப்பா குடிக்கவில்லை.

அம்மா உடை மாற்றுவதற்காக சுவாமி அறைக்குச் சென்ற போது, சரேலென அப்பாவும் பின்னால் சென்றார். குளிர்பானத்தைக் குடித்துக் கொண்டிருந்த மகனுக்கு அம்மா அந்தரப்பட்டு கத்துவது போல ஒலி கேட்கவே, சுவாமி அறைக்கு ஓடிச் சென்றான்.

அங்கே அம்மாவின் கழுத்தை துணியொன்றால் நெரித்தபடி, அவள் சத்தமிடாதபடி வாயையும், மூக்கையும் இறுகப் பொத்தியிருந்தார் அப்பா. அப்பாவின் பிடியிலிருந்து விலக அம்மா இயன்ற மட்டும் போராடிக் கொண்டிருந்தாள். சிறுவனுக்கு என்ன நடக்கின்றதென்றோ, என்ன செய்வதென்றோ புரியவில்லை. அவன் அழத்தொடங்க,

"அழாதையடா, அழுதா நடக்கிறது தெரியும்தானே?" என்று மிரட்ட, அந்த ஆறுவயதுப் பாலகன் அழுகையை அடக்க முயன்றான்.

"பொலிஸுக்கோ என்னைப் பற்றிச் சொல்லிக் குடுக்கிறாய்?" என்று ஆவேசமாகக் கேட்டபடி, மனைவியின் கழுத்தை இன்னும் பலமாக அப்பா என்ற அந்தக் கொடியவன் நெரித்தான்.

"இல்..லை....இ..னி....சொல்ல...மா..ட்...ட....ன்"

கழுத்தை நெரித்த போதும் திக்கித் திணறி அம்மா சொல்ல முயன்றாள். ஆனால் அப்பா அதைக் கேட்கவோ, அம்மா மீது இரக்கம் காட்டவோ கிஞ்சித்தும் தயாராயில்லை. அவன் மிருகமாகவே மாறியிருந்தான். கண்களில் வெறி. அதே வெறியோடு அவன் இன்னும் நெரிக்க, அம்மா துவண்டு, அசைவற்றுச் சரிந்தாள். அப்படியே அம்மாவைத் தூக்கி வந்து, முன் ஹோலில் விரிக்கப்பட்ட பாயொன்றில் கிடத்தினான் அப்பா.

பின்னர் போர்வையொன்றால் அம்மாவை மூடினான்.

சிறுவன் ஓடிச் சென்று அந்தப் போர்வையை விலக்கி அம்மாவைப் பார்க்க முனைந்தான்,

" இஞ்ச வா. கொம்மா நித்திரை கொள்ளுறா. குழப்பாதை. நீ போய் அப்பாவுக்கு வெத்திலை வாங்கி வா"

என்று கூறியபடி மகனிடம் 20 ரூபாவைக் கொடுத்தான் அப்பா.பயமும், கலவரமுமாக அந்தப் பிஞ்சுப் பாலகம் பக்கத்துக்கு கடைக்கு ஓடிப்போய் வெற்றிலையை வாங்கிக் கொண்டு அதேவேகத்தோடு வீட்டுக்கு திரும்பினான்.




வீட்டில் மயான அமைதி. அந்த அமைதி அவனுக்குப் பயத்தை இன்னும் அதிகரிக்கச் செய்தது. அவன் கடைக்கு போகும் போது திறந்திருந்த வீட்டுக் கதவு இலேசாக சாத்தப்பட்டிருந்தது.

நடுங்கும் கரங்களோடு ,

"அப்பா! அப்பா!!" எனக் கூப்பிட்டவாறே உள்ளே நுழைந்தவன், சடாரென அப்படியே நின்று விட்டான். பாயில் எந்தச் சலனமும் இன்றி அம்மா அப்படியே அசைவற்றுக் கிடக்க, அவளுக்கு அருகிலேயே சேலையொன்றில் சுருக்கிட்டு தொங்கிக் கொண்டிருந்தான் அப்பா. அப்பாவின் உடலிலும் அசைவில்லை. பயத்தில் கால்கள் தன்னிச்சையாக வேகமெடுத்தன. பக்கத்து வீட்டுக்கு ஓடினான். " அம்மாவை....அப்பா... கொலை செய்திட்டு... தானும் .....தொங்கிக் கொண்டிருக்கிறார்"

ஓடி இளைத்த குரலில் அவன் சொல்வதைக் கேட்டு அதிர்ந்து போன அயலவர்கள், இன்னும் சிலருக்கும் தகவலைக் கூறி அவர்களோடு சிறுவனின் வீட்டுக்குச் சென்றார்கள். அங்கே அவன் சொன்னபடி அம்மா சடலமாக பாயில் கிடக்க, அப்பா தூக்கில் தொங்கியபடி....!

" ஐயோ அம்மா!! அப்பா! எனக்குப் பசிக்குது, சாப்பாடு தர வாங்கோ... எழும்புங்கோ அம்மா" இருவரையும் மாறி மாறி பார்த்தபடி கண்ணீர் விட்டழத் தொடங்கினான். ஒரே நொடியில் அநாதரவாகிப் போன அந்தப் பச்சிளம் பாலகன்.

### கொலையாளியும் கொலையுண்டவரும்

**வேலாயுதம் சிவஞானம் (பெரியவன்)**

39 வயதான இவர்தான் மனைவியைக் கொன்றுவிட்டுதானும் தூக்கிட்டுதற்கொலை செய்து கொண்டவர். மலையகத்தைப் பூர்வீகமாகக் கொண்ட சிவஞானத்தை 'பெரியவன்' என்று சொன்னால் தான் ஊரில் தெரியும்.

முதலில் குமரபுரத்தில் இருந்து பின்னர் இராமநாதபுரத்துக்கு இடம்பெயர்ந்து அங்கேயே வசித்தார். குடும்பச் சூழலால் 8 ஆம் ஆண்டோடு படிப்பை உதறிவிட்டு, கூலி வேலைக்கு போய் வரத் தொடங்கினார். வட்டக்கச்சியில் ஒரு பெண்ணைக் காதலித்து, பின்னர் அவளையே வீட்டாருக்கு தெரியாமல் அழைத்து வந்து திருமணம் செய்தார். அந்தப் பெண் தான் கொலையுண்டவினோ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சிவஞானம் குகனேஸ்வரி (வினோ)

வட்டக்கச்சியைச் சொந்த இடமாக கொண்ட குகனேஸ்வரியை 'வினோ' என்றே எல்லோரும் அழைப்பர். 36வயது. பெரியவனைக் காதலித்து திருமணம் முடித்ததால் இவரின் வீட்டார் சேர்க்கவில்லை. இதனால் அவர் கணவனோடு தனிக்குடித்தனம் நடத்த தொடங்கினார். முதலில் பெரியவன் நன்றாகத் தான் அவளை வைத்திருந்தார். அவர்களின் மகிழ்வான வாழ்வின் பயனாக 3 பிள்ளைகளுக்கு தாயானாள் வினோ. இறுதிப்போரின் போது இடம்பெயர்ந்து, பின்னர் பரந்தன் சிவபுரத்தில் மீளக்குடியேறிய பின்னரே வினோவின் வீட்டார் அவளோடு மீண்டும் உறவாடத் தொடங்கினர். தன்னைப் புறக்கணித்த வீட்டார் மீண்டும் ஏற்றுக் கொண்டு உறவு பாராட்டியதால் வினோ மகிழ்ந்தாள். ஆனால் மறுபுறத்தில் பெரியவன் மதுவுக்கு அடிமையாகி, வீட்டில் தினமும் சண்டையும் சச்சரவும் பெருகி அவளது சந்தோசத்தை இல்லாமலாக்கத் தொடங்கினான். குடித்துவிட்டால் பெரியவனுக்கு நிதானமிருக்காது. வினோவைக் கண்டபடி தாக்குவான்.

### நித்திய சண்டையும் சமாதானமும்

2017 ஆம் ஆண்டு. பெரியவன் குடிவெறியில் வந்து, வினோவோடு சண்டை பிடித்து அவளைக் கண்டபடி அடித்துவிட்டான். இந்தத் தகவல் வினோ குடும்பத்தாருக்கு எட்டியது.

" இப்பிடி அடிச்சு நொருக்கவோ எங்கட பொம்பிளைப் பிள்ளையைக் கொண்டு போனவன்" என்று ஆவேசமடைந்த அவர்கள், " இனி எங்கட கண்காணிப்பில இருந்தால் தான் அவன் வினோவில கை வைக்க மாட்டான்" என்று நினைத்தவர்களாக, வட்டக்கச்சியில் உள்ள தங்களது காணிக்குள் தற்காலிக வீடமைத்து வினோ குடும்பத்தை குடியேற்றினர். ஆனால் அங்கும் பெரியவன் திருந்தவில்லை. அவன் தொடர்ந்தும் குடிக்கத்தான் செய்தான். இடைக்கிடை சண்டையும் நடக்கத்தான் செய்தது.

ஒருமுறை சண்டையின் போது பெரியவன் வினோவை எட்டி உதைவதை, வினோவின் மூத்த சகோதரி நேரடியாகக் கண்டுவிட்டாள். அவ்வளவுதான், கோபத்தின் உச்சிக்கே போனவர், பெரியவனோடு தர்க்கப்பட்டார்.

" குடிச்சிட்டு வந்து எங்கட காணிக்குள்ள, எங்கட கண்ணுக்கு முன்னால எங்கட தங்கச்சியையே உதையிறியோ? அவ்வளவு துணிவோ உனக்கு? வெளியில போ" என்று கலைத்து விட்டார். பின்னர் வெறி முறிந்ததும் பெரியவன் வந்து. " இனிமேல் சண்டை பிடிக்க மாட்டன்" என்று கெஞ்சிக் கூத்தாடி ஒற்றுமையானார்.

### இன்னொரு நாள் –

பேரப்பிள்ளைகள் பாடசாலைக்கு போகாமல் வீட்டில் இருப்பதைப் பார்த்த வினோவின் தாயாருக்கு சந்தேகம். உடனேயே அவர் வினோவின் வீட்டுக்குள் போய் பார்த்தார். சிவந்த விழிகளோடு ஒரு மூலையில் வினோ குந்தியிருந்தாள். எந்தவொரு உணவும் சமைக்காததால் பிள்ளைகள் பசியோடு இருந்தார்கள். " ஏன் பிள்ளை சமைக்கேல்லை? பிள்ளையளும் பள்ளிக்கூடம் போகமல் நிக்குதுகள்" என்று அவர் ஆதரவாகக் கேட்டார். அவர் கேட்ட மறுகணமே ஓவென்று அழத்தொடங்கினாள் வினோ.

" இரவிராவா நித்திரையும் கொள்ள விடாமல் இவன் என்னோட சண்டை பிடிச்சால் எப்பிடி சமைக்கிறது? எப்பிடி பிள்ளையளுக்கு சாப்பாடு குடுத்து, வெளிக்கிடுத்தி பள்ளிக்கூடம் அனுப்பிறது?" என்று அழுகையினூடே கேட்டாள் வினோ. தாயாருக்கும், கோபம் பொத்துக் கொண்டு வர அவர் அங்கிருந்த பெரியவனிடம் " ஏன் இப்பிடி சண்டை பிடிக்கிறியள்? குடிச்சால் ஒழுங்கா இருங்கோவன்" என்று காரசாரமாக கதைக்கத் தொடங்கினார்.

" சத்தியமா நான் சண்டை பிடிக்கேல்லை, இவள் சும்மா இல்லாததும் பொல்லாததும் சொல்லுறாள்" என்று பெரியவன் மறுக்க, வினோவின் தாயார் அங்கிருந்து வெளியேறிவிட்டார். பின்னர் வீட்டுத்திட்டம் கிடைத்ததால், மீண்டும் பரந்தன் சிவ புரத்துக்கு போக வேண்டிய நிலை வினோவுக்கு. வேறுவழியின்றி அவளும், இரண்டு ஆண்பிள்ளைகளும் பெரியவனோடு பரந்தனுக்குச் சென்று குடியேறினர். மூத்த பெண் பிள்ளை பேர்த்தியார் (வினோவின் அம்மா) வீட்டில் தங்கியிருந்து படிக்கத் தொடங்கினாள்.



## சைக்கோத்தனமும் சந்தேகமும்

பரந்தனில் குடியேறியது, பெரியவனுக்கு இன்னும் வசதியாகப்போய்விட்டது. வினோ வீட்டாரின் கண்காணிப்பு இல்லையென்பதால், கசிப்பு, கஞ்சா என்று உழைக்கும் பணத்தையெல்லாம் போதைக்கு கொட்டத் தொடங்கினான். போதைப்பழக்கம் கூடக் கூட, வினோவுடனான பெரியவனின் சண்டையும் அதிகரித்தது.

பெரியவன் சண்டை போடும் விதம் ஒருவித சைக்கோத்தனமாக இருந்ததாக அயலவர்களும், வினோவின் வீட்டாரும் சொல்கிறார்கள்.

நிறைவெறியில் வரும் பெரியவன் வந்தவுடனேயே சண்டையைத் தொடங்கமாட்டான். பிள்ளைகள் உறங்கிய பின்னர், இரவு பதினொரு மணியளவில் தான் அவன் மிருகமாக மாறத் தொடங்குவான். மிருகமானதும் முதலில் வினோவின் நடத்தை குறித்து தகாத வார்த்தைகளை அள்ளி வீசுவான்.

அப்படியே வார்த்தைகள் தடித்து மிருகத்தனத்தின் உச்சிக்கு போனதும், வினோவை கண்டபடி அடித்து துன்புறுத்தத் தொடங்குவான். இப்படி ஆடையெல்லாம் கிழிந்த நிலையில், அடி வாங்கிய வலியோடும் பிள்ளைகளோடும் அயல் வீடுகளுக்கு வினோ அடைக்கலம் தேடி ஓடுவது பலமுறை நடந்திருக்கிறது.

## குடிகாரன் பேச்சு....

எவ்வளவு காலம் தான் இப்படி அடைக்கலம் தேடி வினோவும் அயல்வீட்டுக்கே ஓடுவது?

பொறுத்துப் பார்த்த வினோ, தன் மீதான பெரியவனின் வன்முறைகள் குறித்தும், அவனது கசிப்பு பாவனை குறித்தும் பொலிஸில் முறையிட்டாள். களத்தில் இறங்கிய பொலிஸ் பெரியவனைக் கைதுசெய்தது. 14 நாட்கள் பெரியவன் சிறையில் அடைக்கப்பட்டான். அவனைப் பார்வையிட வினோவின் சகோதரி ஒருவர் சென்றார். அவரிடம், " இனி நான் சண்டையே பிடிக்க மாட்டன். என்னை வெளியில எடுத்துவிடச் சொல்லுங்கோ" என்று கெஞ்சினான் பெரியவன். அவனது வார்த்தைகளை நம்பிய வினோவின் சகோதரியும், அதற்கு சம்மதித்தார். வினோவுக்கு அவர் உறுதிமொழி வழங்க, அவளும் சமாதானமானாள். இறுதியில் வினோவே ,பெரியவன் சிறையில் இருந்து வெளிவர பிணை வைத்தாள். கொஞ்ச நாள்கள் ஒழுங்காக இருந்த பெரியவன், மீண்டும் கசிப்பு மரத்தில் ஏறினான். குடிகாரன் பேச்சு சில நாட்களிலேயே காணாமல் போச்சு. குடியும், சண்டையும் மீண்டும் அந்தக் குடும்பத்தின் மகிழ்ச்சியைத் தின்னத் தொடங்கின.



## கசிப்போடு சிக்கினான்

கசிப்பு, கஞ்சா பாவனையில் ஊறிய பெரியவன், அதன் அடுத்த கட்டமாக 'குடு'எனப்படும் ஹெரோய்னையும் பயன்படுத்த தொடங்கினான். இப்படி போதையின் தன்மை கூடக் கூட, சண்டையும் அதன் விளைவுகளும் கடுமையாக இருந்தன. ஒருமுறை வினோவை கத்தியால் குத்த பெரியவன் முயன்றான். ஆனால் நல்லவேளையாக அவனை அயலவர்கள் தடுத்து நிறுத்தியதால்,விபரீதம் தவிர்க்கப்பட்டது.

இதன் இன்னொரு கட்டமாக கசிப்பு விற்பனையிலும் இறங்கினான் பெரியவன். பரந்தன் 10 ஒழுங்கையில் வசிக்கும் ஒருவர், தர்மபுரத்திலிருந்து கசிப்பை வாங்கி வந்து பெரியவனுக்கு கொடுப்பார். அதனை விற்று, காசாக்கி, தன் பங்கை எடுத்துக் கொண்டு, மிகுதிப் பணத்தை கசிப்பை கொண்டு வந்து தந்தவரிடம் கொடுப்பான் .இப்படி அவன் ஊரில் கசிப்பு வியாபாரியாகவும் மாறத்தொடங்கினான்.

ஒருமுறை குடிவெறியில், வினோவை பெரியவன் அடித்ததால் வினோ மீண்டும் பொலிஸில் முறையிட்டாள். அது குறித்து விசாரிக்க வீட்டுக்கு பொலிஸ் வந்தபோது, விற்பனைக்காக வைத்திருந்த கசிப்போடு பெரியவன் மாட்டிக் கொண்டான். அதன் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டான் பெரியவன் .

## ஒரு வருடத்தில் 14 முறைப்பாடுகள்

பெரியவனின் அட்டகாசம் வரவர அதிகரித்துச் சென்றதே தவிர, குறைவதாக இல்லை.

நித்தமும் குடிப்பதும், வீட்டுக்கு வந்து வினோவோடு சண்டையிடுவதுமாகவே இருந்தான். " அந்த வீட்டில எப்பவாவது சண்டை இல்லாமல் இருந்தால் தான் அதிசயம். பாவம் அந்தப் பிள்ளை என்னெண்டுதான் உந்த ஆய்க்கினையளை தாங்கினாளோ தெரியாது. இவன் சண்டை பிடிக்கிறதால பிள்ளையளும் ஒழுங்காப் படிக்கேலாத நிலை. நாலைஞ்சு வீடு தள்ளியும் சத்தம் கேக்கும் . அந்தளவுக்கு கொடுமை " என்று அயலவர்களே அங்கலாய்க்கிறார்கள்.

இந்தச் சித்திரவதைகளின் உச்சத்தை , வினோ பொலிஸில் செய்த முறைப்பாடுகளை வைத்தே அறியமுடியும். ஒரு வருடத்துக்குள் மட்டும் 14 முறைப்பாடுகளை வினோ செய்திருக்கிறாள். இதனால் பெரியவன் அடிக்கடி கைதாவதும், சிறையில் இருப்பதும், வினோ மன்னித்து பிணையில் எடுப்பதும் தொடர்கதையாக இருந்தது. ஒருமுறை 4 மாதங்கள் தொடர்ச்சியாக சிறைக்குள் இருந்தும் பெரியவனுக்கு புத்தி வரவேயில்லை. வினோவின் வாழ்வு முழுவதும் வன்முறைகளால் முற்றுகையிடப்பட்டிருந்தது.

## வேலைக்கு போகாதே!

குடிக்கும் பணத்தின் பெரும்பகுதியை போதைக்கே பெரியவன் செலவழிப்பதால், வீட்டுக்கு பெரிதாக கொடுப்பதில்லை. வினோ தான் ஏதாவது வேலை செய்து பிள்ளைகளின் உணவு, கல்வி என்பவற்றுக்கான செலவைப் பார்த்து வந்தாள். ஆனால் அதற்கும் பெரியவன் இடமளிக்கவில்லை.

சிவில் பாதுகாப்பு படையில் வேலைக்குச் சென்றால், கொஞ்சம் அதிகமாகச் சம்பாதித்து பிள்ளைகளுக்கு தேவையானதை செய்யலாமென நினைத்தாள் வினோ.

அதன்படி அங்கு பணிக்கும் செல்லத் தொடங்கினாள். ஆனால் ஒருமுறை அவள் வேலை செய்யும் இடத்துக்கு போய், அவளை வேலைக்கு போகவேண்டாமென்று கூறி பலர் முன்னிலையில் தாக்கினான் பெரியவன். இன்னொரு நாள் பரந்தன் ரயில் நிலையத்துக்கு அருகில் வைத்து, வினோவை அடித்தான். அந்தவேளை வீதியில் பயணித்த இராணுவத்தினரின் கண்களில் இந்தக் காட்சி தென்பட, பெரியவனை 'கவனித்து' அனுப்பினர். அதன்பிறகு இப்படி அடிவாங்கிக் கொண்டு ஏன் வேலைக்கு சென்று அவமானப்பட வேண்டும்?' என நினைத்த வினோ, சிவில் பாதுகாப்பு படையில் இருந்து விலகினாள். கிளிநொச்சியில் இன்னொரு இடத்துக்கு பின்னர் வேலைக்குப் போனாள். அங்கும் பெரியவன் போய் இதே கதை, அதே அடி, உதை. அந்த வேலையையும் உதறினாள் அவள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "கொல்லுவன் ஒருநாள்!" முன்னரே சொன்ன பெரியவன்

தன் மீது அடிக்கடி பொலிஸில் வினோ முறையிடுவதாலும், அதனால் தான் சிறைக்குச் செல்ல வேண்டியிருந்தாலும் பெரியவனுக்கு வினோ மீதான வன்மம் அதிகரிக்கத் தொடங்கியிருந்தது. அதனால் அவளைக் கொலை செய்யப்போவதாக அவளுக்கும், ஏனையோருக்கும் சொல்லத் தொடங்கினான்.

"அடிக்கடி பொலிஸிலை இவள் கொம்ப்ளைண்ட் குடுக்கிறாள். அதாலை பொலிஸும் என்னைத் தேடி வாறாங்கள். ஒரு நாளைக்கு இவளையும் கொலை செய்து போட்டு, நானும் செத்திடுவன்" என பல தடவை சண்டையை சமரசம் செய்ய வருபவர்களிடம் பெரியவன் சொல்லியிருக்கிறான். ஆனால் அவன் ஆத்திரத்தாலும், தங்களை மிரட்டவுமே அப்படிச் சொல்வதாகவும், ஒருபோதும் அந்த அளவு கொடூரமான செயலில் இறங்க மாட்டான் எனவும் வினோவின் வீட்டாரும், அயலவரும் நினைத்திருந்தனர். அதேபோல வினோவும் தனக்கு ஏதும் விபரீதம் நடக்கக்கூடுமென தாயாரிடம் முன்னரே கூறியிருக்கிறாள்.

" இவனோட வாழ ஏலாதம்மா. ஒரே சித்திரவதை. அவனொரு சைக்கோ. ஒருநாளைக்கு எனக்கு ஏதும் நடக்கும். அப்ப எல்லாரும் கவலைப்படுவியள்" என்று தாயாரிடம் சொல்லி அழுதிருக்கிறாள் வினோ.

### காசைக் கட்டு, வீட்டை போகாதே!

குடும்ப வன்முறையில் தொடர்ச்சியாக ஈடுபடுவதால் கச்சேரியில் இயங்கும் சிறுவர் அபிவிருத்திக் குழுவில் உள்ள 'பெண்கள் மீதான வன்முறைகளைத் தடுக்கும்' உத்தியோகத்தரால் விசாரணைக்காக அழைக்கப்பட்டான் பெரியவன். அந்த விசாரணையின் போது அவன் நாளொன்றுக்கு எவ்வளவு பணம் சம்பாதிப்பான்? என்று கேட்கப்பட்டது. அதற்கு அவன் " 1500 ரூபா உழைப்பன்" என்றிருக்கிறான்.

" சரி, உன் தேவைக்கு 300 ரூபாவை எடுத்துக் கொண்டு குடும்பச் செலவுக்காக நாளொன்றுக்கு 1200 ரூபா வீதம் கச்சேரியில் கட்ட வேண்டும். அதை நாங்கள் உன் மனைவியிடம் கொடுப்போம். அத்தோடு உன் மனைவியும் பிள்ளைகளும் இருக்கும் வீட்டுக்கு நீ போகவும் கூடாது. வீட்டுக்கு போனாலோ பணத்தைக் கட்டத் தவறினாலோ பொலிஸில் சொல்லி கைது செய்விப்போம்" என்று உத்தரவிடப்பட்டது. அதன்படி பணத்தை கச்சேரியில் பெரியவன் கட்ட, அதை கச்சேரிக்கு சென்று எடுத்து வந்து வினோ குடும்பச் செலவைக் கவனிக்கத் தொடங்கினாள்.

### வீடு மாறியும் ஆள் மாறவில்லை

வழக்கம் போல அண்மையிலும் தகராறு. வினோ பிள்ளைகளோடு தாய்வீட்டுக்கு சென்று விட்டாள். மீண்டும் வழக்கம் போல 20 நாட்களின் பின்னர் அங்கு போன பெரியவன், மனைவியை சமாதானம் செய்து வாடகை வீடொன்றுக்கு அழைத்துச் சென்று தங்கினார். ஏனெனில் ஏற்கனவே வினோ இருக்கும் வீட்டுப் பக்கம் சென்றால், பொலிஸார் கைது செய்வர் என்று கச்சேரியில் (பெண்களுக்கு எதிரான வன்முறையைத் தடுக்கும் அலுவலர்) உத்தரவிட்டிருந்ததாலேயே இப்படி வாடகை வீட்டுக்கு வினோவை அழைத்துச் சென்றிருந்தான் பெரியவன். வீடு மாறினாலும் பெரியவன் மாற வேண்டுமே?

அங்கும் அடிபிடி. அந்த வீட்டுக்கு போன இரண்டே நாட்களில் மீண்டும் தாய்வீட்டுக்கு ஓடி வந்தாள் "அந்த வீட்டுக்கு முன்னால ஒரு கடை இருக்கு. அந்தக் கடைக்காரனோட என்னைத் தொடர்புபடுத்தி கதைச்சு அடிக்கிறான்" என்பது இம்முறை வினோவின் குற்றச்சாட்டு.

அதன் பின்னர் பிள்ளைகளின் படிப்புக்காக பரந்தனிலுள்ள தன் வீட்டுக்கு வினோ போனாள். அங்கு செல்லக்கூடாது என கச்சேரியால் பெரியவனுக்கு உத்தரவிடப்பட்டிருந்ததால், அவனைப் பற்றிய பயமில்லை என வாரநாட்களில் பரந்தன் வீட்டிலும், சனி - ஞாயிறு தினங்களில் தாய்வீட்டிலுமாக வினோ தங்கத் தொடங்கினாள். கொலைச் சம்பவம் நடப்பதற்கு இரண்டு நாள்களுக்கு முன்னர் தான் வினோ தாய் வீட்டில் இருந்து, பரந்தனுக்குப் போயிருந்தாள். இம்முறை அவள் போகையில் அங்கு அப்பாவி போல வந்தான் பெரியவன். சரி, இருக்கட்டும் என்று வினோவும் எதுவும் சொல்லவில்லை. அதனால் அங்கேயே நின்றான் பெரியவன். அங்கு நின்றபடிதான் சம்பவதினத்தன்றும் வேலைக்குப் போனான். ஆனால் அதன் பின்னர் தான் அந்தக் குடும்பத்தையே சிதைத்த கோரம் நடந்தது.




# அன்றைக்கு என்னதான் நடந்தது?

பெரியவன் மீண்டும் திருந்தியவனாக வந்து சேர்ந்த முதலிரு நாட்களும் அந்த வீட்டில் அதிசயமாக சண்டை ஏதும் நடக்கவில்லை.

இரண்டாம் நாள் (30.03.2021) கச்சேரிக்கு போய் காசைக் கட்டிவிட்டு வந்திருந்தான் பெரியவன். அடுத்த நாள் (01.04.2021) பெரியவன் வேலைக்கும், பிள்ளைகள் பாடசாலைக்கும் போக, கச்சேரிக்குப் போனாள் வினோ. அங்கு குடும்பத்துக்கான பணத்தை எடுத்துக்கொண்டு, கிளிநொச்சி சந்தைக்கு போய் மரக்கறியும், கணவாயும் வாங்கினாள். வரும் வழியில் கடைசி மகனை பாடசாலைக்கு போய் அழைத்து வர எண்ணினாள். ஆனால் அவள் போவதற்கிடையில் மகன் வீட்டுக்கு போய்விட்டான்.

இதற்கிடையில்-



கிளிநொச்சிப் பகுதியில் வேலை செய்து கொண்டிருந்த பெரியவனுக்கு மூன்று முறை தொலைபேசி அழைப்புகள் வந்துள்ளன. அந்த அழைப்பு வரும்போதெல்லாம் ஏனைய வேலையாட்களை விட்டு சற்று தள்ளிப்போய் கதைத்து விட்டு கொஞ்சம் இறுகிய முகத்தோடு வந்தவன்,

"மகன்ர பள்ளிக்கூடத்தில கூட்டமாம், ஒருக்கா போட்டு வாறன்" என்று சொல்லி இடைநடுவிலேயே வேலைத்தளத்தில் இருந்து வெளியேறி வீட்டுக்கு வந்துவிட்டான். வந்தவன் கிட்டத்தட்ட ஒரு போத்தல் கசிப்பு குடித்து விட்டு, மிருகமாக மாறிக் கொண்டிருந்த தருணத்திலேயே வினோ வீட்டுக்கு வந்து சேர்ந்தாள். அவள் குளிர்பானத்தைக் கரைத்து பிள்ளைக்கும், தனக்கும் தரும் வரை காத்திருந்த பெரியவன், உடை மாற்ற வினோ அறைக்குள் போனதும், மிருகக் குணத்தை காட்டி அவளை கழுத்தை நெரித்துக் கொன்றுவிட்டான். பின்னர் பயத்தாலோ, குற்ற உணர்ச்சியாலோ தானும் தூக்கில் தொங்கி விட்டான். குடிவெறியும், சந்தேகமும் , அவசரப்புத்தியும் அவர்களது மூன்று பிள்ளைகளின் வாழ்வையும் இருட்டுக்குள் தள்ளிவிட்டது. தந்தை செய்த மோசமான செயலால் அந்தப் பிள்ளைகளின் எதிர்காலமே சிதைந்து விட்டதே.



# போதையை ஒழியுங்கள்!

வினோ கொல்லப்படுவதற்கும், அவளது வாழ்க்கை துன்பியலாக மாறியமைக்கும் முக்கியமான காரணம் பெரியவனின் போதைப்பொருள் பாவனைதான்.

பரந்தன் சிவபுரம் கிராமத்தில் ஐந்து பேர் கசிப்பு விற்பனை செய்து வருகின்றனர். இவர்களில் சிலர் கசிப்போடு கஞ்சாவும் சேர்த்து விற்பனை செய்கின்றனரெனத் தெரிவிக்கப்படுகிறது. தர்மபுரம் பகுதியிலிருந்து நள்ளிரவு மற்றும் அதிகாலையில் கசிப்பை கொண்டுவந்து விற்பனை செய்ய கொடுத்துவிட்டுச் செல்வர். ஒரு பெப்சி போத்தலளவான கசிப்பு 800 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகிறது. கஞ்சாவை எங்கிருந்து கொண்டுவந்து கொடுக்கிறார்கள் என தெரியவில்லை. அதிகாலையில் மோட்டார் சைக்கிளில் வருபவர்களே கஞ்சா விநியோகத்தை செய்வதாகவும் முன்னர் ஹெரோயின் போதைப் பொருளை கொண்டு வந்து விற்பனைக்காக கொடுத்தவர் விபத்தொன்றில் உயிரிழந்த பின்னர் தற்போது வேறொருவர் கொண்டுவந்து கொடுப்பதாகவும் மூன்று வீடுகளில் ஹெரோயின் விற்பனை செய்யப்படுவதாகவும் அந்தப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.


"பொலிஸாருக்கு யாரும் தகவல் கொடுத்தால், எந்த நம்பரில் இருந்து தங்களுக்கு தகவல் வந்தது என பொலிஸார் என்னிடம் கூறுவார்கள்" என்று கூறி மிரட்டுகிறாராம் சிவபுரத்திலுள்ள பிரபல போதைப்பொருள் வியாபாரி.

அதேபோல் போதைப்பொருள் விற்பனை செய்யும் மற்றொரு குடும்பத்தில் கணவன் கைது செய்யப்பட்டாலும் மனைவி விற்பனையை தொடர்ந்துள்ளார். பின்னர் கணவனை பிணையில் மனைவி வெளியில் எடுத்துவிட்டார்.

இப்பகுதியில் இடம்பெறும் சட்டவிரோத போதைப்பொருள் விற்பனையால் 15 வரை வயதான சிறுவர்கள் தொடக்கம் வயதானவர்கள் வரை கசிப்பு ,கஞ்சா,ஹெரோயினை பாவித்து விட்டு குடும்பத்தில் சண்டை சச்சரவுகளில் ஈடுபடுகின்றனர்.

எனவே போதைப்பொருள் விற்பனையாளர்களுக்கு பிணை வழங்காது நீண்ட காலம் சிறைத் தண்டனை வழங்கி குறித்த பகுதியில் இடம்பெறும் சட்டவிரோத போதைப்பொருள் பாவனையை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அந்தப்பகுதி மக்களும் பொது அமைப்புகளைச் சேர்ந்தோரும் கோரிக்கை விடுத்துள்ளனர். அண்மைக்காலத்தில் கிளிநொச்சி பகுதியில் களவு, கொலை போன்ற பாரதூரமான குற்றங்கள் பல்கிப்பெருகியமைக்கு காரணம் போதைப்பொருள் பாவனையே. இதனைக் கவனத்திலெடுத்து அதிகாரிகள். அரசியல்வாதிகள் மற்றும் பொது அமைப்புகள் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே எல்லோரதும் எதிர்பார்ப்பாகும்.

(18ஆம் பக்கம் பார்க்க)



### சண்டையைத் தூண்டியது யார்?

பெரியவன் இப்படி மனைவியை சந்தேகிப்பதற்கும், அவளை அடித்துத் துன்புறுத்துவதற்கும் போதைப்பாவனையே பிரதான காரணமென்றாலும், இன்னொரு காரணமும் உண்டு என்கின்றனர் ஊரவர்கள். அந்தக் காரணம், அதே ஊரில் உள்ள ஒரு பெண்.

" அந்தப் பெண்ணுக்கு ஐந்து திருமணம். ஒவ்வொரு திருமணத்தின் போதும் ஒவ்வொரு பிள்ளைகள். அப்படியான பெண்ணுடன் ஏற்பட்ட தொடர்பே பெரியவனை பெரிதும் மாற்றியது. வினோவைப் பற்றி இல்லாததும் பொல்லாததும் சொல்வதே அந்தப் பெண்ணின் முக்கியமான வேலை. வினோ எப்போது வெளியே போகிறாள் என்பது தொடக்கம் என்ன உடை என்ன வர்ணத்தில் அணிந்திருந்தாள் என்பது வரை எல்லாவற்றையும் அந்தப் பெண் பெரியவனுக்கு சொல்லி வந்தாள்.


இருவருக்குமிடையே சண்டையை மூட்டுவதில் அந்தப் பெண் தீவிரமாகச் செயற்பட்டுள்ளார். வினோ வீட்டை விட்டு எங்காவது போனால் உடனேயே அதுபற்றி கண், காது,மூக்கு எல்லாம் வைத்து பெரியவனுக்கு தொலைபேசியில் போட்டுக் கொடுப்பதுதான் அந்தப் பெண்ணின் முதல்வேலை. அதைக் கேட்டு உண்மையென நம்பியே, மனைவியைச் சந்தேகப்பட்டு, அடித்து துன்புறுத்தி கடைசியில் கொலையும் செய்துவிட்டான் பெரியவன் என்கின்றனர் ஊரவர்கள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# சீனப் பட்டினம்:

# ஒரே நாடு, ஒரே சட்டம்?



நிலாந்தன்

கொழும்புத் துறைமுகத்துக்கு அருகே சீனாவால் கட்டப்பட்டு வரும் நிதி நகரம் தொடர்பில் சர்ச்சைகள் எழுந்திருக்கின்றன. இந்தப்பட்டினம் மகிந்த ராஜபக்சவின் காலத்தில் கட்டப்படத் தொடங்கியது. கொழும்பின் இதயமான ஒரு பகுதியில் கடலை மூடி இந்த நகரம் உருவாக்கப்பட்டது.ஏறக்குறைய 216 ஹெக்டேயர் நிலப்பரப்பு இவ்வாறு உருவாக்கப்பட்டது. இதில் 116 ஹெக்டேயர் நிலப்பரப்பு சீனக் கொம்பனிக்கு உரித்தாக இருக்கும். சுமார் 90 ஹெக்டேயர் நிலப்பரப்பு இலங்கை அரசாங்கத்தின் உரித்தாக இருக்கும். சீனக் கொம்பனிக்கு உரித்தாக உள்ள நிலப்பரப்பில் சுமார் 20 ஹெக்டேயர் நிலப்பரப்பு முழுக்க முழுக்க அந்தக் கொம்பனிக்கே சொந்தமாக மாற்றப்பட்டுவிடும். அது இலங்கைத் தீவின் சட்டதிட்டங்களுக்கு உட்படாது. சீனக் கொம்பனியே கடந்த தேர்தல்களின் போது ராஜபக்சக்கள் தரப்புக்கு பெருமளவு நிதி உதவிகளை வழங்கியதாக ஒரு குற்றச்சாட்டு உண்டு. இவ்வாறு கடலை மூடி ஏன் ஒரு நகரத்தை உருவாக்க வேண்டும் என்ற கேள்வி அப்போதே கேட்கப்பட்டது. இலங்கைத் தீவில் குறிப்பாக கொழும்பில் போதிய அளவு நிலம் இருக்கத்தக்கதாக எதற்காக கடலை மூட வேண்டும் என்ற கேள்வி அப்போது எழுந்தது. கேள்விக்கு உரிய பதில் எதுவெனில், கொழும்பின் இதயமான பகுதியில் சீனா ஒரு நகரத்தை கட்டியெழுப்ப விரும்பியது என்பதுதான். கொழும்பின் ஏனைய பகுதிகளில் நிலத்தை வாங்கி அந்த நகரத்தை உருவாக்க அவர்கள் விரும்பவில்லை. கொழும்பின் இதயமான பகுதியில், அதிலும் குறிப்பாக அரசியல் அதிகாரத்தின் மையம்; கொழும்பு மேட்டுக்குடியின் மையம்; ராஜதந்திரிகளின் மையம்; நிதி நடவடிக்கைகளின் மையம்; உல்லாசப் பயணிகளின் கவர்ச்சி மையம் என்று கருதத்தக்க ஓரிடத்தில் கடலில் சீனா ஒரு புதிய நகரத்தை கட்டியிருக்கிறது. இதனால் இலங்கைத் தீவின் வரைபடமே மாற்றப்பட்டிருக்கிறது. அதாவது இலங்கைத் தீவின் நிலப்பரப்பு அதிகரித்திருக்கிறது.

மகிந்த ராஜபக்சவின் காலத்தில் தொடங்கப்பட்ட இந்தத்திட்டம், பின்னர் ஆட்சி மாற்றம் நிகழ்ந்த போது இடைநிறுத்தப்பட்டது. எனினும் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தோடு சீனாவால் மேற்கொள்ளப்பட்ட சமரச முயற்சிகளின் பின் இந்த நகரம் சர்வதேச நிதி நகரம் என்று பெயர் மாற்றப்பட்டு மறுபடியும் தொடர்ந்து கட்டப்படுவதற்கு அனுமதி வழங்கப்பட்டது.அதற்கான உடன்படிக்கை மீள எழுதப்பட்டது.

இந்நகரத்தை நிர்வகிப்பதற்காக அரசாங்கம் அண்மையில் கொழும்பு துறைமுக நகர பொருளாதார வலைய ஆணைக்குழு சட்டமூலம் ஒன்றை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கிறது. இச்சட்டமூலம் முன் சொன்ன சீனக் கொம்பனிக்கு அதிகம் அனுகூலங்களை வழங்குகிறது. அது குறிப்பிட்ட துறைமுக நகரத்தை ஒரு சீன மாநிலமாக மாற்றுகிறது என்று ஜே.வி.பி. குற்றம்சாட்டுகிறது.

இலங்கைத் தீவில் இதுபோன்ற முதலீடுகளுக்கு முதலீட்டு சபைச் சட்டம் மூலோபாய அபிவிருத்திச் சட்டம் என்ற இரண்டு சட்டங்கள் உண்டு. இச்சட்டங்கள் மூலமாகவும் வரிச்சலுகைகளை வழங்க முடியும். ராஜபக்சக்கள் சீன முதலீடான ஷங்கரில்லா ஹோட்டலுக்கு இவ்வாறு இருபத்தைந்து வருட வரிச்சலுகைகளை வழங்கியிருக்கிறார்கள்.

ரணில் விக்ரமசிங்க அம்பாந்தோட்டை துறைமுகத்தில் சீனக் கொம்பனிக்கு வரிச்சலுகைகளை வழங்கியிருந்தார். இவ்வாறு இரண்டு சட்டங்கள் இருக்கத்தக்கதாக இப்பொழுது ஒரு புதிய சட்டமூலத்தை ஏன் அரசாங்கம் சமர்ப்பித்திருக்கிறது? அதன்மூலம் துறைமுக நகரத்தை நாட்டின் சட்டங்களுக்கு கட்டுப்படாத ஒன்றாகவும், தனி விசேட அந்தஸ்தைப் பெற்ற ஒரு சுயாதீன நகரமாகவும் ராஜபக்சக்கள் கட்டியெழுப்ப முற்படுவதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டுகின்றன.இவ்வாறு எதிர்க்கட்சிகள் முன்வைக்கும் குற்றச்சாட்டுகளைப் பின்வருமாறு தொகுத்துப் பார்க்கலாம்...

முதலாவது துறைமுக நகரம் எந்த ஒரு உள்ளூராட்சி மன்றத்தினதும் ஆளுகைக்குள் வராத ஒரு விசேஷ கட்டமைப்பாக இயங்கும். உள்ளூராட்சி மன்ற நிர்வாகங்களை அங்கு வாழும் மக்கள் வாக்களிப்பின் மூலம் தெரிவு செய்கிறார்கள். உள்ளூராட்சி மன்றங்கள் மக்கள் பிரதிநிதிகளால் நிர்வகிக்கப்படுகின்றன. ஆனால் துறைமுக நகரத்தை ஜனாதிபதியால் நியமிக்கப்படும் ஒரு விசேஷ ஆணைக்குழுவே நிர்வகிக்கும். இந்த ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் இலங்கைப் பிரஜைகளாக இருக்க வேண்டும் என்றில்லை.

இரண்டாவது, இந்த ஆணைக்குழுவின் பிரதிநிதிகளுக்கு எதிராக இலங்கை தீவில் எந்த ஒரு நீதிமன்றத்திலும் வழக்குத் தொடர முடியாத விடுபாட்டுரிமை உண்டு.

மூன்றாவது இந்த ஆணைக்குழுவுக்கு விசேட நிதி சார் அதிகாரங்கள் உண்டு. இந்த ஆணைக்குழுவுக்கு தனி ஒரு நிதியம் உண்டு. அரச வருமானத்தின் திரட்டப்பட்ட நிதியில் இருந்து பணத்தை பெற்றுக்கொள்ள நாடாளுமன்றத்தின் அங்கீகாரம் தேவை. ஆனால் துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுவானது நாடாளுமன்றத்தின் அங்கீகாரம் தேவைப்படாத தனி ஒரு நிதியம் ஒன்றைப் பேண முடியும்.

நான்காவது துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுவுக்கு பல்வேறு வரிச்சலுகைகளை வழங்கும் அதிகாரம் உண்டு. பொதுவாக நாடாளுமன்றத்தால் மாத்திரமே வரிச்சலுகை வழங்கப்படலாம். இங்கே இந்த ஆணைக்குழுவுக்கு வரிச்சலுகை வழங்கும் அதிகாரம் தரப்பட்டிருக்கிறது.

ஐந்தாவது, அரசாங்கத்துக்கு கிடைக்கும் பணம் கணக்காய்வாளர் தலைமை நாயகத்தின் மேற்பார்வைக்கு கட்டுப்படும். ஆனால் துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுவின் நிதி நடவடிக்கைகள் தனியார் நிறுவனம் ஒன்றின் மூலமாகவே கணக்காய்வு செய்யப்படும்.

ஆறாவது அரச நிறுவனங்கள் நாடாளுமன்றத்தின் கோபா (Copa) மற்றும் கோப் (Cope) ஆகிய குழுக்களுக்கு முன் பதில் கூறுமாறு அழைக்கப்படலாம். ஆனால் இது துறைமுக நகர பொருளாதார வலய ஆணைக்குழுவுக்கு பொருந்தாது.

ஏழாவது, துறைமுக நகரத்தில் வெளிநாட்டவர்கள்தான் முதலீடு செய்யலாம் . இலங்கையர்கள் முதலீடு செய்வது என்றால் வெளிநாட்டு நிறுவனம் ஒன்றினூடாகத்தான் முதலீடு செய்யலாம்.

எட்டாவது, துறைமுக நகரத்தில் தொழில் செய்பவர்களுக்கு ஊழியம் சீன நாணயமான யுவான் மூலமே வழங்கப்படும்.

ஒன்பதாவது, இங்கு சேவையாற்றுபவர்களின் வருமானம் , வருமான வரியிலிருந்து விடுவிக்கப்பட்டிருக்கிறது.

பத்தாவது, இலங்கை பிரஜைகள் கொழும்புத் துறைமுக நகரத்தின் சேவைகளை பணம் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். எனினும் அங்கே கொள்வனவு செய்யும் பொருள்களை நகரத்துக்கு வெளியே கொண்டுவரும் போது அவற்றுக்கு வரி செலுத்த வேண்டும்.

பதினொன்றாவது துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுவின் ஆளுகைக்குட்பட்ட பிரதேசத்தில் ஏற்படும் பிணக்குகளை சர்வதேச அமைப்பு ஒன்றின் மூலமாகவே தீர்த்துக் கொள்ளலாம்.

இவையாவும் துறைமுக நகரத்துக்கான புதிய சட்டமூலம் குறித்து எதிர்க்கட்சிகள் முன்வைக்கும் குற்றச்சாட்டுக்கள் ஆகும். இந்தக் குற்றச்சாடுக்களை முன்வைக்கும் எதிர்கட்சிகளில் பிரதானமான சஜித் அணி இந்த நகரத்தை 'சீன ஈழம்' என்று வர்ணிக்கிறது. இங்கே முக்கியமாகக் கவனிக்க வேண்டியது என்னவெனில் சீனப் பட்டினத்துக்கு எதிராக சிங்களப் பொது உளவியலைத் தூண்டிவிட அவர்கள் கையிலெடுத்திருப்பது ஒரு விதத்தில் தமிழின எதிர்ப்புத்தான். அதாவது சீனப்பட்டினத்தை அவர்கள் ஈழத்துடன் ஒப்பிடுகிறார்கள். ஈழத்தைக் கொடுக்காத நாங்கள் எப்படி சீனாவுக்கு இப்படி ஒரு நகரத்தைக் கொடுப்பது? என்று அவர்கள் கேட்கிறார்கள். நாட்டில் சிங்கள மக்களைத் தூண்டுவதற்கு எதோ ஒரு விதத்தில் இனவாதத்தைத்தான் பேசவேண்டியுள்ளது.

இக்குற்றச்சாட்டுகளின்படி துறைமுக நகரமானது இலங்கை தீவில் தற்போது நடைமுறையில் உள்ள 21 சட்டங்களிலிருந்து விடுபாட்டுரிமையைக் கொண்டிருக்கிறது.இது துறைமுக நகரத்தை இலங்கைத்தீவில் தனி அந்தஸ்துடைய இலங்கை தீவின் பெரும்பாலான சட்டங்களுக்கு கட்டுப்படாத ஒரு தனி நிர்வாகப் பிரதேசமாக காட்டுகிறது. ராஜபக்சக்கள் பெருமையோடு கூறிக் கொள்கிறார்கள் 'ஒரே நாடு ஒரே தேசம் ஒரே சட்டம் 'என்று. ஆனால் சீனத் துறைமுக நகரமானது அவ்வாறு நாட்டில் ஒரே சட்டம் இல்லை என்பதையே தெளிவாகக் காட்டுகிறது. அதுதான் உண்மை.

தமிழ் மக்களை நசுக்குவதற்காக எந்தப் பிசாசோடும் கூட்டுச்சேரத் தயார் என்று முன்னாள் ஜனாதிபதி ஜெயவர்த்தனா கூறினார். இவ்வாறு பிசாசுகளை கூட்டுச் சேர்ந்து தமிழ் மக்களின் போராட்டத்தை நசுக்கிய இலங்கை அரசாங்கம் இப்பொழுது அந்தப் பிசாசுகளின் ஒன்றின் கடன் பொறிக்குள் இருந்து விடுபட முடியாத ஒரு நிலை தோன்றியிருக்கிறது. இலங்கையில் இப்பொழுது கிட்டத்தட்ட ஆறு லட்சம் சீனர்கள் இருப்பதாக ஒரு உத்தியோகப்பற்றற்ற கணக்கு உண்டு.

இம்மாதம் இறுதியளவில் சீனாவின் பாதுகாப்பு மந்திரி இலங்கைக்கு வருகிறார்.ஏறக்குறைய அதே காலப்பகுதியில் ஜனாதிபதி கோத்தாபய இந்தியாவுக்குச் செல்கிறார். ஒரே சமயத்தில் அவர்களால் சீனாவையும் இந்தியாவையும் கையாளக் கூடியதாக இருக்கிறது. இந்தியாவை சமாளிப்பதன் மூலம் மேற்கு நாடுகளையும் ஜெனிவாவையும் சமாளிக்கலாம் என்றும் அவர்கள் நம்புகிறார்கள். சீனாவின் செல்லப் பிள்ளையாக இருப்பதன் மூலம் பொருளாதார நெருக்கடிகள் உட்பட எல்லாப் பிரச்சினைகளில் இருந்தும் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளலாம் என்றும் அவர்கள் நம்புகிறார்கள். ஆனால் சீனாவை நோக்கி அதிகமாகச் சாய்ந்து கொண்டு இலங்கைத் தீவு சுயாதீனமாக இறைமையோடு இருக்க முடியாது என்பதைத்தான் கடந்த 12 ஆண்டுகள் கால நிகழ்வுகள் நிரூபித்திருக்கின்றன.

மெய்யான பொருளில் கூறின் இலங்கைத்தீவு இப்பொழுது இறைமையுடைய நாடு அல்ல. அது பேரரசுகளால் பங்கிடப்படும் ஓர் அப்பம். சீன மயமாதலின் விளைவாக இந்தச்சிறிய தீவை நோக்கி இந்தியாவும் மேற்கு நாடுகளும் அதிகம் கவனத்தைக் குவிக்கும். அவர்கள் அதற்கு எடுத்துக் கையாளும் ஆயுதம் தமிழ்மக்களின் பிரச்சினையாகும். தமிழ் மக்களின் விவகாரத்தை அல்லது தீர்க்கப்படாத இனப்பிரச்சினையை ஒரு கருவியாகக் கையாண்டு வெளிச் சக்திகள் இலங்கைக்குள் நுழைகின்றன. சீனாவும் அப்படித்தான் நுழைந்தது. அழகிய இந்தச்சிறிய தீவை தமிழ் மக்களோடு சேர்ந்து பகிரத் தயாரற்ற சிங்கள ஆட்சியாளர்கள், அதனை இறுதியிலும் இறுதியாக சீனர்கள் உள்ளிட்ட வெளிநாட்டவர்களிடம் இழந்து வருகிறார்கள் என்பதே சீனப் பட்டினம் உணர்த்தும் உண்மையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விதி எங்கே போகிறது?



செ.விசுவலிங்கம்

சஞ்சீவி **சிறுகதை**

நதி வழியே போகின்ற ஓடம் போல விதி வழியே போகின்ற வாழ்வு என்பார்கள். மத்தியதர குடும்பத்தைச் சேர்ந்த எனது வாழ்வும் விதி வழியே தான் போகின்றதா ? எனது விதி எங்கே கூட்டிச் செல்லும் எதிர்காலம் எப்படி அமையும்? என்ற அங்கலாய்ப்பு பல்கலையில் படித்துப் பட்டம் பெற்று அரச தொழில்புரியும் எனக்கும் இருக்கத்தான் செய்கிறது.

என் அப்பா , அம்மா அச்சு ஊரின் மெச்சும் விவசாயப் பெருமக்கள். இந்தக் காலத்தில் வெளிநாட்டு உழைப்புக்கும் அரச தொழில் துறைகளுக்கும் வர்த்தகம் , வங்கித் தொழில் துறைகளுக்கும் இருக்கின்றமவுசுவிவசாயத்துக்கில்லை. செம்மண் நிலத்தில் உழைத்து, பயிர் செய்து ,மாளிகை போல உயர்ந்த வீடு கட்டி , தங்கள் மூன்று பிள்ளைகளையும் படிப்பித்து, தன் மகனை வெளிநாட்டுக்கு அனுப்பி, இரு பெண் பிள்ளைகளையும் பல்கலைக்கழகப் பட்டம் பெற வைத்து, அவர்கள் தொழில் செய்வது கண்டு மகிழ்ந்தவர்கள் என் பெற்றோர். இப்போது உழைப்பினால் அலுத்து, மூப்பினால் தளர்ந்து விட்டனர் .

தனக்குப்பின் இரணைகளாகப் பிறந்த இரு பெண் பிள்ளைகளால் வெளிநாடு சென்ற என் அண்ணன், குடும்பத்தைப் பிரிந்து சுவிஸ் மண்ணில் உறையும் பனியில் உழைத்தான். என் அக்காவின் திருமணச் செலவுகட்கு வீட்டுடன் சேர்த்து ரொக்கப்பணம் இருபது லட்சம், நகை நட்டுக்கள், மண்டபத் திருமணச் செலவுகளுக்கும் மேலும் இருபது லட்சம் என்று படியளந்த எங்கள் குடும்பத்தின் கண்கண்ட தெய்வமாக மிளிர்பவன் அண்ணன் மகிந்தன்.

இரட்டையாகப் பிறந்தாலும் தங்கையான எனக்கு அடுத்துப் படியளக்கும் பிரமா அவனே. உழைத்து உழைத்து பெண் சகோதரங்களுக்கு கொடுத்து விட்டு, காயாத மரமாக நாற்பது வயதிலும் தனிமரமாக அண்ணன்.

" ஆண் பாவம்" கவிதைத் தொகுதி வாசித்த ஞாபகம் வருகிறது . எனக்கும் இதே போல லட்சங்களும் வீடு வாசல் அடுக்கணிகளும் செய்து தர அவன் இன்னும் எத்தனை வருசம் உழைக்க வேண்டும்? இது எங்கே கலியாணத் தரகர்மாருக்கும் அவர்களுக்கு ஒத்து ஊதும்சோதிடப்பெரியோருக்கும்விளங்கப்போகிறது?

அவர்களுக்குத் தேவை இலட்சக்கணக்கானதரகுப் பணம் மட்டுமே . மனிதாபிமானம், நீதி நியாயம் , சமூகப் பற்று எல்லாமே லட்சத்துக்கான ஆசையில் மாண்டு விட்டன.

நினைவுகளில் மூழ்கியிருந்த எனக்கு வீட்டின் முன்னே யாரோ பலத்த குரலில் வாக்குவாதப்படுவது காதில் விழுகிறது. அப்பாவின் குரல் கேட்டு வெளியே வந்து பார்த்தேன்.

அக்காவின் திருமணம் பேசி முடித்த பொன்னையா புறோக்கர் "அண்ணை நீங்க பொம்பிள வீட்டார் ஒரு லட்சம் தந்தது சரி. மாப்பிளை வீட்டார் காசு ஐம்பதாயிரம் மட்டும் தந்தவை. மிச்சம் ஐம்பதாயிரமும் நீங்கள்தான் தரவேணும்" என்கிறார்.

"என்னப்பா மனச்சாட்சி இல்லாத கதை? மாப்பிளை வீட்டாரின் காசை அவையிட்டக் கேளுங்கோ. நான் ஏன் அதைப் தரப்போறன்" இது அப்பா.

" இல்லையண்ணை, நீங்க அவையிட்ட பேசுங்கோ. தரா விட்டால் உங்கட பிள்ளையள் நல்லாயிருக்க மாட்டினை. கோடு, கச்சேரிதான் போவினம்" சாபம் போட்டார் புறோக்கர்.

"பொன்னையா அண்ணை, நிதானமாய் பேசு. நான் போய் உங்களுக்காக சண்டை பிடிக்க முடியாது . தயவுசெய்து போட்டு வாங்கோ" என்றார் அப்பா.

"என்ன உலகமப்பா "என்று அலுத்துக் கொண்டாள் அம்மா.

தரகர் கூட்டம் அப்பாவிடம் விடைபெற்று , 'கேற்'வழியாக வெளியேற எனது அலுவலக நண்பிகள் கஸ்மிதாவும், நறுமுகையும் "நேமிகா" என என்னை அழைத்தவாறே உள் நுழைந்தனர். " ஹாய் கஸ்மி, நறு வாங்கோ" என வரவேற்று முகமலர்ச்சியுடன் இருக்கைகளைக் காட்டுகிறேன்.

"சரி அக்காவின் கலியாணம் முடிந்தது, அடுத்து நேமிகாவின் ரேண் வந்தாச்சு" என்கிறாள் குறும்புப் பார்வையுடன் கஸ்மிதா.

"அடியே நக்கலடிக்க வந்தியளா பம்பலடிக்க வந்தியளா? எனச் சிரித்துக் கொண்டே கேட்டேன் நான்.

"சரிதான் பிள்ளையள், நீங்க ஏத்தி விடுங்கோ . ஒரு காலமும் கதையாதபிள்ளை என்னிடம் தன்னை விரும்பி, ஒப்பீஸில கூட வேர்க் பண்ற ஆள் தந்த குறிப்பை எடுத்துக் கொண்டு சாத்திரியிட்ட கூட்டிக் கொண்டு போறாள்" என்றார் அம்மா.

"அப்ப சாத்திரியும் ஒ.கே சொல்லியாச்சோ?" கேட்டாள் கஸ்மி.

"இல்லை இல்லை அது பொருந்தாது . இவளுக்கு செவ்வாய் தோஷமாம். எட்டாம் வீட்டிலும் பாவக்கிரகங்கள். மாங்கல்ய தோஷம் அது இது எண்டு பெரிசாய்ச் சொன்னாார்" என்றாள் அம்மா.

"தோஷங்கள் , பாவங்கள் பாராமல் செய்த முன்வீட்டுக்காரி புற்று நோயால் இப்ப லட்சக்கணக்காய் செலவழிச்சுப் போட்டு படுத்திருக்கிறாள்" எனத் தொடர்ந்தாள் அம்மா.

"அம்மா ! புற்றுநோய் வந்ததுக்கும் திருமண சாதகத்துக்கும் தொடர்பில்லை. தென்னை மரத்திலை தேள் கொட்டினால். பனை மரத்திலை வீக்கம் வந்தது என்கிற மாதிரிக் கதை பேசாதையுங்கோ" என்றேன் நான்.

"ஓம் அம்மா நாட்டிலை நோய்வாறதும், மரணம் வாறதும், விபத்துக்கள் நடக்கிறதும் மாமன் மாமி சாகிறதும் எல்லாம் பெண்ணின், மாங்கல்ய தோஷம் என்று பெண்கள் தலையில் கொண்டு போய் பழி போடுகிறது மூடத்தனம், மூடநம்பிக்கை" என்றாள் நறுமுகை.

"மூலம் ஆயிலியம், விசாகம், கேட்டை எல்லாம் ஆண்களுக்கென்றால் அரசாளுமாம். பெண்களுக்கென்றால் பழிவாங்கும் நட்சத்திரங்கள். கிரகங்கள் கூடப் பெண்களைத் தானே பழிவாங்குதுகள்" என்று கஸ்மியும் கிண்டலடித்தாள். "அம்மா பகுத்தறிவு என்பது மனிதனுக்குக் கொடுக்கப்பட்ட வரம். மெய்பொருள் காண்பதே அறிவு என்கிறார் வள்ளுவர். மதமும் கடவுளும் சோதிடமும் மனிதனை முட்டாள்களாக்கும் கருவிகள் என்பது தந்தை ஈ.வெ.ரா பெரியாரின் சிந்தனைகள்" என்றாள் நறுமுகை.

"ஐஸ்லாந்து சுவீடன் நாடுகளில் மத நம்பிக்கைகளை ஓரங்கட்டி சட்டமே உள்ளது" என்றாள் கஸ்மி.


"அம்மா சனியைப் போல கொடுப்பவனுமில்லை. சனியைப் போல கெடுப்பவனுமில்லை என்று நீ தானே சொல்லுவாய். எனக்கு சனியும் செவ்வாயும் ஒப்பீசில ஒரு அருளைத் தந்திருக்குதுகள். இனிவெளிநாட்டிலிருக்கிற என் அண்ணாவும், அப்பா அம்மாவும் அருள் புரிந்தால் போதும்"என்றேன் நான்.

மெளனசாமியாக மறைவிலிருந்து இதைக் கேட்டுக் கொண்டிருந்த அப்பாவோ "மகளே என் அருளாசிகள் எப்போதும் உனக்கு உண்டு எனக்குச் சம்மதம்" என்று சொன்னபடி வெளியே வந்தார். அம்மாவோ வாயடைத்துப் போய் விழிகளைப் பிரட்டி விழித்தாள்.

"மதி வழியே செல்கின்ற தாகம் ,நதி வழியே செல்கின்ற ஓடம் . மதியே விதியாகப் போகிறது. உங்கள் அருமை மகள் நேமிகா, எங்கள் ஆருயிர் நண்பி நேமிகா நல்லாய் இருப்பாள் அம்மா." என்று நம்பிக்கையூட்டினாள் கஸ்மி. நறுமுகையும் சிரித்துக் கொண்டே "நிச்சயமாக நேமிகா நல்லாயிருப்பாள். எதையும் சமாளித்து முன்னேறுவாள் " என்றாள் .

"அம்மா அண்ணா பாவம். ஆண் பாவம். இதே பாவச்சுமையை மீண்டும் எனக்காகச் சுமந்தால் அவன் வாழ வேண்டாமா? இதை ஏன் அம்மா நீ யோசிக்கவில்லை" என்றேன் நான் . அம்மா மெளனமாகத் தலையாட்டினாள். அண்ணாவுக்கும் விரைவில் இனி விடிவு பிறக்கும்.

(யாவும் கற்பனை)



"அம்மா சனியைப் போல கொடுப்பவனுமில்லை. சனியைப் போல கெடுப்பவனுமில்லை என்று நீ தானே சொல்லுவாய். எனக்கு சனியும் செவ்வாயும் ஒப்பீசில ஒரு அருளைத் தந்திருக்குதுகள். இனி வெளிநாட்டிலிருக்கிற என் அண்ணாவும், அப்பா அம்மாவும் அருள் புரிந்தால் போதும்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மாகாண சபைத் தேர்தல் பற்றி கதைகள் பலமாக எழுந்துள்ள நிலையில், வடக்கின் அடுத்த முதலமைச்சர் யார் என்ற கேள்வியும் ஏககாலத்தில் முளைத்துள்ளது. முதலமைச்சர் 'ரேஸில்' இணைந்துள்ள இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா 'உதயன் - சஞ்சீவி' க்கு அளித்த பிரத்தியேக நேர்காணல் இது.**

**இம்முறை கட்சியின் நலனுக்காகவும் மக்களின் நலனுக்காகவும், பல நெருக்கடிகளுக்கு மத்தியிலும் பல கட்சிகள் வளர்ச்சி பெற்றுள்ள நிலையிலும் தமிழரசுக்கட்சி சார்பிலும் தமித் தேசியக் கூட்டமைப்பு சார்ந்து முதலமைச்சர் வேட்பாளராக நிற்பதற்கு சம்மதித்துள்ளேன்.**

○ நேர்காணல்: பொ.சோபிகா



# வாக்குகள் பிளவுபடாதிருக்க நான் முதலமைச்சராவது அவசியம்!

## மனம் திறக்கிறார் மாவை

**கே: முதலமைச்சர் வேட்பாளர் விவகாரம் மீண்டும் தமிழ் அரசியல் பரப்பில் சூடு பிடித்துள்ளது. இந்த நிலையில் கூட்டமைப்பின் சார்பில் முதலமைச்சர் வேட்பாளராக நீங்கள் போட்டியிடத் தீர்மானித்துள்ளீர்கள் எனக் கூறப்படுகின்றதே ?**

**ப:** மாகாணசபைத் தேர்தல் நடைபெறும் என்பதே கேள்விக்குறியாகவுள்ளது. இருப்பினும் மாகாண சபைத் தேர்தலில் என்னைப் போட்டியிடவேண்டும் என்று சென்ற முறையும் தற்போதும் பலர் வற்புறுத்தி வருவதை அனைவரும் அறிவார்கள்.

கடந்தமுறை பலரும் என்னை அழைத்தார்கள். இன அழிப்புச் செய்த ராஜபக்ச அரசுடன் நாம் தமிழ் மக்களுக்கான நீதியை போராடிப் பெற வேண்டிய தேவை இருந்தது. அந்தவகையில் ஜனநாயக வழி போராட்டத்தை மேற்கொள்ளும் தைரியம் எனக்கு இருந்தது . எனவே அதை நான் செய்ய எண்ணியிருந்ததால் அப்போது விக்னேஸ்வரனுக்கு சந்தர்ப்பத்தை வழங்கினேன். அப்போது விக்னேஸ்வரனுக்கு ஆதரவில்லாமல் இருந்த சந்தர்ப்பத்திலும் நான் பல காரணங்களை தெரிவித்து அவரைத் தெரிவு செய்தேன். அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு பொருத்தமானவராக இருப்பார் என சிந்தித்து தீர்மானித்தோம்.

இந்த முறை வடக்கு மாகாண சபைத் தேர்தலில் வேட்பாளராக நிற்பது தொடர்பில் ஆழமாக சிந்தித்திருக்கிறேன். இப்போது எமது கட்சிக்குள்ளும் வெளியிலும் பொதுமக்கள் மத்தியிலும் நான் இந்தப் பொறுப்பில் நிற்க வேண்டும் என கோரியுள்ளார்கள். அண்மையில் அரசியல் குழு கூட்டத்தில் சிறிதரன் கேட்டிருந்தார் "நீங்கள் கட்டாயமாக இந்த பொறுப்பை ஏற்க வேண்டும்" என அவர் கோரிய போது , கூட்ட முடிவில் எனது முடிவையும் அறிவித்தேன்.

அந்த வகையில் இம்முறை கட்சியின் நலனுக்காகவும் மக்களின் நலனுக்காகவும், பல நெருக்கடிகளுக்கு மத்தியிலும் பல கட்சிகள் வளர்ச்சி பெற்றுள்ள நிலையிலும் தமிழரசுக்கட்சி சார்பிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்ந்து முதலமைச்சர் வேட்பாளராக நிற்பதற்கு சம்மதித்துள்ளேன்.

அதே நேரத்தில் இது அவசியமாக இருக்கிறது. ஏனெனில் வாக்குகள் பிளவு பட்டுப்போக வாய்ப்புள்ளது. ராஜபக்ச அரசும் மாகாண சபையை கைப்பற்றுவதில் திட்டவட்டமாக உள்ளது. எல்லோரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அளவில் நான் இருப்பதாக கூறுகிறார்கள். எது எப்படியோஇதுவரையிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்னை வேட்பாளராக நிறுத்த தீர்மானித்தால் நானும் அதற்கு என் விருப்பத்தை தெரிவித்து நிற்கிறேன்.

எனவே தேர்தல் வரும் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக அந்த தீர்மானத்தை நிறைவேற்றி ஏனைய தேசியக் கட்சிகளோடு பேச்சுவார்த்தை நடத்தி, தமிழ்த் தேசியக் கட்சிகளின் ஆட்சியை நிலைநிறுத்த, உழைக்க வேண்டிய தேவை தற்போது உள்ளது.

**கே: முதலமைச்சர் வேட்பாளராக எவ்வாறான தகுதிகளையுடைய நபர் தெரிவு செய்யப்பட வேண்டும் என உங்களது கட்சியின் கொள்கை உள்ளது?**

**ப:** இனப்பிரச்சனையைத் தீர்க்கக்கூடிய ஆற்றல் அறிவு கொண்டவராகவும், போரால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை மாகாணசபை அதிகாரங்களூடாக அபிவிருத்தி செய்யக்கூடியவராகவும்,இந்தியா போன்ற சர்வதேச நாடுகளைப் பயன்படுத்தி பொருளாதாரத்தை முன்னனேற்றக் கூடியவராகவும் இருக்க வேண்டும். வேலை வாய்ப்பை உருவாக்கி இளைய சமுதாயத்துக்கு வழங்கக்கூடியவராக இருக்க வேண்டும்.அந்த ஆற்றல் , ஆளுமை எனக்கு இருப்பதாக பலரும் பேசுகிறார்கள். அந்த அடிப்படையில் எமது கட்சியும் அவ்வாறான ஒருவரை நிறுத்தி மாகாண சபைத் தேர்தலில் வெற்றி பெற வேண்டும் என்பதில் பலரும் அக்கறை கொண்டுள்ளார்கள்

**கே: உங்களுக்கு முதலமைச்சராக இருப்பதற்கான தகுதி இல்லை என சிலர் கருத்து வெளியிட்டு வருகின்றனர். வேறு கட்சியினர் மட்டுமல்லாது தமிழரசுக் கட்சியை சேர்ந்த சிலரும் கூட அப்படிக்கருத்து வெளியிடுகின்றனரே?**

**ப:** எமது கட்சியைச் சார்ந்தவர்கள் அவ்வாறு சொன்னதாக எனக்குத் தெரியவில்லை. விக்னேஸ்வரன் தான் அண்மையில் அந்தக் கருத்தை வெயிட்டுள்ளார். அவர் அவ்வாறு தெரிவித்தமை தவறு என அந்தக் கட்சியைச் சார்ந்தவர்களும் பகிரங்கமாகத் தெரிவித்துள்ளார்கள். எனக்கும் கூறியுள்ளார்கள்.ஜனநாயக ரீதியில்யாரும் கருத்துக்கள் தெரிவிப்பதில் தவறு இல்லை. ஆனால் பொது மக்கள் மத்தியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்ந்து நான் தான் அந்த பொறுப்பை ஏற்க வேண்டும் என வற்புறுத்தியிருக்கிறார்கள். "விக்னேஸ்வரனிடம் போய் பேச வேண்டும். அவரை வேட்பாளர் ஆக்கவேண்டும் "என நான் தான் முதலில் கூறினேன். அவரிடம் பேசும் போது , " நான் இரண்டு ஆண்டுகளின் பின்னர் அந்த பொறுப்பில் இருந்து விலகுவேன் அதன் பின்னர் மாவை சேனாதிராசா தான் வரவேண்டும் " எனத் தெரிவித்திருந்தார். அது பத்திரிகைகளிலும் பிரசுரமாகியிருந்தது. எனவே எங்கள் கட்சிக்குள் அவ்வாறான பிணக்கு இருப்பதாகத் தெரியவில்லை. அவர் என்னை பற்றிச் சொன்ன கருத்து பிழை என்பதை பெரும்பாலானவர்கள் ஏற்றுக்கொண்டுள்ளார்கள்.

**கே: எந்தப் பிரச்சினைக்கும் உடனடியாக, தீர்க்கமான முடிவை எடுக்காமால், "பார்க்கலாம்" செய்யலாம்" என்று நீங்கள் இழுத்தடிப்பீர்கள் என ஒரு கருத்து உண்டு. இது உங்கள் பலமா? பலவீனமா?**

**ப:** இதில் பலம் , பலவீனம் என்றில்லை. சரியான நேரத்தில் சரியான தீர்மானத்தை எடுப்பதற்குத் தான் நான் விரும்புகிறேன்.தொடர்ந்து பேசிக்கெண்டிருப்பதில் பயனில்லை. செயற்பட வேண்டும்.

சென்ற முறை மாகாணசபைத் தேர்தலில் அனைவரின் கோரிக்கையையும் ஏற்காமல் இருந்தேன். ஆனால் இந்த முறை அந்தச் சந்தர்ப்பதை ஏற்றுக்கொள்வேன் . எனவே உரிய நேரத்தில் சரியான தீர்மானத்தை எடுப்பேன்.

**கே: பொதுத்தேர்தல் முடிந்தவுடன் தமிழரசுக் கட்சிக்குள் உட்கட்சிப் பூசல் கடுமையாக எழுந்தது. அது மத்தியகுழுக் கூட்டத்திலும் எதிரொலித்தது. குறிப்பாக கூட்டமைப்பின் பேச்சாளர் பதவி இன்னொருவருக்கு வழங்கப்பட வேண்டும், தமிழரசுக் கட்சியின் செயலாளர் பதவிக்கு புதியவர் நியமிக்கப்பட வேண்டும் என்பது போன்ற கோரிக்கைகள் எழுந்தன. ஆனால் இன்னும் அவை கிடப்பில் இருக்கின்றனவே. அது ஏன்?**

**ப:** இந்த விடயம் நிறைவேறாமல் இருப்பது எமக்கும் வருத்தமளிப்பதாக இருக்கிறது. எமது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தீர்மா னங்களிலோ தமிழரசுக் கட்சியின் அரசியல் அமைப்பு ரீதியிலோ நாம் ஒரு பேச்சாளர் ஒருவரை நியமிக்க வேண்டும் என குறிப்பிடவில்லை.

*மறுபக்கம் பார்க்க*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் நடைமுறையில் எமது கட்சிக்கு பேச்சாளர் இருக்க வேண்டும் என்பது அவசியம். தேர்தலுக்கு பின்னர் பலர் தன்னிச்சையான கருத்துக்கள் தெரிவித்திருந்த நேரத்தில் நாடாளுமன்றக் குழுவில் இது தொடர்பான விசாரணைகள் இடம்பெற்றிருந்தன.

எனவே" இந்தப் பதவிக்கு ஒவ்வொரு ஆண்டும் நாம் பொருத்தமானவர்களைத் தீர்மானிப்போம். அவர்களை பத்திரிகையாளர் மாநாட்டில் பேச வைப்போம். தனியாக ஒருவர் இருக்க முடியாது. ஒவ்வொரு ஆண்டும் வெவ்வேறு நபர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும்" என நான் ஒரு கருத்தை முன்வைத்தேன். அனைவரும் அதனை ஏற்றுக் கொண்டார்கள். அத்துடன் இது நாடாளுமன்றக் குழுவில் தீர்மானம் எடுக்கப்பட வேண்டிய விடயம். எனினும் எனது கருத்தின்படி செயற்படுவார்கள் என நினைக்கிறேன்.

அடுத்ததாக செயலாளர் பதவி வெற்றிடமாக இருக்கும் சந்தர்ப்பத்தில் துணைச் செயலாளர் ஒருவர் அந்தப் பொறுப்பை தொடர்ந்து வகிக்கலாம் என அமைப்பு ரீதியாகவும், அரசியல் குழு, செயற்குழு மற்றும் தேர்தல் ஆணையகத்தின் தீர்மானத்தின் ஊடாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. செயலாளர் ஒருவர் தேவை தான். பொதுக்குழுவைக் கூட்டி பொருத்தமான புதிய பொதுச்செயலாளரை தெரிவு செய்ய ஆலோசித்து வருகிறோம்.


**கே: இலங்கைத் தமிழரசுக் கட்சிக்குள் எடுக்கப்படும் நடவடிக்கைகள் ஆளாளுக்கு வேறுபடும் என்றும் சுட்டிக் காட்டப்படுகின்றது. கட்சிக் கட்டுப்பாட்டை மீறி கருத்து தெரிவித்தனர், செயற்பட்டனர் என அனந்தி, சிவகரன் போன்றோரை கட்சியை விட்டு நீக்கினீர்கள். ஆனால் கூட்டமைப்பின் கையில் உள்ளூராட்சி சபை சென்றுவிடக் கூடாது என்பதற்காக பிற கட்சிகளுடன்இணைந்து, கட்சிக்கட்டுப்பாட்டை மீறி, சதிசெய்தவர்களை எல்லாம் இன்னும் கட்சிக்குள் வைத்துள்ளீர்கள். அத்தோடு மாகாண சபையில் போட்டியிடும் வாய்ப்பும் அத்தகையவர்களுக்கு வழங்கப்படவுள்ளதாகச் சொல்லப்படுகின்றதே?**

ப: அவ்வாறு மாகாண சபைக்கு யாரையும் நியமிப்பதாக இன்னும் தீர்மானம் எடுக்கப்படவில்லை. கட்சியின் தேர்தல் நியமனக்குழுவும் எம்முடன் அங்கம் வகிக்கும் பங்காளிக்கட்சிகளும் இணைந்து தான் தீர்மானம் எடுப்போம்.

ஆனால் பலர் கட்சிக்கு எதிராகச் செயற்பட்டுள்ளார்கள். பலருக்கு எதிராக பல குற்றச்சாட்டுக்களும் கிடைக்கப்பெற்றுள்ளன. அவை ஒழுங்கு நடவடிக்கை குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. சிலருக்கு இடைக்கால நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. உள்ளூராட்சி மன்றங்களிலும் இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெற்றுள்ளன. அண்மையில்கூட கூட்டமைப்பின் வசமுள்ள சபைகளில் வரவு செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக வாக்களிக்க வேண்டும் என தெரிவித்தோம். அதிலும் சில எதிர்மாறான செயற்பாடுகள் இடம்பெற்றுள்ளன. தை மாதத்தில் இருந்து உள்ளூராட்சிச் சபைகளிடம் தலைமைகளை மாற்றுவதற்கு உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு அறிவித்துள்ளோம்.

அந்தப் பணிகளைச் செயற்படுத்துவதில் நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா சூழ்நிலை காரணமாக தாமதம் ஏற்பட்டுள்ளது. வடக்கு, கிழக்கு உறுப்பினர்களை ஒன்றாக சந்திக்க முடியவில்லை. விரைவில், முறைப்பாடு செய்தவர்கள், நடவடிக்கைக்குள்ளானவர்கள், நடவடிக்கை எடுக்கப்படவுள்ளவர்களைச் சந்திக்கவிருக்கிறோம். அதை எவ்வாறு கையாள்வது என்பது தொடர்பில் பரிசீலித்து வருகிறோம். கட்சி மற்றும் உறுப்பினர்களுக்கு எதிரான அறிக்கை விடுவது, எதிரான செய்திகள் வெளியிடுவது போன்றவை கட்டுப்படுத்தப்பட வேண்டும். ஒழுங்கு நடவடிக்கை குழு, கட்சியின் செயற்குழு என்பவற்றின் தீர்மானத்தின் மூலமாக இனத்தின் விடுதலைக்காக இவ்வாறான செயற்பாடுகளுக்கு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும்.

**தமிழ் மக்களின் அனைத்துப் பிரச்சினைகளிலும் நாம் முடிந்த அளவுக்கு சேர்ந்து செயற்பட வேண்டும். எனவே தேர்தல் வரும் பொழுது இந்தத் தீர்மானத்தை எமது கட்சியில் எடுத்து ஏனைய எமது பங்காளிக் கட்சிகளுடனும் கதைத்துவிட்டு ஏனைய தமிழ் தேசிய கட்சிகளுடன் பேசுவது என்பதில் தீர்மானமாக உள்ளோம்.**



**கே: இந்தமுறை மாகாண சபைத் தேர்தலில் எத்தகைய முறைமையில் வேட்பாளர்கள் தேர்வு செய்யப்படுவர்? புதியவர்களுக்கு வாய்ப்புகள் வழங்கப்படுமா?**

ப: கடந்த தேர்தலில் நல்லெண்ண அடிப்படையில் எனக்கு கொடுக்கப்பட்ட சந்தர்ப்பத்தை விக்னேஸ்வரனுக்கு வழங்கி புதியவர் ஒருவரை கொண்டு வந்தோம். அதில் நாம் வெற்றி பெற்றோம். அப்போது இளையோர் மற்றும் பொருத்தமான பலர் நியமிக்கப்பட்டார்கள் . அந்தவகையில் இம்முறையும் பொருத்தமானவர்களுக்கு சந்தர்ப்பம் கொடுப்போம். குறிப்பாக பெண்கள்,இளையோருக்கு சந்தர்ப்பம் வழங்க வேண்டும்.

எனவே எமது கட்சியில் ஒரு தீர்மானத்தை எடுத்து அறிவிக்கவுள்ளோம்

கட்சியின் மூலக்கிளைகள், மாவட்டக் கிளைகள், தொகுதிக் கிளைகளில் இருந்து பெண்கள், இளைஞர்கள் பலரை இணைப்பதற்கான நடைமுறையை கொண்டுவரவுள்ளோம். அவர்களுக்கும் கண்டிப்பாக வாய்ப்புக்கள் வழங்கப்படும். மாகாண சபையில் புதியவர்கள் 50 வீதமாவது இருக்க வேண்டும். அதற்கான பொறுப்பும் எம்மிடம் உள்ளது.

**கே: கடந்த முறை மாகாணசபை உறுப்பினர்களாக இருந்து மக்களின் வெறுப்பைச் சம்பாதித்து கட்சிக்கு அவப்பெயரை ஏற்படுத்தியோரையும் வேட்பாளர்களாக பரிசீலிப்பீர்களா?**

ப: கட்டுப்பாடுகளை மீறி நடந்தவர்களை, கட்சியை அவமதித்தவர்களை மீண்டும் கட்சிக்குள் சேர்க்கும் சிந்தனை எம்மிடம் இல்லை. அந்த விடயத்தில் தேர்தல் நியமனக்குழு தீர்மானம் எடுக்கும். குறிப்பாகஊழல் செய்தவர்கள், தவறு இழைத்தவர்கள், கட்சியின் கட்டுப்பாடுகளை மீறியவர்களை மீண்டும் வேட்பாளர்களாக நியமிப்பதற்கான சந்தர்ப்பம் இருக்காது.



**கே: தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழ் மக்கள் கூட்டணி என பிரதான தமிழ்த் தேசியக் கட்சிகள் இணைந்து மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட வாய்ப்புள்ளதா?**

ப: நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து போட்டியிட வேண்டிய காலம் இது தான் என நினைக்கிறேன். அதற்கான ஒழுங்குகளை ஏற்கனவே செய்துள்ளோம். அந்த ஏற்பாடுகளைக்கூட, சிலர் தவறாக வெளிப்படுத்தியிருந்தார்கள்.

கடந்த மாதமும் மதகுருக்கள், கட்சி பிரதிநிதிகள் ஒன்றாகக் கூடி தமிழ்த் தேசியத்துக்காகவும், தமிழ் மக்களுக்காகவும் நிரந்தரக் கட்டமைப்பு ஒன்றை உருவாக்க வேண்டும் என தீர்மானித்துள்ளோம்.

சர்வதேச ரீதியாகவும் இலங்கையிலும் தேசியக் கட்சிகள் சேர்ந்து ஒரு ஒருங்கிணைந்த கட்டமைப்பை அமைக்க வேண்டிய தேவை உள்ளது. இது நீண்டகாலத் திட்டமாக உள்ளது. சர்வதேச நிபுணத்துவம் வாய்ந்தவர்களும் இதைக் கூறுகிறார்கள்.

தமிழ் மக்களின் அனைத்து பிரச்சினைகளிலும் நாம் முடிந்த அளவுக்கு சேர்ந்து செயற்பட வேண்டும். எனவே தேர்தல் வரும் பொழுது இந்தத் தீர்மானத்தை எமது கட்சியில் எடுத்து ஏனைய எமது பங்காளிக் கட்சிகளுடனும் கதைத்து விட்டு ஏனைய தமிழ் தேசிய கட்சிகளுடன் பேசுவது என்பதில் தீர்மானமாக உள்ளோம். எமக்குள் ஒற்றுமை மிக முக்கியம். இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தவும், ஜனநாயக போராட்டங்களை முன்னெடுக்கவும், சர்வதேச ரீதியிலான செயற்பாடுகளுக்கும், நாம் ஒற்றுமையாகச் செயற்பட வேண்டும். அதற்கான நடவடிக்கைகளில் இறங்கியுள்ளோம்.

**கே: அனைத்துக் கட்சிகளும் இணைந்து மீண்டும் விக்னேஸ்வரனை முதலமைச்சர் வேட்பாளராக நியமித்தால் ஏற்றுக்கொள்வீர்களா?**

ப: அது தொடர்பில் அப்போது தான் தீர்மானிப்பேன். ஊகங்களுக்கு என்னால் பதில் கூற முடியாது. அத்துடன் அவர் தொடர்பான எனது நிலைப்பாடு எமது கட்சியின் நிலைப்பாடுகள் என்ன என்பதை ஏற்கனவே பல இடங்களில் நான் தெரிவித்து விட்டேன்.

**கட்சி மற்றும் உறுப்பினர்களுக்கு எதிரான அறிக்கை விடுவது, எதிரான செய்திகள் வெளியிடுவது போன்றவை கட்டுப்படுத்தப்பட வேண்டும். ஒழுங்கு நடவடிக்கை குழு, கட்சியின் செயற்குழு என்பவற்றின் தீர்மானத்தின் மூலமாக இனத்தின் விடுதலைக்காக இவ்வாறான செயற்பாடுகளுக்கு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மௌனமொழி 44 இற்கான கவிதைகள்



புத்தம் புது வருடத்தை
புதுப்பொலிவுடன் கொண்டாட
கொத்துக் கொத்தாய்
செலவழிப்பதிலும் விட
பாதையிலே பரிதவித்து நிற்கும்
பாதசாரி வியாபாரிகளிடம்
ஒரு பொருள் வாங்குதல்
எல்லையற்ற மகிழ்வை தரவல்லது

**த.துளசிகா**
கல்வியங்காடு

## பரிசு பெறும் கவிதை

வயிற்றிலே உயிர் கரு சுமந்து
கர்ப்பிணி எனும் பதவி பெற்று
தீப்பிணி எனும் பசியை போக்க
பிச்சை என்பது பாவமென கருதி
பத்தி வகை தானும் விற்று
உயிர் பிடிக்கும் மங்கை இவள் நரக
சோகம் தொலைந்து வாழி....

**சதாசிவம் கபிஷன்**
மானிப்பாய்

தாய்மையின் உணர்விலே பூரித்து
செல்வ தகமையில் சமநிலை பாதித்து
காலனின் அழைப்பிற்கு கவசமிட்டு
கருவிலே கனவுக்கும் தூபமிட்டு
சாலையில் கூலிக்கே பொருளைவிற்று
சாய்ந்திடும் வலிகளை சகித்து நின்று
வானத்து இருக்கு விடிவு வரும் சிசுவால்
வறுமையின் வாழ்வுக்கு முடிவு வரும்

**வேலணையூர் க.விஜயன்**

தாய்மை இதயம் அருளும் தெய்வம்
தாமரை மலராய் ஒளிரும் வதனம்
கொரோனா காலன் தொடரும் துன்பம்
கொடுமை செய்யும் கோடை வெப்பம்
விளையும் பயிரை கருவறை சுமந்து
விடியல் பொழுதாய் வாழ்வும் மலர
பாதை ஓரம் பல்பொருள் விற்கும்
வலிகள் சுமக்கும் வல்லமை நெஞ்சம்

**சரண்குமார்**, வற்றாப்பளை

உற்றவன் உறவிழந்து போக
உறுதுணையாய் யாருமற்று
உதிரியாய் நின்றாலும்
உயிரை மாய்க்காது......
ஊரவரிடமும் பிச்சையும் வாங்காது
உயிர் வாழ்ந்திட
உதவியாய்...
ஊதுபத்தி விற்றேனும்
உயிர் பிழைக்கும் நம்பிக்கையில்
உங்களிடம் கையேந்துகிறேன்...

**த.சிவா**, அல்வாய்.

வேகாத வெயிலிலும்
விரட்டி வரும் வைரஸிலும்
தன் ஏழ்மை நிலை உணர்ந்து
தன் வயிற்றில் வாழும்
குழந்தையின் வாழ்க்கைக்காக
போராடுகிறது தாய்மை

**த.சங்கீதன்**, வரணி

தாரம் தலைவிதிப்படி என்றால்
வயிற்றில் தந்தவனும்
தலைவிதிப்படி தானும் போலும்
நாளை அவள் பேற்று வலி
வரினும் நாளை வரும்
அவள் சிசுவுக்காய்
இன்று கால் கடுக்க
உழைக்கும் அவள்
யாரோ இல்லை அவள் தான்
கடவுள் கூட
கையெடுக்கும் பிறவி அம்மா

**சு.சுதாகரன்**
மயிலிட்டி வடக்கு
முலவை

கருவறையில் கருச் சுமந்து
கால் வலிக்க காத்திருந்து
விழிதிறந்து விழித்திருந்து
வியர்வையில் விரல் நனைத்து
முயற்சி எனும் கரம் குவித்து
சிங்கப் பெண்ணாய் நிலை கொண்டு
தாய்மைக்காய் போராடும்
நிறைமாத நிலவே அம்மா

**லிங்கேஸ்வரன் ஜனார்த்தனன்**
மறவன்புலோ மத்தி

தாயாகும் பெண்ணிற்கு சுமையேது
நோய் தரும் வறுமைக்கு விடையேது
வாயால் உரைத்திடாத உண்மையிது
மௌனங்களும் கண்களும் உணர்ந்திது
நாணம் தடுத்தால் இவளிற்கு உணவேது
வாழும் நாட்களிற்கு பொருளேது
பொறுமை காத்தால் வலியேது
பொசுக்கிடு துன்பத்தை நல்மாது

**சிவரம்யா**
யாழ்ப்பாணம்

இந்தக் கொரோனா காலத்தில்
அடிக்கும் காண்டா வெயிலில்
தன் சிசுவை வயிற்றில் சுமந்து
கொண்டு வீர நடை போட்டு ஊதுபத்தி
விற்கும் சிங்கப்பெண்

**த.பிறின்சிகா**
யாழ்ப்பாணம்

## 45



கவிதைக்கு பரிசு 1000/=

இந்த ஒளிப்படத்தைப் பார்த்ததும் உங்கள் சிந்தனையில் உதிக்கும் கவிதைகளை 8 வரிகளுக்கு மேற்படாமல் உடனே எழுதி அனுப்புங்கள். அனுப்பும் போது உங்கள் விவரத்தை தெளிவாக குறிப்பிட்டு அனுப்பவும். மிகச் சிறப்பான ஒரு கவிதைக்கு ரூபா. 1000/ பரிசாகக் காத்திருக்கிறது. பாராட்டுப் பெறும் ஏனையவை மௌனமொழி பகுதியில் பிரசுரமாகும்.

**உங்கள் கவிதைகள் எங்கள் கதவைத் தட்ட வேண்டிய கடைசி நாள்:**

**30.04.2021**

அனுப்ப வேண்டிய முகவரி:
**உதயன் சஞ்சீவி**
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
மின்னஞ்சல் முகவரி: sanjeevi@uthayan.com
0773165555


- சிறுகதை
- கவிதை
- கட்டுரை
- பத்தி எழுத்து
- ஓவியம்

நீங்களும் எழுதலாம்

எதுவானாலும் அனுப்பி வையுங்கள்.
தரமானவற்றை பிரசுரிக்க
சஞ்சீவி
காத்திருக்கிறது.

அனுப்ப வேண்டிய
உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
sanjeevi@uthayan.com

தொடர்புகளுக்கு
0773165555

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**1**

எனது பிள்ளைக்கு 2 வயது காய்ச்சல் சாதாரணமாக இரு தடவைகள் ஏற்பட்டது. இரண்டாம் தடவை எற்பட்டபோது வலிப்பு ஏற்பட்டது. அது 10 நிமிடங்களுக்கு நீடித்து அடங்கியது. அடுத்தமுறை காய்ச்சல் ஏற்படும்போதும் இவ்வாறு வருமா? தவிர்க்க என்ன செய்ய வேண்டும்? இதனால் பிற்காலத்தில் மூளையில் பாதிப்பு ஏற்படுமா? ஏன் இப்படி ஏற்படுகிறது? மறுமுறை ஏற்படின் என்ன செய்ய வேண்டும்?

அருணா, ஜேர்மனி.

# நலம் அறிய...



**மருத்துவர் ப்ரியா கமலசிங்கம்**
(யாழ்.போதனா மருத்துவமனை,
– சிலாபம் மாவட்டப்
பொது மருத்துவமனை)

# காய்ச்சல் வலிப்பு



## காய்ச்சல் வலிப்பு Febrile Convulsion

1. இது சிறுபிள்ளைகளில் ஏற்படும் அதிகப்படியான காய்ச்சலுடன் ஏற்படும் வலிப்பு.
   - சாதாரணமாக 6 மாதம்- 6 வயதுக் கிடைப்பட்ட வயதினரே பாதிக்கப்படுகின்றனர்.
2. ஒரு மாதத்திலிருந்து 6 மாதங்கள் வரையுள்ள சிறுவர்களில் வலிப்புக்கான வேறு காரணம் இல்லாதவிடத்து அதுவும் காய்ச்சல் வலிப்பாகக் கருதப்படும்.
3. ஆனால் மூளைக்காய்ச்சலால் ஏற்படும் வலிப்பு, காய்ச்சல் வலிப்பினுள் அடங்காது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

**காய்ச்சல் வலிப்பு வேறு**
**காக்காய் வலிப்பு வேறு**

| Simple Febrile Convulsion<br>எளிய காய்ச்சல் வலிப்பு | Complex Febrile<br>சிக்கலான காய்ச்சல் வலிப்பு |
|---|---|
| பொதுவானது | 30 வீத காய்ச்சல் வலிப்பு இதுவாகும். |
| 70வீதமான காய்ச்சல் வலிப்பு இதுவாகும். குறுகிய காலத்துக்கு மட்டுமே நீடிக்கும். | 15 நிமிடத்துக்கு கூடுதலாக இருக்கும். |
| 15 நிமிடத்துக்கும் குறைவான நேரத்துக்கே இருக்கும். | ஒரு காய்ச்சலுடன் பல தடவைகள் வலிப்பு ஏற்படும். |
| ஒரு தடவை வரும். | உடம்பின் ஒரு பக்கம் மாத்திரமே பொதுவாக ஏற்படும். |
| காய்ச்சலுடன் ஒரு வலிப்பு மட்டுமே வரும். (அதாவது மீண்டும் மீண்டும் ஏற்படாது) | வலிப்பு ஏற்பட்ட பின் சில நரம்பியல் கோளாறுகள் ஏற்படலாம். |

## காய்ச்சல் வலிப்பை எவ்வாறு தடுக்கலாம்?

காய்ச்சல் வலிப்பைத் தடுக்க முடியாது. காய்ச்சல் வருவதை தவிர்ப்பதற்கான முயற்சிகளை அடிக்கடி மேற்கொள்ளலாம். உதாரணமாக, காய்ச்சல் வலிப்பு வருவதற்கான முக்கிய காரணியாக (Viral Fever) அமைவதால் பெற்றோர்கள் பிள்ளைகளை சன நெருக்கடியான இடத்துக்கு கூட்டிச் செல்வதை குறைத்தல், அடிக்கடி கை கழுவுதல் போன்ற நடவடிக்கைகளால் காய்ச்சல் அடிக்கடி வருவதைத் தவிர்க்கலாம். காய்ச்சல் வரும்போது வலிப்புக்கான மருந்துகளைப் பாவிப்பதால் காய்ச்சல் வலிப்பு மீண்டும் வருவதை தவிர்க்க முடியும். காய்ச்சல் ஆரம்பித்த வேளையில் இருந்து வாய் வழியாக (Oral) Diazepam, Clobazam CUTIN Anti Convuision மருந்துகளை இரு நாட்களுக்கு பாவிப்பதன் மூலம் வலிப்பு வருவது குறைவதற்கான வாய்ப்பு அதிகமாகும்.
எனினும், இதனால் வரும் பக்க விளைவுகள் உதாரணமாக, அதிக தூக்கத் தன்மை (Transient Ataxiac) தன்னிலை குழம்பி நடத்தல் அதிகமாக இருப்பதால் இந்த மருந்துகளை காய்ச்சல் வலிப்பு இருக்கின்ற சகல குழந்தைகளுக்கும் சிபார்சு செய்வதில்லை . ஆனபோதிலும், அடிக்கடி அதிகமான வலிப்பு வருபவர்களுக்கும், குழந்தையைப் பராமரிக்க திடமான நம்பிக்கையான பெற் றோர்கள் இல்லாதவிடத்தும், அதிக பதட்டமான பெற்றோர்கள் அல்லது அருகில் வைத்தியசாலை வசதி இல்லாதவர்க ளுக்கும் சிறுபிள்ளை விஷேட வைத்திய நிபுணர் இதைக் கொடுப்பது குறித்துத் தீர்மானிக்கலாம்.

- காய்ச்சல் வலிப்பு வரும் சாத்தியக்கூறு உள்ளவர்களில் சாதாரணமாக 1/3 பங்கினருக்கு மீண்டும் மீண்டும் வர வாய்ப்புண்டு.
- குடும்பப் பின்னணியுள்ளவர்கள் ஒரு காய்ச்சலில் பல தடவைகள் வலிப்பு ஏற்பட்ட குழந்தைகள், சிறிய அளவிலான காய்ச்சலின் போதும் வலிப்பு ஏற்பட்டவர்கள் ஆகியோருக்கு ஒரு வருடத்தினுள் காய்ச்சல் வலிப்பு ஏற்படும் .

காய்ச்சல் வலிப்பு வேறு; காக்காய் வலிப்பு வேறு (epilepsy) காய்ச்சல் வலிப்பு இருப்பதால் பிற்காலத்தில் காக்காய் வலிப்பு ஏற்படும் எனக் கொள்வது தவறு. காய்ச்சல் வலிப்பு உள்ள பிள்ளைகளில் 5 வீதமானோருக்கே காக்காய் வலிப்பு ஏற்படும் வாய்ப்புள்ளது.



## வலிப்பு ஏற்படும்போது முதலில் 'செய்யவேண்டியது என்ன?

முதலில் பெற்றோர்கள் பதற்றப்படாமல் நிதானமாகச் செயற்படவேண்டும். குழந்தையின் உடலை இடது பக்கமாக சரித்து (Left Lateral Position) தலையையும், கழுத்தையும் சற்று உயர்த்தி வைக்கவேண்டும்.
வலிப்பு ஏற்படும் விதத்தை அவதானிக்கவேண்டும்.
இதன்போது எவ்வித மருந்துகளையும் கொடுக்கக் கூடாது,
வலிப்பு 5 நிமிடத்தையும் தாண்டினால் உடனடியாக அருகிலுள்ள வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல வேண்டும்.
சில சமயங்களில்வலிப்பு வந்ததன் பின்பு பிள்ளைகள் குழப்பமடைந்தவர்களாயும் தூக்க மயக்கம் உள்ளவர்களாயும் இருப்பார்கள். மருத்துவ பராமரிப்பை நாடுவதற்கு, பிள்ளை இயல்பான நிலைக்குத் திரும்பும்வரை காத்திருக்க வேண்டாம்.
வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும்போதுகூட குழந்தையின் உடலை இடது பக்கமாக சரித்து (Left Lateral Position) தலையும், கழுத்தும் சற்று உயர்த்தி வைக்கப்பட்ட நிலையிலேயே கொண்டு செல்ல வேண்டும்.

### பிள்ளையை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும்போது வைத்தியருக்கு தெரிவிக்க வேண்டியவை

வலிப்பு எவ்வளவு நேரம் நீடித்தது என்பதை உங்கள் மருத்துவர் அறிய விரும்புவார்.
முடிந்தால், வலிப்பு எப்போது ஆரம்பித்தது,எப்போது நின்றது என்பதை ஒரு சுவர் மணிக்கூட்டில் அல்லது ஒரு கைக்கடிகாரத்தில் பார்த்து வையுங்கள். வலிப்பு எவ்வளவு நேரம் நீடித்தது மற்றும் உங்கள் பிள்ளையின் தோற்றம், அசைவுகள் எப்படி இருந்தன போன்றவை உட்பட, வலிப்பைக் கவனமாக விவரிக்கும்படி மருத்துவர் கேட்பார்.
மென்மையாகப் பிடிப்பதன் மூலம் அல்லது துடிக்கும் உடல் உறுப்பின் மீது அழுத்தத்தைப் பிரயோகிப்பதன் மூலம் துடிப்பு நிறுத்தப்படக்கூடுமா, அல்லது துடிப்பு தொடர்ந்து நீடித்ததா என்பதை தெரிந்துகொள்வது மருத்துவருக்கு உதவக்கூடும்.

### காய்ச்சல் வலிப்பின் விளைவு

காய்ச்சல் வலிப்பு ஒரு பாரதூரமற்ற வருத்தமாகும்.
பிள்ளைகளின் உடல்நல அபிவிருத்தி சாதாரணமாகவே இருக்கும்.
எவ்வித நரம்புப் பிரச்சினைகளும் ஏற்படாது.
இது தானாகவே 06 வயதுக்குள் சரியாகிவிடும்.
5 வீதமான சிறுவர்களுக்கு பிற்காலத்தில் Unpeoroked Seizure/ Epilepsy வரக்கூடும்.




### மேற்கொள்ளப்படும் பரிசோதனைகளும் சிகிச்சையும்

காய்ச்சல் ஏற்பட்ட காரணத்தை கண்டறிவதே சிகிச்சையின் பிரதான படிநிலையாகும்.
நீங்கள் மருத்துவருக்கு கூறும் காய்ச்சல் வலிப்பு பற்றிய விவரிப்பு முக்கியமானது. அதடிப்படையில் சிகிச்சை , தேவையான பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும்.

1. FBC - முழு இரத்தவணுப் பரிசோதனை.
2. qqg - மூளை மின்னலை வரைபு.
3. CT, MRI - தேவையேற்படின் மட்டுமே இக்கதிர்கள் தீமையானவை.
4. Lumbuer puncture - முதுகுத்தண்டு வட துளையிடுதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித வடிவில் வந்த கடவுள்

○ மயூ



இந்தியாவில் மஹாராஷ்டிரா வில் நடந்த ஒரு சம்பவம் தான்தற்போது சமூக வலைத் தளங்களில் வைரல். மயூர் ஷெல்கே என்பவர் மக்க ளால் கதாநாயகனாகக் கொண்டா டப்படுகின்றார். அப்படி என்ன தான் செய்து விட்டார் இந்த மயூர் ஷெல்கே?

மஹாராஷ்டிரா மாநிலத்தில் இப் போது கொரோனாத் தொற்றுத் தீவிரம் அடைந்திருக்கின்றது. அத னால் அங்கு முடக்க நிலைமை அறிவிக்கப்பட்டிருக்கின்றது. அத னால் பொதுப் போக்குவரத்துக்கள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. மக் கள் நடமாட்டம் இன்றி ரயில் நிலையங்கள், பஸ் நிலையங்கள் வெறிச் சோடிப் போயுள்ளன.

அங்குள்ள வாக்னி ரயில் நிலையத்திலும் இதுதான் நிலைமை. ரயில் சேவைகள் இல் லாததால் ரயில் நிலையம் வெறிச்சோடிப் போயிருந்தது. அந்த ரயில் நிலை யத்தின் 2 ஆம் எண் நடைமேடையில் பெண் ஒருவர் தனது குழந்தையுடன் நடந்து சென்று கொண்டிருந்தார். தாயுடன் பேசியவாறு சென்று கொண்டிருந்த குழுந்தை தற்செயலாக தாயின் கையை விட்டு விலகி, தண்டவாளத் துக்குள் வீழ்கின்றான்.


"நாங்கள் பாதுகாப்புக் கமராவில் இந்தக் காட் சிகளைப் பார்த்துக் கொண்டிருந்தோம். குழந்தை தண்டவாளத்தில் வீழ்ந்து எழுந்து நடைபாதையில் ஏற முயற்சிக்கின்றான். தாய் நடைமேடையில் நின்றாலும் குழந்தைக்கு உதவவில்லை. அது ஏன் என்று எமக்குப் புரி யவில்லை. என்ன செய்வது என்று தெரியாது திகைத்துவிட்டோம்" என்று கூறுகின்றனர் ரயில் நிலையத்தில் கண்காணிப்புக் கமராக் களை பார்த்துக் கொண்டிருந்த அலுவலர்கள். ஆம். அலுவலர்கள் சந்கேகித்ததிலும் அர்த்தம் இருக்கின்றது. சிறுவன் நடைபாதையில் ஏற முயன்றபோது தாய் அருகில் சென்று தூக்க முயலவில்லை. நடைபாதையில் நின்றவாறு மகனைக் காணாது பதறிச் சுற்றிலும் தேடிக் கொண்டிருந்தார். இந்த நிலைமையில் சற்றுத் தொலைவில் வேகத்துடன் வந்து கொண்டி ருக்கிறது மெயில் ரயில் ஒன்று.

அந்தத் தாய்க்கு கண் பார்வை இல்லை. தன் னுடன் வந்த மகனைக் காணவில்லை என்று சத்தமிட்டவாறு கைகளைத் துழாவித் தேடிக் கொண்டிருக்கிறார். மகனின் அழுகுரல் கேட் கிறது, ரயில் வரும் ஓசை கேட்கிறது, ஆனால் என்ன நடந்தது என்பதை அந்தத் தாயால் அறிந்து கொள்ள முடியவில்லை.

அந்த நேரத்தில்தான் தன் உயிரைப் பற்றிக் கவலைப்படாது தண்டவா ளத்தில் பாய்ந்தோடினார் ஒருவர். அவர் தான் மயூர் ஷெல்கே. ரயில்வே பணியாளரான அவர் அப்போது அங்கு கடமையில் இருந்தார். சிறு வன் தண்டவாளத்துக்குள் வீழ்ந்த தையும், தாய் நடைபாதையில் தவிப் பதையும் கண்ட அவர் சற்றும் யோசிக்காது சிறுவனைக் காப்பாற் றப் பாய்ந்தோடினார். தண்டவாளத் தின் ஊடாக ஓடிச் சிறுவனைத் தூக்கி நடைபாதையில் ஏற்றிவிட்டு, தானும் நடைபாதையில் ஏறுகிறார். அப்போது பெரும் வேகத்துடன் ரயில் அவரைக் கடந்து செல்கின்றது.

இவை அனைத்தும் ஒரு சில நொடிகளில்( வெறும் 18 செக்கனில்) நடந்து முடிந்தது.

"நான் சம்பவத்தன்று ரயில் நிலையத்தின் இரண்டாவது நடைபாதைக்குக் கீழே ரயி லுக்கு சிக்னல் கொடுப்பதற்காக நின்று கொண்டிருந்தேன். அந்த நேரம் கண்பார்வை யற்ற பெண் தனது 6 வயது சிறுவனுடன் பிளாட்பாரத்தில் நடந்து சென்று கொண்டி ருந்தார். அவர் பிளாட்பார ஓரத்தில் நடந்து சென்றதால் சிறுவன் கால் தவறி தண்டவாளத் தில் விழுந்துவிட்டான். அவன் தண்டவாளத் தில் இருந்து பிளாட்பாரத்தில் ஏற முயன்றான்.



ஆனால் அவன் மிகவும் சிறியவ னாக இருந்ததால் முடியவில்லை. அந்த நேரம் மெயில் ரயில் ஒன்று அதே தண்டவாளத்தில் வேகமாக வந்து கொண்டிருந்தது. நான் நின்ற இடத்தில் இருந்து 60 மீற்றர் தூரத் தில் சிறுவன் ரயில் தண்டவாளத்தில் நின்று கொண்டிருந்தான்.

ரயிலுக்கு சிவப்பு சிக்னல் கொடுத்து வண்டியை நிறுத்தவும் முடியாது. எனவே என்ன விலை கொடுத்தேனும் சிறுவனை காப்பாற்றிவிட வேண்டும் என்று நினைத்து சிறுவனை நோக்கி ஓடினேன். ஆனால் பாதி வழியில் செல்லும் போது ரயில் மிகவும் நெருங்கிவிட்டதால் என்னைப் பயம் தொற்றிக்கொண்டது. ஆனாலும் சிறுவனை தூக்கி நடைபாதையில் போட்டுவிட்டு நானும் ஏறிவிட்டேன். சில நொடிகள் தாமதித்து இருந்தாலும் நான் தப்பித்து இருக்க முடியாது. பிளாட்பாரத்தில் சிறிது நேரம் என்ன நடந்தது என்ற சுயநினைவுவே இல்லாமல் இருந்தேன். 15 நிமிடத்துக்குப் பின்னர்தான் ஓரளவு சுய நினைவுக்கு வந்தேன். சிறுவனை காப்பாற்றி விட்டேன் என்று எல்லோரும் என்னை பாராட்டினர். நான் சிறுவனை காப்பாற்றிவிட் டேன் என்பதை என்னால் நம்பவே முடிய வில்லை. சிறுவனை காப்பாற்றவே கடவுள் என்னை அங்கு அனுப்பி வைத்திருக்க வேண் டும்" என்று அந்தச் சம்பவத்தை விவரிக்கின்றார் மயூர் ஷெல்கே.

"சில நொடிகள் தாமதித்து இருந்தாலும் நான் தப்பித்து இருக்க முடியாது. பிளாட்பாரத்தில் சிறிது நேரம் என்ன நடந்தது என்ற சுயநினைவே இல்லாமல் இருந்தேன். 15 நிமிடத்துக்குப் பின்னர்தான் ஓரளவு சுயநினைவுக்கு வந்தேன். சிறுவனை காப்பாற்றிவிட்டேன் என்று எல்லோரும் என்னை பாராட்டினர்.



தண்டவாளத்தில் வந்துகொண்டிருந்தது உத யன் எக்ஸ்பிரஸ் ரயில். அது ரயில் நிலை யத் துக்குள் நுழையும் போது 105 கிலோ மீற்றர் வேகத்தில் நுழைந்தது.

"ரயில் வாகினி ரயில் நிலையத்தை நெருங்கிய போது தண்டவாளத்தில் சிறுவன் ஒருவன் நிற்பதைக் கண்டேன். [illegible] சிறு வனைக் காப்பாற்ற ஒருவர் ஓடி வந்து கொண் டிருந்தார். ரயில் வேகத் தைக் குறைக்க முயன் றேன். ரயிலின் வேகம் சற்றுக் குறைந்து 85 கிலோ மீற்றராக மாறியது. அத னால் சிறுவனைக் காப் பாற்றிய மயூர் ஷெல்கேக் குத் தன்னைக் காப்பாற்றச் சில விநாடிகள் கிடைத்தி ருக்கும்" என்றார் அந்த ரயிலை இயக்கிய வினோத் குமார். மயூர் ஷெல்கே யைப் பலரும் கொண் டாடி வருகின் றனர். துறை சார்ந்த அமைச்சர் அவ ரைத் தொடர்பு கொண்டு பாராட்டியிருக்கின்றார். ரயில்வே திணைக்களம் பாராட்டு விழா நடத்தியிருக்கின்றது. சக பணி யாளர்கள் விழா எடுக்கின்றனர். அவ ருக்கு பணப் பரிசிலும் வழங்கியிருக் கின்றது ரயில்வேத் திணைக்களம்.

தனக்கு வழங்கப்பட்ட பணப் பரிசிலில் பாதி யைச் சிறுவனுக்குக் கொடுத்திருக்கிறார் மயூர் ஷெல்கே. இந்தச் சம்பவத் துக்குப் பின்னர் சிறுவ னுக் கும் கடந்த சில நாள்க ளாக அரசியல் கட்சி தலைவர்கள் மற்றும் சமூக சேவகர்கள் நேரில் சந் தித்து பண உதவி மற்றும் பரிசுகளை வழங்கி வரு கின்றனர். அவனது படிப் புக்கான செலவை ஒருவர் ஏற்றுக்கொண்டுள்ளார்.

"எனது மகன் பிறந்த சில நாட்களில் எனது கணவர் என்னை விட்டுவிட்டு சென்றுவிட்டார். அதிலி ருந்து எனது மகனுடன் நான் தனியாகத்தான் இருக் கிறேன். புறநகர் ரயில்களில் சிறுசிறு பொருள் களை விற்பனை செய்து அதில் கிடைக்கும் வருவாயில் குடும்பம் நடத்துகிறேன். எனது மகனுக்கு மறுபிறவி கிடைத்துள்ளது. இந்த மறுபிறவியை மயூர் தான் கொடுத்துள்ளார். அவருக்கு எப்படி நன்றி சொல்வது என்றே தெரியவில்லை என்று கண்ணீருடன் கூறுகின் றார் சிறுவனின் தாயாரான கண்பார்வையை இழந்த சங்கீதா.

இன்னும் உலகில் மனிதம் வாழ்கின்றது என்ப தற்கு மயூர் ஷெல்கே சமீபத்திய உதாரணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்னும் ஆடு வெட்டேல்லை!

ந.பரமேஸ்வரன்

கிராமங்களில், கிராமத்தவர்கள் ஆட்டை வெட்டி இறைச்சியை பகுதி பகுதியாகப் பிரித்து பங்கிட்டு எடுத்துச் சென்று சமைக்கும் வழக்கம் இப்போதும் யாழ்ப்பாணத்தில் இருக்கிறது. இப்படி ஒரு முறை ஆடு வெட்டும்போது கிடாய் புரோக்கர் ஒருவர் ஆட்டின் 'முக்கியமான உறுப்பு என்ன விலை?' என்றாராம் ஆடு வெட்டிக்கொண்டிருந்தவர்கள் "தம்பி நீ கேட்கிற பங்கு உனக்குத்தான் நிச்சயம் தருவோம். இன்னும் ஆடு வெட்டேல்லை. ஆடு வெட்டிய பிறகு நீ உனக்கு என்ன தேவையோ தேவையானதை எடுத்துக்கொள்" என்று சொன்னார்களாம்.

எங்கடை தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் படுகிறபாட்டைப் பார்த்தால் உந்தப்பொடியன்ரை ஆட்டுக்கிடாய்க் கதை தான் எனக்கு ஞாபகத்துக்கு வருது.

ஸ்ரீலங்காவிலை மாகாணசபை எலெக்சன் நடக்கபோகுதாம். அதுக்கு இப்பவே ஆக்களெல்லாரும் வரிஞ்சு கட்டிக்கொண்டு "அவருக்கு தகுதியில்லை, இவருக்கு தகுதியில்லை. எனக்கு எல்லாத் தகுதியும் இருக்கு, இன்னும் வேட்பாளரை தீர்மனிக்கேல்லை, மாவை தான் வேட்பாளர், வேலன் சுவாமி தான் பொருத்தமானவர், மணிவண்ணன் பொதுவேட்பாளர்" அது இது எண்டு ஆளாளுக்கு அறிக்கை விட்டுக்கொண்டிருக்கி னம்.

அது சரி பாருங்கோ, உந்த 'அவருக்கு தகுதியில்லை இவருக்கு தகுதியில்லை' 'அவர் தான் பொருத்தமானவர் இவர் தான் பொருத்தமானவர்' எண்டெல்லாம் அறிக்கை விடுற ஆக்கள் வடமாகாண முதலமைச்சரா போட்டி போடுறதுக்கு என்ன தகுதி வேணும்? அடிப்படைத்தகைமை என்ன? முன் அனுபவம் தேவையா? எண்ட விசயங்களை ஒருக்கா சனத்துக்கு விளங்கப்படுத்தினால் நல்லது.

ஐயா, மெத்தப்படிச்ச கனவான்களே வடமாகாண முதலமைச்சர் பதவி என்ற பதவி ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளதா? அப்படியாயின் எத்தனையாவது இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது என்ற விடயத்தை எமது 'தமிழீழ மக்களுக்கு' விளங்கப்படுத்துவீர்களா?

ஸ்ரீலங்கா அரசியல் யாப்பின் 13 வது திருத்தச்சட்டத்தின் கீழ் தான் மாகாணசபை உருவாக்கப்பட்டது என்பது ஊர்ந்து போற சிற்றெறும்புக்குக் கூட தெரியும் . அதை நான் சொல்லத்தேவையில்லை.

மாகாணசபை முதலமைச்சர் என்ற பதவி பற்றி ஸ்ரீலங்கா அரசியல் யாப்பின் 13 வது திருத்தச்சட்டத்தின் 40 பிரிவு உப அங்கம் நான்கில் . பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

"ஆளுநர் அவரது அபிப்பிராயப்படி, அம்மாகாணத்துக்கென அமைக்கப்பட்ட மாகாணசபையின் உறுப்பினர்களுள் பெரும்பான்மையினரின் ஆதரவைப்பெறுவதற்கு இயலுமான அந்தச்சபையின் உறுப்பினரை பிரதான அமைச்சராக நியமித்தல் வேண்டும்" இதிலை ரண்டு விசயம் இருக்குது பாருங்கோ . முதலாவது முதலமைச்சரை ஆளுநர் தான் நியமிப்பார். இரண்டாவது முதலமைச்சர் அரைவாசிக்கு மேற்பட்ட உறுப்பினர்களின் ஆதரவைப்பெற்றிருக்க வேண்டும்.

இப்ப எல்லா கட்சிகளிலும் இரண்டு அணிகள் இருக்கு. மாவை அணி-சுமந்திரன் அணி, கஜேந்திரகுமார் அணி? மணி அணி எண்டு நீங்களே உங்களுக்கை குடுமிப் பிடிச் சண்டையிலை இருக்கிறியள்; ஏற்கனவே விக்கியரை கவிட்டனீங்கள். உள்ளூராட்சி சபைகளில் கூட கன இடங்களிலை உட்கட்சி குத்து வெட்டுகளாலை ஆட்சிக்கவிழ்ப்பு நடந்திருக்கு; கடைசியா மாநகரசபையினரையும் கவிட்டு போட்டீங்கள். இந்த லட்சணத்திலை அரைவாசிப்பேரின் ஆதரவோடை முதலமைச்சரை தெரிவு செய்யிறது எவ்வளவு தூரம் சாத்தியம்? எண்ட கேள்வி எங்களை அறியாமலே ஏற்படுது.

உந்த ஆட்சிக்கவிழ்ப்புகள் எல்லாம் நீங்கள் சனத்தின்ரை நன்மைக்காகத்தான் செய்தனீங்கள்(?) எண்டது சனத்துக்கும் தெரியும். இந்த முறையும் எத்தினை மாதத்துக்குப்பிறகு மாகாண சபை ஆட்சியை கவிழ்ப்பீர்கள் எண்டுறதை தேர்தல் விஞ்ஞாபனத்திலையே சொல்லிப்போட்டா 'வோட்' போடுற சனத்துக்கு வசதியா இருக்கும் பாருங்கோ. உந்த ஒட்டுக் குழுக்கள், மொட்டுக்கள் ஒரு தராலும் எங்கடை தமிழ்அரசுக்கட்சியினரை ஆட்சியிலிருந்து அசைக்க ஏலாது. கவிக்கிறதெண்டாலும் அதுகும் தமிழ் அரசுக் கட்சியால் தான் முடியும்.

வன்னிச்சனம் எங்கடை வடக்கு மாகாணசபை கலைஞ்ச பிறகு சரியா கஸ்டப்படுதுகள். மாகாணசபை ஆட்சி நடக்கேக்கை, கிளிநொச்சி யிலையும் முல்லைத்தீவிலும் 'பாலாறும் தேனாறும்' ஓடியதை உலகமே அறியும் இப்ப சனங்கள் ஒரு நேரச் சாப்பாடுக்கே கஸ்டப்படுத்துகள். எப்ப மாகாணசபையிலை தமிழரசுக்கட்சியினரின்ரை ஆட்சி வரும் என்று வடமாகாண மக்கள் எல்லாரும் ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள், தங்களின்ரை பசியைப்போக்கிறதுக்கு. ஏனெண்டா நீங்கள் போன முறை சிங்கள அரசாங்கம் தந்த வாகன பேமிற்றைக்கூட வித்து சனத்துக்குத்தான் செலவு செய்தனீங்கள் எண்டு எல்லாருக்கும் தெரியும்.

அதோடை மிச்சல் பச்லெட் அம்மையாரும் பாத்துக்கொண்டிருக்கிறா , நீங்கள் என்ன தீர்மானம் நிறைவேற்றப்போறீங்கள் எண்டு. போன முறை நீங்கள் தேர்தல் விஞ்ஞாபனத்திலை சமஷ்டி எண்டு சொல்லிபோட்டீங்கள். இந்த முறை சில நேரம் நீங்கள் தமிழீழம் தான் முடிஞ்ச முடிவு எண்டு அறி விச்சால் ஐ.நா சபையிலை தீர்மானம் கொண்டு வரப்போறன் எண்டு மிச்செல் பச்லெட் அம்மையார் சொல்லியிருக்கிறாவாம் .

எதுக்கும் கொஞ்சம் பொறுத்துக்கொள்ளுங்கோ. சிறிலங்காவின்ரை ஜனாதிபதிதான், தேர்தல் திகதியை அறிவிக்க வேணுமெண்டுறது உங்களுக்குத் தெரியும் தானே. ஆன படியாலை கொஞ்சம் பொறுத்துக்கொள்ளுங்கோ, 'அதி உத்தம 'ஜனாதிபதி கோத்தபய ராஜபக்ச தேர்தல் திகதியை அறிவிக்கும் வரையும்.







## திருவள்ளுவரின் தேநீர்க்கடை


13


இ.சு.முரளிதரன்

கடத்தி ஒன்றினூடாக மின்னோட்டம் பாய, இலத்திரன் பாய்ச்சல் நிகழ்ந்து இலத்திரனில் அமைந்துள்ள சக்தியின் ஒருபகுதி அக்கடத்தியின் அணுக்களுக்கு வழங்கப்படும் இச்சந்தர்ப்பத்திலே அணுக்களின் அதிர்வானது அதிகரிக்க கடத்தியில் வெப்பம் உண்டாகும். இதன் மறுதலையாக வெப்ப இணை (Thermo couple) உதவியுடன் வெப்பத்தில் நிகழ்கின்ற மாற்றத்தை மின்சாரமாக மாற்ற முடியும். இதே போல மின்கடத்தியில் மின்னோட்டம் பாயும் போது, அக்கடத்தியைச் சுற்றிக் காந்தப்புலம் உருவாகின்றது.

இதன் மறுதலையாக காந்தப்புலத்திலே கடத்தியினை இயக்கி கடத்தியின் இரு முனைகளுக்கும் இடையே மின்னியக்க விசையையும் உருவாக்க முடியும்.

இ[illegible] மேதைகள் [illegible] இலத்திரன்கள் வெளிவருகின்றமையின் மறுதலையாகவே இலத்திரனிலிருந்து ஒளியை உண்டாக்கி எக்ஸ் கதிர்கள் கண்டறியப்பட்டன.






திருவள்ளுவர் 375 ஆவது குறட்பாவில் மறுதலைச் சிந்தனையை வெளிப்படுத்துகின்றார். செல்வத்தினை உருவாக்குகின்ற காலத்தைக் குறித்து எடுத்தியம்பும் போது "நல்லவை எல்லாம் தீயவையாயின், தீயவை எல்லாம் நல்லவையாகும் என்கிறார். நிகழ்வொழுங்கின் மீள் விளைவை ஊழ் (விதி) என்னும் அதிகாரத்திலே வள்ளுவர் பதிவு செய்துள்ளமையும் வியப்பைத் தருகிறது.

**"நல்லவை எல்லாம் தீயவாம் தீயவும்**
**நல்லவாம் செல்வம் செயற்கு"**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அறிந்தும் அறியாமலும்

சூழியன்

# முடிவுக்கு வருகிறது மோதல்

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரச கூட்டணிக்குள் ஏற்பட்டுள்ள முறுகலை - மோதலை - முடிவுக்கு கொண்டுவருவதற்கு ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் முயற்சிகளை முன்னெடுத்தாலும் அவை இன்னமும் கைகூடவில்லை. சந்திப்புகள் தொடர்ந்தாலும் சமரசம் இன்னும் ஏற்படவில்லை. மாகாணசபைகளுக்கான தேர்தல் முறைமை உட்பட சமகால அரசியல் நிலைவரங்கள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக கடந்த 19 ஆம் திகதி பிரதமர் மஹிந்த ராஜபக்ச அலரிமாளிகையில் முக்கிய சந்திப்பொன்றை நடத்தினார்.

கூட்டணியில் அங்கம் வகிக்கும் பங்காளிக்கட்சிகளின் தலைவர்கள் உட்பட 51 பேருக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. எனினும், அமைச்சர்களான விமல் வீரவன்ஸ, உதயகம்மன்பில, வாசுதேவ நாணயக்கார ஆகியோர் கூட்டத்தை புறக்கணித்தனர்.

கட்சித் தலைவர்களுக்கு மட்டுமின்றி ஏனைய உறுப்பினர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டதாலேயே கூட்டத்தைப் புறக்கணித்ததாக மூவரும் அறிவித்ததுடன், இவ்வாறான சந்திப்பில் உட்கட்சி மோதல் பற்றி குறித்து கலந்துரையாடமுடியாது எனவும் சுட்டிக்காட்டினர்.

எனினும், மொட்டுக் கட்சியின் செயற்பாடுகளுக்கு எதிர்ப்பை வெளியிடும் வகையிலேயே மூவரும் கூட்டத்தை புறக்கணித்துள்ளனர் என தகவல் வெளியாகியுள்ளது. இதற்கிடையில் துறைமுக நகரம் தொடர்பான புதிய சட்டமூலத்தால் அரசுக்கு பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. ஆளுங்கட்சி உறுப்பினர் ஒருவரே சில தகவல்களை அம்பலப்படுத்தியதால் தேசியவாத அமைப்புகளும் அரசுக்கு எதிராக போர்க்கொடி தூக்கியுள்ளன. இதனால் அரசுக்கு பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. பங்காளிகளும் முறுகல் போக்கை கடைபிடித்தால் நெருக்கடி வலுக்கும். எனவே, மோதலைக் கைவிட்டு அரசின் பயணத்தை பாதுகாப்பது பற்றி தற்போது கூட்டணி தலைவர்கள்கள் கவனம் செலுத்தியுள்ளனர். இதற்கு இணக்கமும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# தலைவர் இவரே...!

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப்பதவியில் தற்போதைக்கு மாற்றம் வராது என அந்தக்கட்சி வட்டாரங்களில் இருந்து அறிய முடிகின்றது. எனவே, ரணில் விக்கிரமசிங்க விரைவில் நாடாளுமன்ற உறுப்பினராக சத்தியப்பிரமாணம் செய்வார் என தெரியவருகின்றது. ஐக்கிய தேசியக் கட்சியின் வருடாந்த மாநாடு எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 6 ஆம் திகதி நடைபெறவுள்ளது. அம்மாநாட்டின்போது கட்சியில் மேற்கொள்ளப்பட்ட மறுசீரமைப்பு நடவடிக்கைகளின் முன்னேற்றம் குறித்து கவனம் செலுத்தப்படவுள்ளது.

பிரதித் தலைவராக செயற்படும் ருவான் விஜேவர்தனவின் செயற்பாடுகளில் திருப்தி இருக்கின்றதென கட்சி உறுப்பினர்கள் கருதும் பட்சத்தில் 2022 ஆம் ஆண்டு மாநாட்டின்போது அவரிடம் கட்சித் தலைவர் பதவி ஒப்படைக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதற்கிடையில் ஐக்கிய மக்கள் சக்திக்கு ஆதரவு வழங்கிய உள்ளூட்சிமன்ற உறுப்பினர்களின் பதவிகளை பறித்து, புதியவர்களை நியமிப்பதற்கான நடவடிக்கையிலும் ஐ.தே.கட்சியின் சட்டக்குழு ஈடுபட்டு வருகின்றது.



# சம்பிக்க அணியில் விஜயதாச?

அரசுமீது கடும் அதிருப்தியில் இருக்கும் ஆளுங்கட்சி எம்.பியான விஜயதாச ராஜபக்ச, நாடாளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படுவதற்கு தீர்மானித்துள்ளார் எனத் தெரியவருகின்றது.

இதற்கான கோரிக்கையை அடுத்த நாடாளுமன்ற அமர்வில் அவர் சபாநாயகரிடம் விடுக்கவுள்ளார்.

ராஜபக்சக்களை வெளிப்படையாகவே கடுமையாக விமர்சித்துவிட்டதால் மொட்டுக் கட்சியுடன் இனி அரசியல் பயணம் சாத்தியப்படாது என்பதை அறிந்துவைத்துள்ளதாலேயே விஜயதாச இந்த முடிவை எடுத்துள்ளார் எனக் கூறப்படுகின்றது.

ராஜபக்ச அரசிலிருந்து ஏற்கனவே வெளியேறிய விஜயதாச ராஜபக்ச ஐக்கிய தேசியக்கட்சியில் இணைந்தார். பின்னர் ஐ.தே.கவில் இருந்து வெளியேறி மொட்டுக் கட்சியுடன் இணைந்தார். தற்போது அவருக்கு எந்த பக்கத்திலும் இடமில்லை என்ற நிலை காணப்படுகின்றது. எனவே அவர் அடுத்து சம்பிக்க ரணவக்கவின் 43 என்ற இயக்கத்துடன் இணைந்து பயணிக்கலாம் என தகவல்கள் கசிந்துள்ளன.



# அடுத்தது என்ன?

ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் தலைமையில் எதிர்வரும் 4 ஆம் திகதி முக்கியத்துவமிக்க சந்திப்பொன்று நடைபெறவுள்ளது. இச்சந்திப்பில் அரசுக்கு ஆதரவு வழங்கும் பங்காளிக்கட்சிகளின் தலைவர்களும், முக்கியமான அமைப்புகளின் பிரதிநிதிகளும் பங்கேற்கவுள்ளனர்.

அரசின் செயற்பாடுகள் தொடர்பில் மக்கள் மத்தியில் அதிருப்தி நிலை உருவாகியுள்ளது. அதேபோல அரசால் முன்னெடுக்கப்படும் திட்டங்கள் குறித்து உரிய வகையில் பிரசாரங்கள் முன்னெடுக்கப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டும் உள்ளது. எனவே, இவற்றை எவ்வாறு சரிசெய்வது, அடுத்தக்கட்ட வேலைத்திட்டங்களை எவ்வாறு முன்னெடுப்பது குறித்து இச்சந்திப்பின்போது விரிவாக ஆராயப்படவுள்ளது. அத்துடன், பங்காளிக்கட்சிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை எடுத்துரைப்பதற்கும் வாய்ப்பு வழங்கப்படவுள்ளது.

அதேவேளை, விஜயதாச ராஜபக்சவுக்கு எதிராக மேற்கொள்ளப்படவுள்ள ஒழுக்காற்று நடவடிக்கை சம்பந்தமாகவும் இந்தச்சந்திப்பில் இறுதி முடிவு எடுக்கப்படவுள்ளது.

# தனிவழிப் பயணம்.....

தமிழ் முற்போக்குக் கூட்டணிக்குள் கடும் மோதல் ஏற்பட்டுள்ளது. எனவே, கூட்டணியிலிருந்து மலையக மக்கள் முன்னணி விரைவில் வெளியேறும் என அரசியல் வட்டாரங்களில் கதை அடிபடுகின்றது.

தமிழ் முற்போக்குக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் பங்காளிக்கட்சிகளில் ஒன்றான மலையக மக்கள் முன்னணி கடந்த சனிக்கிழமை இளைஞர் மாநாட்டை நடத்தியது. இதில் பங்கேற்குமாறு பங்காளிக்கட்சிகளின் தலைவர்களுக்கு உரிய வகையில் அழைப்பு விடுக்கப்படவில்லை.

எனினும், ஹரின் பெர்ணான்டோவும், சாணக்கியனும் சிறப்பு விருந்தினர்களாக அழைக்கப்பட்டிருந்தனர். இதனால் மனோ, திகா அணி உறுப்பினர்கள் கொதித்தெழுந்தனர். மலையக மக்கள் முன்னணியின் செயலையும் கடுமையாக விமர்சித்தனர்.

இவ்வாறு கூட்டணிக்குள் குழப்பம் தலைதூக்கிய நிலையில் குறித்த மாநாட்டை ஹரினும், சாணக்கியனும் புறக்கணித்தனர். தனிப்பட்ட காரணங்களால்தான் அவர்கள் பங்கேற்கவில்லை எனக்கூறப்பட்டாலும், இதன்பின்னணியில் முற்போக்கு கூட்டணியின் இதர கட்சிகளின் அரசியல் அழுத்தம் இருந்திருக்கக்கூடும் என நம்பப்படுகின்றது.

பெரிதும் எதிர்ப்பார்க்கப்பட்ட இரு பிரமுகர்கள் வராததால், மாநாடு வெற்றிகரமாக முடியவில்லை. இதனால் மலையக மக்கள் முன்னணி கடும் அதிருப்தியில் இருக்கின்றது. மாநாடு தோல்வியில் முடிவடைந்ததற்கு கூட்டணியிலுள்ள பங்காளிக்கட்சிகளும் காரணம் என முன்னணி கருதுகின்றது.

ஏற்கனவே மோதல் ஏற்பட்டிருந்த நிலையில் தற்போது நிகழ்ந்துள்ள சம்பவமும் மோதலை உக்கிரமடைய வைத்துள்ளது. ஆக, விரைவில் கூட்டணி இரண்டுபடலாம் என ஆரூடம் கூறப்பட்டுள்ளது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கலாவர்ஷினி கனகரட்ணம்

# முத்திரைக்குள் ஒளிந்திருக்கும் வரலாறு

முத்திரைகள்! வெறுமனே தொடர்பாடலுக்கான கட்டண அறவீட்டுக்கு மாத்திரமானஒருபொருள்கல்ல. அவை தமக்குள்ளே பல கதைகளை, அடையாளங்களை, இரகசியங்களை, நினைவுகளை, அறிவார்ந்த தளங்களை, பண்பாட்டின் கூறுகளை, கலைகளின் பரிணாமங்களை சுமந்து நிற்கின்றன. இப்போதைய டிஜிட்டல் யுகத்தில் முத்திரைகளின் பயன்பாடும், முத்திரை சேகரித்தல் என்ற பொழுது போக்கும் அருகிக் கொண்டு செல்கின்றன. இந்த நிலையில் இப்போதும் முத்திரைகள் மீது வாஞ்சைகொண்டு அவற்றைச் சேகரித்தும், ஆய்வு செய்தும், 'கியவன முத்தர '(முத்திரைகளை படித்தல்) என்ற அமைப்பை நிறுவி முத்திரைகள் பற்றி மக்களிடம் ஒரு விழிப் புணர்வையும் உண்டாக்கி வரும் நிரோஷன பீரிஸ், தன் உள்ளக்கிடக்கையை சஞ்சீவி வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கிறார்.

"முத்திரைகள் என்பது முற்றிலும் அரசியல் கருத்தியலாகும். இதனை நாங்கள் முழுமையாக ஆராய்ந்தால் எமது முழு வரலாற்றையும் அறிந்து கொள்ள முடியும். அதன் பிரகாரம் மனிதர்களின் சிந்தனையில் மாற்றத்தை ஏற்படுத்தலாம்.

பொழுதுபோக்காக ஆரம்பித்த முத்திரை சேகரிப்பில் எனக்கு உண்டான நாட்டம், பின்னாளில் அவற்றிலுள்ள விடயங்களை ஆராய்ந்து அவை எவ்வாறு எமது கலை, கலாசாரம், வாழ்வியலுடன் பின்னிப் பிணைந்துள்ளன என்பதைக் கற்று அதனை இன்று ஏனையோருக்கும் கற்கும் வாய்ப்பை ஏற்படுத்தி தந்துள்ளது.

முத்திரையின் ஊடாக சமய, சமூக, கலாசார, பண்பாட்டு விழுமியங்கள், வாழ்க்கை முறை மட்டுமன்றி நல்லிணக்கத்தையும் ஏற்படுத்தலாம் . அதற்கான பணிகளை தற்போது நூலக மட்டத்தில் முன்னெடுப்பதோடு, பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் இதுதொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்குகளையும் நடத்தி வருகின்றேன்"

பொழுது போக்காக ஆரம்பித்த முத்திரை சேகரிப்பில் உண்டான நாட்டம், பின்னா ளில் அவற்றிலுள்ள விடயங்களை ஆராய்ந்து அவை எவ்வாறு எமது கலை, கலாசாரம், வாழ்வியலுடன் பின்னிப் பிணைந் துள்ளன என்ப தைக் கற்று அதனை இன்று ஏனையோருக்கும் கற்பிக்கும் வாய்ப்பை ஏற்படுத்தி தந்துள்ளது

## அபூர்வ முத்திரைகள், அரிய தகவல்கள்

"எமது நாட்டின் ஆரம்ப கால முத்திரைகளை பார்த்தால் இலங்கையின் பெயர் சிலோன் என்பதிலிருந்து ஸ்ரீலங்கா என மாற்றியமை, அரசியல் மாற்றம் என சகல விடயங்களையும் முத்திரைகள் பிரதிபலிக்கின்றன.

1992 -1993 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட முத்திரையில் Sir Lanka என்பது Shir Lanka என அச்சிடப்பட்டது. சுமார் 40 முத்திரைகள் இவ்வாறு அச்சிடப்பட்டன. இதனை நீங்கள் குறித்த அந்த முத்திரைகளில் தவிர வேறு எங்கும் காண முடியாது. வர்த்தமானியில் கூட இவ்விடயம் இல்லை. அந்த அளவு வரலாற்று பிரசித்திபெற்ற பொக்கிஷமாக முத்திரைகள் காணப்படுகின்றன.

சில முத்திரைகளில் வருடங்கள், பெயர்கள் இல்லை. அவற்றை நான் புத்தகங்கள், இணையங்கள் போன்றவற்றில் தேடினேன். சிறிய முத்திரைகளைப் பெரிதாக்கிப் பார்த்தபோது அதில் உள்ள விடயங்களை நாம் நன்கறிந்து கொள்ளலாம்.

குயின்விக்ரோரியா, ஆறுமுகநாவலர், சித்திலெப்பை, பொன். அருணாசலம்ஆகியோர் தேசிய வீரர்களாக கருதப்பட்டுமுள்ளனர். இனம் மொழி பேதத்தை கடந்து அவர்கள் எமது நாட்டுக்காக உழைத்துள்ளனர். ஆனால், அவர்களை எத்தனை பேர் அறிவார்கள் என்பது சந்தேகமே.

## தேடலின் தொடக்கப்புள்ளி

உதாரணமாக, பேராதனைப் பல்கலைக்கழகத்தின் 50 ஆவது வருட பூர்த்தியை முன்னிட்டு முத்திரை வெளியிடப்பட்டது. இப்போது இந்த முத்திரையை வைத்துக் கொண்டு பேராதனை பலகலைக்கழக வரலாற்றைத் தேட வேண்டும். இலங்கையின் முதல் பல்கலைக்கழகமான இலங்கைப் பல்கலைக்கழகத்தை (பின்னர் பேராதனை பல்கலைக்கழகமாக மாறியது) நிறுவுவதற்கு இலங்கை பல்கலைக்கழக சங்கம் முன்னோடி யாக காணப்பட்டது. இதற்கு சேர் .பொன்னம்பலம் அருணாசலம், சேர் ஜேம்ஸ் பீரிஸ் மற்றும் சேர் மார்க்கஸ் பெர்ணான்டோ ஆகியோர் வழிகாட்டிகளாகச் செயற்பட்டனர். அதன் பின்னர் அதனை எங்கு அமைப்பதென ஒரு சிக்கல் ஏற்பட்டது. கொழும்பு புல்லர்ஸ் வீதியில் அமைப்பதற்கு அப்போதைய அரசியல்வாதிகள் எதிர்ப்புத் தெரிவித்தனர். அப்போதைய பிரித்தானிய காலனித்துவ ஆட்சியின் ஆளுநரான ஹ"ெக்ளிஃபோர்ட், நீதியரசர் எம். டி. அக்பர் தலைமையில் குழுவொன்றை நியமித்தார். இந்தக்கதை இப்படியே நீண்டு செல்கின்றது. இந்த ஒரு சிறிய கதையில் பார்த்தால் தமிழ், சிங்களம், முஸ்லிம் இனத்தவர்கள், பௌத்தம், இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம் மதத்தவர்கள் அனைவரும் எமது நாட்டின் ஆணிவேரான கல்விக் கட்டமைப்பை உருவாக்க பாடுபட்டுள்ளனர் என்ற உண்மை புலப்படும். இவையெல்லாவற்றையும் சின்னத் சின்னத் தகவல்களாக முத்திரைகள் மூலம் அறிய முடியும். சாதாரணமாக ஒரு முத்திரையை பார்த்தால் சில வேளைகளில் எதுவும் விளங்காது. டி.எஸ்.சேனாநாயக்கபற்றி ஒருமுத்திரைஉள்ளது. அந்தமுத்திரையின் அடிப்படையில் இப்போது இணையத்தில் அவர் பற்றி அறியலாம். நகர மண்டப பகுதியில் அவரது சிலையுண்டு. அதற்கு கீழ் அவர் பற்றிய சிறு குறிப்பு பொறிக்கப்பட்டுள்ளது. ஆய்வாளர்களிடம் கேட்கலாம். நூலகங்களில் புத்தகங்களை தேடிப் படிக்க [illegible] ளாக முத்திரைகள் அமையும்.

## சொல்லப்படாத கதைகள்

இப்படி ஒவ்வொரு முத்திரைக்குப் பின்னால் பல கதைகள் உள்ளன. முத்திரையில் சொல்லப்படாத பல கதைகளையும் நாம் அறிந்துகொள்ளலாம். அதனை ஆராய்ந்து படிக்கும்போது எம்மில் ஒரு மாற்றம் ஏற்படுவதை மறுக்க முடியாது"

" முத்திரைகள் மூலமாக எமது நாட்டின் கலாசாரம் உள்ளிட்ட விடயங்களை வெளிநாட்டவர்களும் அறிந்துகொள்ள முடியும். வெசாக், தைப்பொங்கல், ரமழான், கிறிஸ்மஸ் போன்ற விழாக்கள், கொடிகள், வாழ்வியல் போன்ற விடயங்கள் முத்திரைகளில் அச்சிடப்பட்டன.

வணக்கஸ்தலங்கள் , கதிர்காம கந்தன், காவடியாட்டம் ,மதத் தலைவர்கள் , அறுகம்பே, பாசிக்குடா போன்ற பிரசித்தி பெற்ற இடங்கள், பாரம்பரிய விளையாட்டுக்கள் என்பவையெல்லாம் முத்திரைகளில் அச்சிடப்பட்டன.

இவற்றைபார்ப்பது மட்டுமன்றி இவைகுறித்து ஆழமாக வாசிக்கும்போது எமது வரலாறு, நாம் ஒன்றித்து வாழ்ந்த விதம், வணக்கஸ்தலங்கள் என சகல விடயங்களையும் அறிந்துகொள்ளலாம். எமது நாட்டிலுள்ளவர்கள் வெளிநாட்டு முத்திரைகளை சேகரிப்பது போல வெளிநாட்டவர்களும் எமது நாட்டின் முத்திரைகளைச் சேகரிக்கின்றனர்"

1969 ஆம் ஆண்டில் பாடசாலைப் பிள்ளைகள் நெற் கதிருடன் காணப்படும் முத்திரை வெளியிடப்பட்டது. இதனை நாம் வாசிக்கும்போது பல விடயங்கள் தெரியவரும். டட்லி சேனாநாயக்கவின் ஆட்சியில் பாடசாலைப் பாடத்திட்டத்தில் விவசாயத்துக்கென ஒரு பகுதி ஒதுக்கப்பட்டது. அந்தப் பாடவேளையில் மாணவர்கள் வயலுக்குச் சென்று வேலை செய்ய் வேண்டும். மாணவர்கள் அந்தப் பாடவேளையில் விவசாயம் செய்தனர்.

(18ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



15

# தென்னம் தோப்புகளுக்கு பசளையிடல்



○ வடகோவை வரதராஜன்

நான்போகும் போது செல்லையர் தென்னை மர அடியில் சிறு குழி வெட்டிக் கொண்டிருந்தார் . பர்வதம் மாமி தென்னம் தோப்பில் இருந்த வேப்பமரமொன்றின் கீழ் சொரிந்து கிடந்த வேப்பம் சருகுகளை விளக்குமாற்றால் கூட்டிக்கொண்டிருந்தார். என்னைகண்டதும் "வாங்கோ விதானையார்" என வரவேற்ற பர்வதம்மாமி, தூக்கிச் செருகி இருந்த சேலையை அவசரமாக கீழிறக்கி விட்டார் .

வேலையை நிறுத்திய செல்லையர்

"வா மோனை " என வரவேற்றார் .

"என்ன செய்யிறியள் அண்ணை" என்றேன் நான் .

"உந்த வேப்பம் சருகுகளை வெட்டித் தாழ்ப்பம் எண்டு குழி வெட்டுறன் .வேப்பம் சருகு பயிருக்கு சொல்லப்பட்ட பயளை எல்லோ"

"தென்னை மரத்துக்கு உது காணுமே"

" ஏன் பத்தாதே? ஒரு வேப்ப மரச் சருகெல்லே தாக்கிறன்"

"யானைப் பசிக்கு சோளப்பொரி போட்ட மாதிரி இருக்கு மண்ணை"

"என்ன உப்படிச் சொல்லிப்போட்டாய் " என்று வாயைப் பிளந்தார் செல்லையார் .

"பெரும்தோட்டங்களில் இருக்கிற மரங்களுக்கு உந்தப் பசளை பத்தாது அண்ணை"

" ஏன் வீட்டிலை இருக்கிற மரங்களுக்கு வருசாவருசம் இப்படிக் குப்பையளைத்தானே வெட்டித் தாக்கிறம்?"

"வீட்டுக் குப்பைகளில் ஆட்டுப்புழுக்கை , மாட்டுச்சாணம் , அவைகளின் சிறுநீர் , அடுப்புச் சாம்பல், குசினிக்கழிவு கள் எல்லாம் சேர்ந்திருக்கும் .உங்கடை வீட்டு இரண்டொரு தென்னை மரங்களுக்கு இவை காணும் .இப்பிடி ஏக்கர் கணக்கில் செய்யும்போது உங்கடை வீட்டுக் குப்பையள் எல்லா மரத்துக்கும் காணுமோ?"

"அப்ப என்ன செய்ய வேணும் எண்டுறாய்?"

"அதுக்கு இயற்கைப் பசளையும் செயற்கைப் பசளையும் கலந்து போடவேணும்"

"செயற்கைப் பசளை எண்டு என்னத்தைச் சொல்லுறாய்?"

"நீங்கள் உரத்தையே சொல்லுறியள் விதானையார்? " என்று கேட்டார் பர்வதம்மாமி

"ஓமோம் உரத்தைத்தான் சொல்லுறன்"

"எட விசர்ப் பொடி, தென்னைக்கு ஆரும் உரம் போடுறவையே? மரத்தை நட்டம் , தேங்காய் எடுத்தம் , வித்தம் எண்டுதானே எல்லாற்றை வழமையும் ."

"உரம் போட்டால் தான் அண்ணை தென்னை மரத்தில் இருந்து உச்சப் பலனைப் பெற்று லாபமடையலாம்.

"உரம் எண்டு நீங்கள் யூரியாவைத்தானே சொல்லுறீங்கள் விதானையார் ? எனக் கேட்டார் பர்வதம்மாமி "எல்லாரும் யூரியாவைத்தான் தனிய உரம் என்று நினைச்சுக்கொண்டிருக்கினம்.

யூரியாவும் ஒருவகை உரம்தான் . யூரியாவிலை தனிய நைதரசன் தான் மட்டும்தான் இருக்கு .ஒரு பயிர் சிறப்பான முறையில் வளர நைதரசன் மட்டும் போதாது .மற்றைய மூலகங்களும் வேண்டும்"

"அதென்ன விதானையார் மற்ற மூலகங்கள்" "உரங்களைப் பற்றிச் சொல்லுறதெண்டால் கனக்கச் சொல்லவேணும் . இப்ப சுருக்கமாய் சொல்லுறன். பயிருக்கு தேவையான இந்த கனியுப்புக்களில் நைதரசன், பொஸ்பரசு, பொட்டாசியம் என்ற மூன்றையும் மாமூலகங்கள் எண்டு சொல்லுறது. இவை பயிர் வளர்ச்சிக்கு அதிகம் தேவை.

மக்னீசியம், சல்பர், நாகம் என்பவற்றை நுண்மூல கங்கள் ( Micro element)எண்டு சொல்கிறது . இவையும் குறைந்த அளவில் பயிர் வளர்ச்சிக்கு தேவை. போறன், கொப்பர், இரும்பு, மொலிப்பினம் இப்பிடி கொஞ்ச மூலங்கங்களை சுவட்டு மூலகங்கள் (Trace element) எண்டு சொல்லுறது .இவை மிகக் குறைந்த அளவில் பயிர்களுக்குத் தேவை"

" ஏ.எல் கெமிஸ்ரியில் படித்த ஆவர்த்தன அட்டவணையில் உள்ளனவற்றை எல்லாம் சொல்லுறிங்கள் விதானையார்" பர்வதம்மாமிக்கு , தான் படித்த பெண் என்பதை அடிக்கடி நிரூபிப்பதில் எப்போதும் ஒரு மகிழ்ச்சி . இப்படி படித்ததை மறக்காமல் இருக்கும் பண்பும் புதியவற்றை அறியும் ஆர்வமுமே எனக்கு அவரில் பிடித்த விடயங்கள் .

"அதேதான் ! ஆவர்த்தன அட்டவணையில் உள்ள இந்த மூலங்களில் அநேகமானவை பயிர்களுக்குத் தேவையான மூலகங்கள் . இந்த மூலகங்களில் நான் முதலிலை சொன்ன மாமூலகங்களை செறிவாக உற்பத்தி செய்து வைத்திருப்பதையே உரம் என்கிறோம் . இந்த உரங்களை இயற்கைப் பசளையோடு கலந்து வருடாவருடம் தென்னை மரங்களுக்கு போட்டால்தான் நாம் சிறப்பான பலன் பெறமுடியும்"

"ஏனடா மோனை வருசா வருசம் போடவேணும்? ஒருக்காப் போட்டால் பத்தாதே? " என்றார் செல்லையர் "ஒருவருடம் போட்ட உரம் ஒருக்காத்தான் பயிர்களுக்குக் காணும். அடுத்த வருடம் திரும்ப போடவேணுமண்ணை "ஏன் போட்ட உரம் மண்ணிலையோ மரத்திலையோ இருக்கும்தானே? "

விதானையார் வீட்டு முற்றம்

"இல்லையண்ணை , மரத்தில் இருந்து வரும் பிரயோசனங்களால் நாம் போட்ட உரத்தில் உள்ள கனியுப்புகள் அகற்றப்பட்டு தோப்புக்கு வெளியே போய்க் கொண்டே இருக்கும் . இப்படியே வருடாவருடம் கனியுப்புகள் அகற்றப்பட்டு வெளியே போய்க் கொண்டிருந்தால் , உங்கள் தோட்டத்து மண் வளமற்றுப் போகும்"

"என்ன விதானையார் புதுப்புது புதினம் எல்லாம் சொல்லுறியள்? கொஞ்சம் விளக்கமாய் சொல்லுங்கோ "சரி ஒரு சின்னக் கணக்குச் சொல்லுறன் ஆறுதலாய் , விளக்கமாய் கேளுங்கோ .

ஒரு ஏக்கர் தென்னம் தோப்பில் இருந்து அதாவது 64 தென்னை மரங்களில் இருந்து சராசரியாக ஒரு மரத்துக்கு 50 தேங்காய் என்ற கணக்கில் 64 தென்னை மரங்களில் இருந்து பெறப்படும் பிரயோசனம்களில் இருந்து , ஒரு வருடத்திற்கு அகற்றப்படும் கனியுப்புகள் இவ்விதம் அமையும். இதில் N எனப்படுவது நைதரசனையும், P பொசுபரசையும் K பொட்டாசையும் Mg மக்னீசியத்தையும் குறிக்கிறது.



**பாளை**
0.8 kg N ,0.4 kg P ,0.4 kg K ,0.4 kg mg

**மட்டையுடன் கூடிய ஓலை**
26 kg N ,4kg P,15.6 kg K ,7.6 kg mg

**பொச்சு ,சிரட்டை ,பருப்பு , இளநீர் அடங்கலான தேங்காய்**
19.2 kg N, 4kg P, 36.8kg K, 5.2 mg

**மொத்தம்** 46 kg நைதரசன்
8.4 kg பொஸ்பரசு
52.8 kg பொட்டாஸ்
13.2 kg மக்னீசியம்

**இவை முறையே**
100kg யூரியா
30.5 kg சபேஸ் பொஸ்பேற்
88 kg மியூரியேற் ஒப் பொட்டாஸ்
55 kg டொலமைற்

என்பற்றுக்கு சமனாகும் ."

"இவ்வளவு பசளை அகற்றப்படுகிறதோ விதானையார்? "

என்று பர்வதம் மாமி ஆச்சரியப்பட்டார் .

"ஓமோம் ,அதாலைதான் அகற்றப்படுகிற கனியுப்புகளை ஈடுகட்ட உரம் போட வேண்டும் என்று சொல்கிறேன் "

"அப்ப அண்டைக்கு பேப்பரிலை கிளிநொச்சியில் ஒரு கோடியே எண்பது இலட்சம் தொன் உரம் வருடாவருடம் கொட்டப்படுவதாய் வந்திருந்ததே விதானையார் "

" நானும் பார்த்தனான் , இதில் , வயலில் போடப்பட்ட உரத்தின் புள்ளி விபரம் தரப்பட்டுள்ளதே தவிர , நான் முன்பு சொன்ன மாதிரி பயிர்களால் கிரகிக்கப்பட்டு , நெல்லுடனும் வைக்கலுடனும் அகற்றப்பட்டு வயலுக்கு வெளியே போன உரத்தின் புள்ளி விபரம் தரப்படாதபடியால் இதை ஒரு பூரணமான செய்தியாக எடுக்க முடியாது"

"அதுதானே விதானையார் , நானும் படிச்சிட்டு பயந்து போனன்" "உந்த ஊர்த்துழவாரங்களை விட்டிட்டு நீ தென்னைக்கு உரம் போடுற விசயத்தை சொல்லு " என்றார் செல்லையர் .

நேரத்தைப் பார்க்க அது 10 மணி காட்டியது " மனிசி , தூசுதட்டி வீடு கழுவ வேணும் எண்டவா, நான் போட்டு பேந்து வந்து மிச்சத்தைச் சொல்லுறன் " என்றேன் நான்.

" போ! போ ! , இண்டைக்கு சமையலும் நீதான். அதையேன் சொல்லாமல் போறாய் " என்று தனது வழமையான நளினத்தை தொடங்கினர் செல்லையர் .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொற்சிலம்பம் போட்டி 44

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | ■ | 4 | | 5 |
| 6 | | ■ | 7 | | | ■ | |
| 8 | | 9 | | ■ | 10 | 11 | ■ |
| | ■ | | ■ | 12 | | | 13 |
| ■ | 14 | | 15 | | | ■ | |
| 16 | | | | | ■ | 17 | |
| 18 | | | | ■ | 19 | | |
| 20 | | | ■ | 21 | | | |

**அனுப்புபவர் பெயர்:..........................................**

**முழுமையான தபால் விலாசம்: ..............................**

**..........................................................**

**கையொப்பம்:.................................................**

ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருகின்றமையால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

## இடமிருந்து வலம்

1. அமர்க்களமாக 4. தெருக்கள் கூடும் இடம் 6. கையினால் அளவிடும் அலகு 7. தேர் இழுக்கப் பயன்படுத்தப்படும் கயிறு. 8. மடல்/ அஞ்சல்/தபால் 10. பிரி/வகு 12. விலங்குகளின் அடிக்கால்ப் பகுதி 14. தவறான செய்கை/ பிழையான நடவடிக்கை 16. தொடர்ந்து கிட்டுவதால் வரும் எதிர் உணர்வு/ அளவுக்கு மிஞ்சியதால் வருவது. 17. மறைவில் தீட்டப்படும் திட்டம் 18. உடலில் ஏற்படும் உட்காயம்/ ஒருவகை மண் வகை 18. எழுத்துக்களுக்கெல்லாம் முதன்மையானது. 20. உறுதி 21. மனைவியின் சகோதரியின் கணவன்.

## மேலிருந்து கீழ்

1. நட்சத்திரம் ஒன்றின் பெயர் 2. பொருள்கள் சேமிப்புக்கிடங்கு/ கழிவு எண்ணெய் 3. இந்து மதத்தின் உட்பிரிவுகளில் ஒன்று. 4. வேதனம்/ ஊதியம் 5. மேடையின் மறைப்புத் துணி/ படுதா 9. தற்பெருமை பேசுதல் 11. குத்து விழும் ஓசை 12. ஒருவர் எழுப்பும் சத்தம்/ பேச்சு ஓசை 13. மகன்/ புதல்வன் 14. விசாலமான/ விரிந்த 15. குற்றம் சுமத்துதல்/ விமர்சித்தல் 16. தினமும் மாற்றமுறுவது 17. அனைத்து/ எல்லா 19. உள்/ உட்புற

### சொற்சிலம்பம் போட்டி 42 க்கான விடைகள்

**இடமிருந்து வலம்**

1. சம்மதி 4. மதகு 6. தரிசனம் 8. பாகம் 10. கன 12. திண் 13. அலம்பல் 15. காமுகன் 17. கல 18. விட்டில் 19. சர்வ 20. மாசி 21. தவிர 23. பல்லாண்டு

**மேலிருந்து கீழ்**

1. சம்பாதி 2. மதம் 3. திரி 4. மனனம் 5. தம் 7. சகலன் 9. கண்காட்சி 11. வல்லவன் 13. அகல்தல் 14. பகர் 16.முடி 18. விமானி 19. சரண் 22. விலா

**சொற்சிலம்பம் போட்டி இல.44**
பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்
உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு
01.05.2021 இற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக
தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

## போட்டி விதிகள்

- வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
- சஞ்சீவியில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
- போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
- வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே

**ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/=**

பரிசாக வழங்கப்படும்.

**போட்டி இலக்கம் 42 இல் வெற்றி பெற்றோர் விபரம்**

**1 ஆம் பரிசு**
**திலகவதி இராமசாமி**
விமான நிலைய வீதி,
வளலாய், அச்சுவேலி.

**2 ஆம் பரிசு**
**சு.சிவநாதன்**
1569, கிருஷ்ணர் ஆலய வீதி,
இரத்தினபுரம் , கிளிநொச்சி

**3 ஆம் பரிசு**
**செல்வி அ.அஜந்தினி**
ஸ்ரீ பாஸ்கரன் வீதி, மல்லாகம்.

**4 ஆம் பரிசு**
**ர.சங்கவிகா,**
வேரவில், பூநகரி

**5 ஆம் பரிசு**
**செ.[illegible]**
[illegible] வீதி,
எழுதுமட்டுவாழ் தெற்கு.

**சொற்சிலம்பம் போட்டியில் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.**

○ கோகுலராகவன்



வீட்டில் ஒரு விசேடம் என்றால் 'ஊருக்கு சொல்லுதல்' முக்கிய விடயமாகும். ஊருக்கு சொல்லுதல் என்பது மிகச் சரியாகச் செய்ய வேண்டிய ஒரு காரியம். ஒருபிழை கூட வராமல் சொல்ல வேண்டும். முப்பது, நாற்பது வருடங்களுக்கு முன் இது ஒரு சடங்காகவே இருந்தது.

அந்த நாள்களில் இதனை 'வெற்றிலை வைத்தல்' என்றே சொல்வார்கள். சொல்லப் போபவர் மூன்று, ஐந்து வெற்றிலைகளை எடுத்துச் சென்று சம்பிரதாய முறைப்படி நிகழ்வை அறிவிப்பார். இதில் முதன்முதலாக சொல்லும் நிகழ்வு 'நாள் வெற்றிலை' எனச் சொல்வார்கள். இதற்கு நாள், நட்சத்திரம் பார்த்து குறிப்பிட்ட நாளில் மிக முக்கிய உறவினர்க்கு சொல்வார்கள். இதன் பின்பே ஊருக்குள் சொல்லுதல் ஆரம்பிக்கப்படும்.

ஊருக்குள் சொல்லும் நிகழ்வுக்கு முந்திய நாள்களில் ஐந்தாறு பேர் வருவார்கள். ஒரு வயதில் பெரிய ஆண், பெண் இரண்டு மூன்று சிறுவர்கள் முன்னால் ஓடி வருவார்கள்.




"அக்காவுக்கு கலியாண வீடு"

சிறியவர்கள் ஆர்வத்தால் சொல்ல,

"அப்ப உனக்கு எப்ப எண்டு சொல்லும்?"

வீட்டில்இருப்பவர்கள்சிரித்துக்கொண்டு கேட்பார்கள். சிறுவனோ சிறுமியோ வெட்கத்தில் நெளிவார்கள்.

"அப்ப கலியாண வீடு பகல் 10 மணிக்கு பொம்பிளை வீட்டிலைதான். கல்யாண வீட்டுக்கு எல்லோரும் வாருங்கோ"

"இருங்கோவன் அண்ணை"

"இல்லை, இல்லை, பதினைஞ்சுவீடுகிடக்கு"

சிறுவர்கள் முன்னால் ஓடத் தொடங்கி விடுவார்கள். மற்றவர்கள் பின் தொடர்வார்கள். இந்த வெற்றிலை வைத்தல் என்பது ஒரு மரபுத்தொடராகவும் பிரயோகிக்கப்பட்டு வந்தது. நாம் ஒரு ரகசியத்தை யாருக்கும் சொல்லிவிட்டால்

"ஏனப்பா ஊருக்கே வெத்திலை வைக்கிறாய்" என்று பேசுவார்கள்.

1981 காலப்பகுதியில் எங்களுடைய புது வீட்டுக்கு ( வீடு குடிபுகுதல்) சொல்ல என்னையும் சேர்த்து அனுப்பிவிட்டார்கள். அம்மா அந்த வருடம் வைகாசிப் பொங்கலுக்கு எடுத்த மஞ்சள் போர்டர் வைத்த சேர்ட்டும் கடும் நீல நிற டெரின் துணிக் காற்சட்டையும் சப்பாத்து மேசும் போட்டு அனுப்பி வைத்தார். போன வீட்டில் எல்லாம்

"இஞ்சேடா புதுவீட்டுக்காரன் வாறார்"

"அவர் என்ன மாப்பிளை மாதிரி வாறார்"

என்று புகழ, எனக்கு வெக்கம் தாளவில்லை. ஐந்து வீட்டோடு திரும்பி ஓடி வந்துவிட்டேன். போகும் வீடுகளில் ஆட்கள் இல்லா வீட்டில் 'குழைக் கொப்பு' ஒன்றை படலையில் செருகி விட்டு வர வேண்டும். இது நிகழ்வுக்கு யாரோ சொல்ல வந்திருக்கிறார்கள் என்பதற்கு அடையாளம். கெட்ட காலம் இந்தக் குழைக் கொப்பை மாடு, ஆடு இழுத்துச் சாப்பிட்டுவிட்டது என்றால் கெட்டது குடி.



" உன்னாணை குழை கொப்பு செருகினனாங்கள். பொடியனைக் கேள்" என்று நிகழ்வுக்கு சொல்லவில்லையே என்று கோபிப்பவர்களிடம் சொல்லப் போனவர் சாதிப்பார். நாமும் சாட்சி சொல்ல வேண்டும்.

"நாங்கள் இளக்காரமான ஆட்கள்.

"அதுதான் சொல்லேல்லையோ"

என அவர்களும் எதிர்க்கேள்வி கேட்பார்கள்.

இப்படித்தான் அண்ணனின் கல்யாண வீட்டுக்கு மார்க்கண்டு மாமாவும் மாமியும் ஒரு வாரமாக எங்கள் வீட்டில் தங்கி இருந்து உதவி ஒத்தாசை செய்தார்கள். சாமான் வாங்க, ஊருக்குச் சொல்ல, பலகாரம் சுட என்று எல்லாவற்றையும் ஓடி ஓடி செய்தார்கள். மார்க்கண்டு மாமாவைக் கேட்டே எல்லாக் காரியங்களையும் செய்யும் அளவுக்கு அவர் முக்கியமான ஆளாக இருந்தார். கல்யாண வீடு அன்று "வெளிக்கிட்டுக் கொண்டு வாறம்" என்று தங்கள் வீட்டுக்குப் போனவர்கள் வரவேயில்லை. அம்மா "வான் வெளிக்கிடப் போகுது கெதியாக கூட்டிக் கொண்டு வா" என்று அனுப்பினார். அங்கு போனால்

"எனக்கு கல்யாண வீட்டுக்கு சொன்னனீங்களோ?" என்று கேட்டார்கள்.

கேள்வி நியாயம்தான். அவர்கள் ஒருவாரமாக எமது வீட்டில் நின்றதால் அது பற்றி எவரும் யோசிக்கவில்லை.

"சரி மன்னிச்சுக் கொள்ளுங்கோ, வெளிக்கிட்டு வாருங்கோ"

இதன் பிறகுதான் மனுசன் வெளிக்கிட்டு வந்தார். காலம் மாறிவிட்டது. எஸ். எம். எஸ் இல் விசேடத்துக்கு சொல்லும் நிலை, வைபர் குறூப்பிலை போடும் நிலைமைக்கு வந்துவிட்டது. அந்தப் பழைய காலங்கள் இனி திரும்பி வர வாய்ப்பே இல்லை. நாமும் அதைப்பற்றி கவலைப்படப் போவது மில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிஞ்சு தூரிகைகள்



சி.தேஜஸ்வி
வேணி முன்பள்ளி
கொக்குவில்.



ஜெ.அபிசாந்
தரம்-2B
யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை



கே.அக் ஷிதா
தரம்-3A
சுண்டுக்குழி மகளிர் கல்லூரி





சி.பிருத்வி
தரம்-6
யாழ். இந்துக் கல்லூரி.



அ.அக்ஸயா,
தரம்-4
சைவப்பிரகாச வித்தியாசாலை,
பண்டத்தரிப்பு.



றெ.ஹெரஷோனா
தரம்-7
யா/ திருக்குடும்ப கன்னியர்மடம்.




எஸ்.கவிஷ்ணா
தரம்-7A
வேம்படி மகளிர் கல்லூரி.

# சிறுவர் சுடர்

## பழமொழிகளும் அதன் கருத்துக்களும்

1. இரக்கப் போனாலும் சிறக்கப் போ.
   வறுமையிலும் செம்மையாக வாழ வேண்டும்
2. இறைத்த கிணறு ஊறும், இறைக்காத கிணறு நாறும்.
   தருமம் செய்வது பெருமை.
3. இட்டுக் கெட்டார் யாருமில்லை.
   தர்மம் செய்து யாரும் ஏழையாகவில்லை.
4. கண்டது கற்க பண்டிதனாவான்.
   முடிந்த போதெல்லாம் படித்தால் வாழ்க்கையில் முன்னேறலாம்.
5. எறும்பூரக் கற்குழியும்.
   தொடர்ந்து முயற்சி செய்தால் பயன் கிடைக்கும்.
6. எடுப்பது பிச்சை, ஏறுவது பல்லக்கு.
   வீண் பெருமை பேசுதல்
7. கேள்விச் செவியன் ஊரைக் கெடுப்பான்.
   பிறர் பேச்சைக் கேட்பதால், தீமையே விளையும்.
8. குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும்.
   தவறு செய்தால் மனச்சாட்சி உறுத்தும்.
9. குடிப்பது கூழ், கொப்பளிப்பது பன்னீர்.
   பொய் கூறி பெருமை கொள்ளக் கூடாது.
10. வீட்டுக்கு வீடு வாசற்படி.
    ஒவ்வொரு வீட்டிலும் பிரச்சினை உண்டு.

## விடுகதைகள்

1. தொப்பி போட்ட காவல்காரன், உரசி விட்டால் சாம்பல் ஆவான் அவன் யார்?
   தீக்குச்சி
2. மண்ணுகுள்ளே கிடப்பான் மங்களகரமானவன். அவன் யார்?
   மஞ்சள்
3. ஊர் சுற்ற கூட வருவான் ஆனால் வீட்டுக்குளே வரமாட்டன் அவன் யார்?
   செருப்பு
4. ஏழு குதிரை பூட்டிய தேரில் வரும் மன்னவன் யார்?
   சூரியன்
5. தொட்டு விட்டால் ஏதும் இல்லை. அரைத்து விட்டால் சிவந்திடுவான்?
   மருதாணி

வ.மதுஜா,
தரம்07. யா/இந்து மகளிர் கல்லூரி.

## வழிகாட்டுவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# ஈஸ்ரர் ஞாயிறு படுகொலை: சீனத்துக்கு எச்சரிக்கையா?

மோகன் வைத்திலிங்கம்

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் நடைபெற்று இரண்டு வருடங்கள் கழிந்து விட்டன. அதற்குரிய விசாரணைகளை முன்னெடுத்த அரசு அதுதொடர்பான அறிக்கையை இன்னும் திறக்கவில்லை. தற்கால அரசியல் சூழ்நிலையில் அதுவே பேசுபொருளாகி இருப்பதோடு இலங்கை அரசியலில் ஒரு அசைவினை ஏற்படுத்தலாம் என்றும் கருதப்படுகிறது.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களின் உண்மையை வெளிக்கொண்டு வந்து. பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி நிலை நாட்டப்படும்வரை எமது எதிர்ப்பு நடவடிக்கைகள் தொடரும் என கொழும்பு பேராயார் கர்த்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்திருக்கிறார். அதனை வெறுமனே ஒரு நினைவேந்தல் உரையென எடுத்துக்கொள்வதை விடுத்து, அதன் பின்னணியைப் புரிந்து கொள்வது மிகவும் முக்கியமாகிறது. அனர்த்தம் இடம் பெற்று இரண்டு வருடங்கள் கடந்து விட்ட நிலையில் அதற்குச் சரியான நீதி கிட்டவில்லை என்ற ஆதங்கத்தில் அவர் பேசியிருப்பதாக எண்ணுவது பொருத்தமற்றது.

சர்வதேச அரசியலில் இலங்கையின் காய் நகர்த்தலில் அதிருப்தி கொண்ட மேற்குலக நாடுகள் பலவகையில் இலங்கைஅரசியலில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்த முனைவதாகக் குற்றம் சாட்டப்படுகின்றது. இத்தகைய சூழ்நிலையில், இவ்வாறானதொரு அறிவிப்பை ஆண்டகை மேற்கொண்டிருப்பதை ஏன் ஒரு வலுவான அரசியல் பின்னணி கொண்டதாக நாம் எடுத்துக்கொள்ளக்கூடாது? கோத்தாபய அரசின் கிடுக்குப் பிடிக்குள் சிக்கலாமென்ற பயத்தோடு மௌனிகளாக இருந்த பல அரசியல் சர்ப்பங்கள் தற்போது மீண்டும் எழுந்து ஆடத்தொடங்கியிருக்கின்றன. அது அத்தனை ஆரோக்கியமாகத் தென்படவில்லை என ஒருதுறைசார் ஆய்வாளர் எச்சரிக்கிறார்.

உயிர்த்த ஞாயிறன்று நடத்தப்பட்ட அதிமோசமான குண்டுத்தாக்குதல்களின் பாதிப்பில் இருந்து இன்னும் பலர் வெளிவர முடியாதிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அந்தத் தாக்குதலில் காலி முகத்திடலில் அமைந்துள்ள கிங்ஸ்பெரி ஹோட்டல் தாக்கப்பட்டது. இலங்கை அரசுடன் இணைந்து கூட்டாகக் கடல்சார் ஆய்வுகளை நடத்தவென வந்து அந்த ஹோட்டலில் தங்கியிருந்த நான்கு சீனப் பிரஜைகள் கொல்லப்பட்டிருந்தார்கள். சீனாவுக்குச் சொந்தமான ஷங்கிரில்லா ஹோட்டலிலும் குண்டு வெடிப்பு நிகழ்ந்துள்ளது. ஆனால் அந்த ஹோட்டலுக்குச் சில மீற்றர்கள் தூரத்திலுள்ள அமெரிக்கருக்குச் சொந்தமான ஹில்டன் ஹோட்டலுக்கும் இந்தியருக்குச்சொந்தமான தாஜ் ஹோட்டலுக்கும் எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை. தாஜ்ஹோட்டலைக் குறிவைத்து வந்த குண்டுதாரி, தாக்குதலை நடத்த முடியாததால் பின் வாங்கிச் சென்றுவிட்டார் எனவும் அவர் உடலில் இருந்த குண்டே பின்னர் தெஹிவளையில் உள்ள ஒரு விடுதியில் வெடித்ததாகவும் செய்திகள் வந்து இரு வருடங்கள் ஓடி மறைந்து விட்டன.

முன்பு ஒரு முறை இதே பாணியில் மும்பை நகரத்தில் ஒரு தொடர்க் குண்டு வெடிப்பு நடைபெற்றபோது, இந்தியாவே அதிர்ந்து போனது. அதனையும் இஸ்லாமிய தீவிரவாதிகளே முன்னின்று நடத்தினர். அந்தக் குண்டு வெடிப்பிலும் பெரும்பாலும் நட்சத்திர ஹோட்டல்களே குறிவைக்கப்பட்டிருந்தன. அந்தக் குண்டுத் தாக்குதலும் இந்திய தேசத்தின் பொருளாதாரத்தைச் சிதைப்பதற்காகவே செய்யப்பட்டதாகச் சொல்லப்பட்டது.

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்களில் தம்மை ஈடுபடுத்திக் கொண்ட தற்கொலைதாரிகள் மிகவும் வெறியூட்டப்பட்ட நிலையில் மூளைச்சலவை செய்யப்பட்டே வெடித்து சிதறத் தூண்டப்பட்டிருக்கிறார்கள். அவர்களைப் பொறுத்தவரை ஒரு இலட்சிய நோக்கோடு அவர்கள் தமது உயிரைத் தியாகம் செய்வதாக நம்பியே களத்தில் இறக்கப்பட்டிருக்கலாம். மிகவும் அர்ப்பணிப்போடு அவர்கள் தமது கடமைகளைச் செய்து முடித்திருப்பது தெரிகிறது. தமது உயிரைத் தியாகம் செய்திருப்பதை அறியலாம். ஆனால் இந்தத் தற்கொலைத் தாக்குதல்களைத் திட்டமிட்டவர் அல்லது குழுவினர் முழுக்க ஒரு வியாபார நோக்கத்தையும் ஒரு அரசியல் இலாபப் பின்னணியையும் கொண்டே இயங்கியதாகச் சந்தேகிக்கப்படுகிறது. அதாவது 'எய்தவன் இங்கில்லை. குண்டுதாரிகள் வெறும் அம்புகள் தான்' என ஐயம் வெளியிடப்பட்டிருக்கிறது. எனவே இது ஒரு வியாபார உடன்படிக்கை என்பதால் எய்தவன் ( சூத்திரதாரி) நிச்சயம் உயிரோடு தான் இருப்பார் எனப் பலர் நம்புகின்றனர்.

ஈஸ்டர் குண்டுவெடிப்பில் கிறிஸ்தவ சமயம்சார் வழிபாட்டுத் தலங்களே அதிகம் குறிவைக்கப்பட்டிருந்தாலும் சம்பந்தமில்லாது நட்சத்திர ஹோட்டல்களும் தீவிரவாதிகளின் குறிகளாக இருந்தன. கிறிஸ்தவ தேவாலயங்களையும், நட்சத்திர ஹோட்டல்களையும் இலக்கு வைத்துத் தாக்குதல் நடத்திய அந்த இஸ்லாமிய தீவிரவாதிகள் அதற்காக எந்தவித கோரிக்கைகளையும் முன்வைக்கவில்லை? இந்தக் கேள்விக்கு இன்னும் பதிலில்லை.

ஈஸ்டர் தாக்குதலுக்கான பின்னணியும், அது தொடர்பாகக் கைது செய்யப்பட்டிருப்பவர் பற்றிய செய்திகளும் ஒரு விதக் குழப்பத்தோடு இருக்கையிலேயே அது பற்றிய விசாரணை அறிக்கை வெளியிடப்பட்டிருக்கிறது. ஆனால் அறிக்கை இன்னும் திறக்கப்படவில்லை. அது திறக்கப்பட்டால் அது தொடர்பான பல உண்மைகள் மக்களுக்குத் தெரியவரலாம் என்று சொல்லப்படுவதில் அர்த்தமுண்டா என்பது தெரியவில்லை. சிலவேளைகளில் அறிக்கை புஷ்வாண மாகப் போகக் கூட வாய்ப்புகள் உண்டு.

ஈஸ்டர் தாக்குதல்கள் பற்றிய பல சந்தேகங்களை தீர்த்து வைக்கும் என்று எதிர் பார்த்துக் காத்திருந்த மக்களின் விழிகளைப் பிதுங்க வைத்திருக்கிறது மூடிய அறிக்கை.. அதனாலேயே குண்டு வெடிப்புப் பற்றிய சந்தேகங்கள் இன்னும் வலுக்கின்றன. அதனால் விரக்தியுற்றுத்தான் ஆண்டகை அவ்வாறு பேசி இருப்பாரோ?

ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் நடந்து இரண்டு ஆண்டுகள் முடிவுற்றிருக்கின்ற நிலையில் "அது சர்வதேச நலன்களை அடிப்படையாகக் கொண்டு நடத்தப்பட்ட தாக்குதல். அந்தத் தாக்குதல் ஒரு குறிப்பிட்ட மதம் சார் நிலைகளைக் குறிவைத்து நடத்தப்பட்டாலும் தாக்குதல்களைத் திட்ட மிட்டவர்களதும் அதனைப் பின்னின்று நடத்தியவர்களதும் நோக்கம் அதுவல்ல. அதற்கூடாக அவர்கள் வேறுஎதையோ சாதிக்க முனைந்திருக்கிறார்கள். இல்லாவிடில் ஒரு குழப்ப நிலையை மக்கள் மத்தியில் தோற்றுவிக்க முனைந்திருக்கிறார்கள். ஏனெனில், பெரும்பான்மைஇனத்தவரைஉள்ளடக்கிய சமயத்தையோஅல்லது மற்றைய சமயத்தை விலக்கி விட்டு கிறிஸ்த சமயத்தைக் குறிவைத்தது எதனால் என்பதில் பல சந்தேகங்கள் உண்டு " என்கிறார் ஒரு அரசியல் ஆய்வாளர்.

நடைபெற்ற தாக்குதல்கள் முஸ்லிம் அடிப்படைவாதிகளினால் நடத்தப்பட்டதாக விசாரணையில் தெரிய வந்துள்ளது. பொதுவாக இந்திய அரசை அச்சுறுத்தவே இஸ்லாமிய தீவிரவாதிகள் இதுபோன்ற தாக்குதல்களை நடத்துவது வழக்கம். அப்படியாயின் அவர்கள் இங்குள்ள இந்திய முதலீடுகளையும் அவர்கள் தொடர்பான நிலைகளையும் அல்லவா இலக்கு வைத்திருக்க வேண்டும்? கிறிஸ்தவ மதத்தைக் குறிவைத்தனர். ஏன் அவர்கள் சிறு பான்மையினரைக் கொண்ட கிறிஸ்தவ சமூகத்தை மட்டும் தெரிவு செய்தனர்? சிங்கள இனத்தைச் சேர்ந்த கிறிஸ்தவர்கள் குறிவைக்கப்படாததன் பின்னணி என்ன? இப்படி இன்னும் கேள்விகள் வலுக்கின்றன.

தாக்குதல் பற்றி முன்னரும் ஆண்டகை பேசியிருக்கிறார். அதற்குப் பின்னால் சர்வதேச சக்திகளின் தலையீடு இருப்பதாகச் சுட்டிக்காட்டியிருக்கிறார். ஆனால் அண்மைக்காலமாக அவர் பேச்சில் கடூரம் தெரிவதோடு, அரசை நோக்கிய எச்சரிக்கையாகவும் அவர் பேச்சுகள் காணப்படுகின்றன. அந்தத் தாக்குதல்களின் உண்மைப் பின்னணியை அவர் அறிந்திருக்கிறார். அதன் எதிரொலி தான் அவரது கடுமையான வார்த்தைகளுக்குக் காரணம் என்று சொல்லப்படுகிறது. தாக்குதலுக்குப் பின்னாலுள்ள நோக்கத்தையும் மர்மங்களையும் பொது வெளியில் முடிச்சவிழ்க்க முனைகிறாரா ஆண்டகை? ஆனால் ஈஸ்டர் தாக்குதலுக்குச் சர்வதேச அரசியல் ஆய்வாளர் ஒருவர் "இது ஒரு பழிக்குப் பழிவாங்கும் நடவடிக்கை. சிறிது காலத்துக்கு முன்னர் நியூசிலாந்து நாட்டில் உள்ள மசூதியில் நடைபெற்ற முஸ்லிம்கள் மீதான தாக்குதலுக்குப் பதில டிகொடுப்பதற்காகவே திட்டமிட்டு நடத்தப்பட்டிருக்கிறது." என்று விளக்கம் அளிக்கிறார். இதனை நியூசிலாந்து அரசு மறுத்துள்ளது.

இந்த முஸ்லிம் தீவிரவாதிகளின் பின்னணியில் சீன எதிர்ப்புச் சக்தி இருப்பதாக நம்பப்படுகிறது. அதனால் தான் தாக்குதல் நடத்தியவர்கள் சீன சார்பு நிலைகளில் தாக்குதல்களை மேற்கொண்டனர் என்றும் சொல்லப்படுகிறது. அதேசமயம் சீனமுதலீடுகள் மற்றும் இலக்குகள் மீதான தாக்குதல்களை ஏன் தற்செயலானவை எனக் கருதமுடியாது? எனவும் சிலர் கேள்வி எழுப்புகிறார்கள்.

*(21ஆம் பக்கம் பார்க்க)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்தேகம் 1

வேலைத்தலத்திலிருந்த போது மூன்று தடவைகள் பெரியவனுக்கு வந்த தொலைபேசி அழைப்பு யாருடையது? மகனின் பாடசாலையில் கூட்டம் என பொய் கூறிவிட்டு வேலை செய்யும் இடத்திலிருந்து வீட்டுக்கு அவன் வந்தது ஏன்? இத்தனைக்கும் ஒருதடவை கூட பிள்ளைகளின் பாடசாலைக் கூட்டங்களில் பெரியவன் கலந்துகொண்டதே இல்லை என்றும் கூறப்படுகிறது. அப்படியானால் யாரோ பெரியவனை கொலை செய்யத் தூண்டியதால் தான் அவன் வேலையை இடைநடுவில் விட்டுவிட்டு வீட்டுக்கு சென்றானா? அப்படி கொலை செய்ய தூண்டியவர்களும் குற்றவாளிகள் அல்லவா, பெரியவனின் தொலைபேசித் தொடர்பாடல் மூலம் அவனைக் கொலை செய்யத் தூண்டியவர்களைக் கண்டறிந்து தண்டிக்கலாமே.

## சந்தேகம் 2

அவன் கொலை செய்த விதத்தைப் பார்க்கும் போது, வினோ வீட்டுக்கு வரமுதலே அவளைக் கொலை செய்வதெனத் தீர்மானித்துவிட்டான். அப்படிக் கொலை செய்ய முடிவெடுத்தவன் மனைவியைக் கொன்ற பின்னர் எதற்காக தானும் தூக்கில் தொங்கினான்?

## சந்தேகம் 3

தற்செயலாக, ஆத்திரத்தில் கொலை செய்திருந்தால் அதற்கு முன்னர் அன்றைக்கோ அல்லது அதற்கு முதல் நாள்களிலோ ஏதும் சண்டை வினோவுக்கும் , பெரியவனுக்கு இடையே நடந்திருக்க வேண்டும். ஆனால் அப்படி ஏதும் சம்பவம் நடைபெற்ற தினத்துக்கு முந்திய இரண்டு நாள்களாக நடக்கவில்லை. அன்று காலையும் சுமுகமாகவே அவர்கள் வீடு இருந்துள்ளது. அப்படியானால் வினோ வந்தவுடன் கொலை செய்வதற்காகவே காத்திருந்தவன் போல் உடனேயே பெரியவன் அறைக்குள் நுழைந்து கொலை செய்யுமளவுக்கு அவன் வேலைக்குப் போய் வந்த இடைப்பட்ட சில மணித்தியாலங்களில் என்ன நடந்தது?

## சந்தேகம் 4


இதற்கு முன்னரும் ஊரில் உள்ள குறித்த பெண்ணுடன் பெரியவனுக்கு தொடர்பிருப்பதாக , வினோ சொல்லியிருக்கிறார். அப்படியானால் ஏன் வினோவின் உறவினர்களோ, 14 முறை முறைப்பாட்டைப் பெற்ற பொலிஸாரோ அந்தப் பெண்ணை விசாரிக்கவில்லை? அப்படி விசாரித்திருந்தால் வினோவுக்கும்,பெரியவனுக்கும் இடையிலான சண்டைகளை ஓரளவு குறைத்திருக்கலாமே?

(13ஆம் பக்கத் தொடர்ச்சி)

# எழுத்தில்லாப் புத்தகங்கள்

ஒரு 'நிமிடக்கதை'

○ அகமது பைசல்



உலகில் உள்ள எல்லாத் தமிழ்ப் புத்தகங்களும் இன்றுமுதல் எழுத்துக்களை நிராகரித்துவிட்டன என்ற செய்தி சற்று முன்தான் வந்திருந்தது. பதற்றமடைந்தேன். அவசரமாக ஓடிச் சென்று எனது புத்தக அலுமாரியைத் திறந்தேன்.

நெல் மணிகள் போன்று எழுத்துக்கள் கீழே சரிந்து விழத்தொடங்கின. எழுத்துக்கள் கீழே விழுவதைக் கண்டதும் என் உடல் நடுங்கியது. உடனே அலுமாரிக் கதவை அடைத்துவிட்டு விறாந்தையில் இருந்த சைக்கிளைத் தள்ளிக் கொண்டோடி மிதித்து. சந்தியில் வைத்து ஏறி மூச்சிரைக்க நூலகத்துக்குச் சென்றேன்.

நூலகத்தில் இருந்த யாரும் இந்தச் செய்தியை இன்னமும் கேள்விப்படவில்லைபோலும். அவர்கள் வழமையான வேலையில் மூழ்கியி ருந்தார்கள். வாசிப்புப் பகுதியில் ஒரு வாச கர் கூட இல்லை. பத்திரிகை ஒன்றின் மேல் அழுக்கேறிய தொப்பி ஒன்று கிடந்தது. இரவல் பகுதியில் நூலக ஊழியர்களில் ஒருத்தி கைத்தொலைபேசியில் மூழ்கியிருந்தாள். இன்னொருத்தி கறுப்புப் பேனாவை பற்களால் கடித்துக்கொண்டு ஆழ்ந்த யோசனையில் மூழ்கியிருந்தாள். இருபத்தைந்து நிமிடங்களுக்கும் மேலாக புத்தகம் இரவல் எடுக்க யாரும் வரவில்லை. உள்ளே சென்றேன்.

புத்தக அலுமாரிகளைச் சுற்றி வலம் வந்தேன். "பிளீஸ் இந்த அலுமாரிக் கதவைத் திறவுங்க" என்றேன். அவள் கையில் இருந்த பேனாவை மேசையில் போட்டுவிட்டு மெல்லிய கோபத்தோடு சாவிக் கொத்தைக் கையில் எடுத்துக்கொண்டு அந்த அலுமாரியின் பக்கம் விரைந்தாள்.

ஏழாம் இலக்க சாவியால் கதவைத் திறந்தாள். கதவு விரிந்த மறு கணம் எழுத்துக்கள் எல்லாம் நெல் மணிகள்போல் கீழே சரியத் தொடங்கின. அவள் கத்திக் கதறியடித்து வெளியே ஓடினாள். இதைக் கண்ட மற்றவளும் பதறிக்கொண்டு வெளியே ஓடினாள்.

நான் உள்ளேதான் நின்றேன். எழுத்துக்களால் எனது இரு கால்களும் மூழ்கிப்போயிருந்தன. ஒரு சொல்லைக் கூட வாசிக்க முடியவில்லை. சொற்கள் குழம்பிக் கிடந்தன.

அந்த அலுமாரிக்குள் இருந்த அனைத்தும் தமிழ் நாவல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள். தனக்கு எதுவுமே நடக்காததுபோல் ஒன்றில் ஒன்றாக சாய்ந்துகொண்டு நின்றிருந்தன. நான் நின்றபடியே ஒரு புத்தகத்தைக் கையில் எடுத்து விரித்தேன். வெறும் தாள்கள் படபடவென விரிந்தன. அதன் மெல்லிய காற்று என் முகத்தில் படர்ந்தது. இத்தனைக்கும் மத்தியில் புத்தகங்களின் அட்டை கதகதப்பாகவே இருந்தது. இப்போது உலகில் எங்கெல்லாம் தமிழ்ப் புத்தகம் வாசிக்கப்பட்டுக் கொண்டிருக்கும்? அவர்களின் நிலை என்னவாக இருக்கும் என்று சிந்தித்தேன்.

நூலகத்தை விட்டு வெளியே வந்தேன். அந்தச் சிறிய வாகை மரத்துக்குக் கீழே கிடந்த கொங்கிறீட் இருக்கையில் அமர்ந்து ஒரு இளம் பெண் புத்தகம் ஒன்றைப் படித்துக்கொண்டிருந்தாள். அவள் அருகே நெருங்கினேன்.

விரிக்கப்படாத பக்கங்களுக்குள் இருந்து தமிழ் எழுத்துக்கள் அவள் மடியிலும், நிலத்திலும் விழுந்து சிதறிக்கொண்டி ருந்தன. அவள் வாசிக்கும் பக்கத்தின் எழுத்துக்கள் மட்டும் கீழே விழவில்லை. அவளும் என்னைக் கவனிக்காமல் அந்தப் பக்கத்திலே மூழ்கியிருந்தாள்.

நூலகத்திலிருந்து என் மிதிவண்டியை மிதித்து பள்ளிக்கூடம் சென்று பார்த்தேன். "இப்போதெல்லாம் போலிப் புத்தகமும் வரத்தொடங்கிட்டு" என்று சொல்லி மனது நொந்தபடி ஒருவர் என்னை உரசாத குறையாக விலகிச் சென்றார். மாணவர்கள் கையில் புத்தகங்களுடன் "புத்தகத்தில எழுத்தைக் காணலலே..வெறும்தாள்தான் இருக்கே.. சார்..."என்று சத்தமிட்டுக்கொண்டு வகுப்பறையை விட்டு வெளியே குதித்து ஓடத் தொடங்கியிருந்தார்கள். வகுப்பறையெங்கும் எழுத்துக்கள் சிதறிக் கிடந்தன. ■

## ஆதரவு தேவை பிள்ளைகளுக்கு!

பெற்றோரை இழந்த வினோவின் பிள்ளைகள் மூவரும் இப்போது, வயதான நிலையில் உள்ள அம்மம்மாவோடு வசித்து வருகின்றனர். வினோவின் தாயாருக்கும் போதுமான வருமானமில்லை. காணியில் உள்ள தேங்காய்களை விற்பனை செய்வதன் மூலம் கிடைக்கும் பணம் தான் அவர்களது வருமானம்.

இந்தநிலையில் கல்வி கற்கின்ற மூன்று பேரப்பிள்ளைகளின் எதிர்காலம் குறித்த அச்சமும் அம்மம்மாவிடம் உண்டு." "நன்றாக படிக்கக் கூடிய பிள்ளைகள். எப்படியாவது படிப்பித்து விட்டால் அவர்கள் சொந்தக் காலில் நிற்பார்கள். எனக்கும் வயதாகிவிட்டது. வருத்தமும் உள்ளது.

ஆனால் என்னுடைய பேரப்பிள்ளைகளை எந்தச் சிறுவர் இல்லத்துக்கும் விடமாட்டேன். நல்லபடி படிப்பிக்கிறது தான் என்னுடைய விருப்பம்" என்று தனது ஆதங்கத்தை தெரிவிக்கும் அந்த வயதான அம்மம்மாவின் ஆசைகளை நிறைவேற்ற இயலுமானவர்கள் ஆதரவு கொடுங்கள். ■




அப்போது யார் ஜனாதிபதி, யார் பிரதமர், யார் கல்வியமைச்சர் என அனைத்து விடயங்களையும் நாம் தேடும் போது ஒரு முழுமையான வரலாற்றுக் கதையைப் படிக்கலாம்.

இலங்கையில் முத்திரை அச்சடிக்கும் பணியை, முத்திரை ஆலோசனை குழுவே முன்னெடுத்து வருகின்றது. சுமார் 8 பேர் அடங்கிய குறித்த குழுவானது ஒவ்வொரு வருடமும் செப்[illegible] தொடர்பாக [illegible] கருத்தைக் கோரும். இதற்கு அனைவரும் தமது திட்டங்களை கையளிக்கலாம். அதனை ஆராய்ந்தே அடுத்த வருடத்துக்கான முத்திரைகள் அச்சடிக்கப்படுகின்றன.

உலகளாவிய ரீதியில் அச்சுறுத்தலை ஏற்படுத்திய கொரோனா வைரஸுக்கு எதிரான நடவடிக்கையை ஊக்குவிக்கும் பொருட்டு கடந்த 2020ஆம் ஆண்டு 5 முத்திரைகள் வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். இப்படி அந்த வருட நிகழ்வை அந்த வருடமே முத்திரையாக அச்சிடுவதென்பது அசாதாரணம். சிலவேளைகளில் மட்டுமே அப்படி நடக்கும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட மாகாண சபை அவைத்தலைவர் சிவஞானம் ஐயாவுக்கு



ஐயா,

வணக்கம். ஆனை இருந்தாலும் ஆயிரம் பொன்; செத்தாலும் ஆயிரம் பொன் எண்டு சொல்லுறவை. அது உங்களுக்கு நல்லாய்ப் பொருந்தாது. வட மாகாண சபை செத்து இப்ப கன நாளாய்ப் போச்சுது. ஆனால் என்றும் பதினாறு வயது மார்க்கண்டேயர் மாதிரி இண்டைக்கும் அவைத்தலைவர் பதவியிலை இருந்து சம்பளம் எடுத்துக் கொண்டிருக்கிறியள். நான் இப்ப சொல்லப்போற விசயம் ஆறிப்போன கஞ்சி எண்டு சொல்லுவியள். ஏழையளுக்கு ஆறின பழங் கஞ்சிதான் சாப்பாடு. எங்களுக்கை ஒற்றுமைக்கு ஏன் காகத்தை உதாரணமாய்ச் சொல்லுறவை? காகத்தைப் பாருங்கோ! தங்களுக்கு எண்டு ஒரு பிரச்சினை வந்திட்டால் எல்லாம் சேர்ந்து இருந்து கொண்டு ஒண்டாய்த்தான் கத்துங்கள். நீ அரசமரத்துக் காகம், நான் ஆல மரத்துக் காகம் எண்டு பிரிஞ்சு நிக்காதுகள். மனுசராய்ப் பிறந்த நாங்கள் தான் நீ பச்சை,நான் சிவப்பு, நீ கறுப்பு, நான் வெள்ளை எண்டு எங்களுக்குள்ளை கன்னை பிரிச்சு அடிபடுறம்.

இண்டைக்கும் செல்வநாயகத்தாரைத்தான் தந்தை செல்வா எண்டு சொல்லுறவை. அவருக்குப் பிறகு வேறை ஆரையும் தமிழ்ச் சனம் தந்தை எண்டு சொல்லேல்லை. அது மாதிரித்தான் அந்த மனுசர் சீவிச்ச வர். பிறரின்ரை காசுக்கு ஆசைப்பட்டது கிடையாது. கதிரை ஆசையோ பதவி ஆசையோ அவரிட்டை இருந்ததில்லை.

## அவசரமா ஒரு கடுதாசி

அழுகல் சேட்டை இல்லை. இப்ப என்னடாவெண்டால் கட்சிக்குள்ளை சண்டை. கதிரைக்குச்சண்டை. "தங்கடை வம்சம் தான் அரசியல் செய்ய வேணும். வேறை ஆரேன் உள்ளுக்கை வந்தால் கொத்திக் கலைக்கிறது". இப்பிடியான வையை வைச்சுக் கொண்டு தமிழ்ச் சனத்துக்குத் தீர்வை வேண்டிக் குடுக்கேலுமோ?

ஒரு சொல்லைச் சொல்லேக்கை இடம், பொருள், ஏவல் எண்டு எல்லாத்தையும் பாக்க வேணும் எண்டு அப்பு அடிக்கடி சொல்லுறவர் காவல் படை யின்ரை விசயத்திலை மேயர் மணி வண்ணனை பொலிஸ் பிடிச்சது சரியோ? பிழையோ? எண்டதைப் பற்றி நாங்கள் பிள்ளையார் கோயில் வீதியிலை மேடைபோட்டுப் பட்டிமன்றம் நடத்துவம். அது எங்களுக்குள்ளை நாங்கள் அடிபடுவம். கட்டிப் பிடிச்சுப் பிரளுவம். ஆனால் எதிரிக்குக் காட்டிக் குடுக்கிற மாதிரி ஒண்டும் செய்யப்படாது.

ஆளைப் பிடிச்சக் கொண்டு போயிட்டினம். முனிசிபல் பெடியளுக்குக் குடுத்தது முன்னம் புலியள் போட்ட சட்டை எண்டு சிங்களப் பேப்பரும் ரீவியும் வாய் கிழியக் கத்திறாங்கள்.


பயங்கரவாதத் தடைச் சட்டத்தைக் காட்டி உள்ளுக்கை போட்டாலும் போடுவங்கள் எண்டு சனம் கதைச்சு அமளிப்பட்டுதுகள். உள்ளுக்க போட்டால் ஆறு மாதத்துக்கு ஒண்டும் செய்யேலாது எண்டு சில அப்புக்காத்துமார் சொல்லிச்சினம். ஆனால் நீங்களோ "காவல் படையைச் சட்டத்தோடை போட்டவரோ? இல்லாட்டி தன்ரை எண்ணத்துக்குப் போட்டவரோ?" எண்டு ஆராய்ச்சி நடத்திறியள்.. உங்கடை வயசுக்கும், அனுபவத்துக்கும் மணிவண்ணனைக் கூப்பிட்டு இதுகளை நேரிலை சொல்லிக் குடுக்கலாம். .

நீங்கள் ஒரு பழுத்த அரசியல்வாதி எண்டு ஆக்கள் சொல்லுறவை. இப்ப கட்சி இருக்கிற நிலமையிலை நீங்கள் தான் ஒரு மாதிரி ஆக்களைப் புத்தி சொல்லி இழுத்துக் கொண்டு போக வேணும். வழியைக் காட்டுறவன் கடிவாளம் பிடிக்கப்படாது. அதாலை பதவியைக் குறிவைக்கிறதை விட்டிட்டு கட்சியைத் தூக்கி நிறுத்திறதைப் பற்றிச் சிந்தியுங்கோ.

நன்றி

இப்படிக்கு
அன்பு மறவா
**அப்பாவி அன்னமுத்து.**

# வித்துவான் பதில்கள்!



**வித்தூ... திருமணம் செய்யும் பெண்ணுக்கு சமையல் தெரிந்திருக்க வேண்டியது அவசியம் தானா?**
இனியா, மறவன்புலோ

கணவனைக் கொண்டு சமைப்பிக்கத் தெரிந்திருந்தால் போதும்.



**ஒரு பெண்ணை காதலித்து விட்டு விட்டிட்டுச் செல்லும் ஆண்களை என்ன செய்யலாம்?**
*சுகுமார், மன்னார்.*

காதலிப்பது தப்பில்லை. விட்டுவிட்டுச் செல்வது தான் தப்பு. அதற்குப் பிறகு வேறு யார் கட்டுவார்கள்?

**வித்துவானே.. தனியாகச் செல்லும் போது சாதுவாகவும், நண்பர்களுடன் நிற்கும் போது சகலகலாவல்லவனாகவும் விளங்கும் ஆண்கள் குறித்து?**
*உஷாயினி, கரவெட்டி*

தனி மனிதர்களிற் பெரும்பாலானவர்கள் நல்லவர்கள்தான். ஆனால் குழுவாகச் சேரும் போது தவறான திசையில்தான் இழுத்த இழுப்புக்கு இழுபடுகிறார்கள். அல்லது இழுத்துச் செல்கிறார்கள்.



**வித்தூ... இலகுவாகப் பணம் சம்பாதிக்கக் குறுக்கு வழி என்ன?**
***காண்டீபன், தெல்லிப்பழை***

சுவீப் ரிக்கற் எடுத்துப் பாருங்கள். அதிஷ்டம் இருந்தால் 20 ரூபாவுடன் 2 கோடி அள்ளலாம்.

**காதலர்கள் கடலோரத்தில் படகின் மறைவில் இருந்து காதலிப்பது போல சினிமாவில் காட்டுவது ஏன்?**
**கதிரேசன், உடுப்பிட்டி.**

கடற்கரையில் கடலை போடக் கிடைக்கும் மறைவு படகு மறைவு ஒன்றுதானே?





**அரசியல்வாதிகள்; நடிகைகள் ஒற்றுமை என்ன?**
*சுலக்ஷி, மானிப்பாய்.*

ஆரம்பத்தில் தவறு செய்யக் கூச்சமாக இருக்கும். போகப் போகக் கூச்சநாச்சம் எல்லாம் எடுபட்டுப் பழகிவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சஜித் பிரேமதாசவும் 'போர்ட் சிட்டியும்'





○ அ.நிக்ஸன்

போர்ட் சிற்றி' எனப்படும் கொழும்பு சர்வதேச வர்த்தக நிதி நகரம் பற்றிய சர்ச்சை பிரதான அரசியல் கட்சிகளிடையே தொடர்ச்சியாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது பௌத்த குருமார் இந்தத் திட்டத்துக்கு எதிராகக் குரல் கொடுக்கின்றனர். ஆனால் சீன அரசினால் இலங்கைத்தீவில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டத்ங்களுக்கு எதிர்ப்பு வெளியிடாத பௌத்த குருமார், இந்த வர்த்தக நிதி நகரத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு ஆறு ஆண்டுகள் முடிவ டைந்துள்ள நிலையில், அதுவும் 55 சதவீதமான நிர்மாணப் பணிகள் பூர்த்தியடைந்துள்ள நிலையில் தற்போது எதிர்ப்பை வெளியிடத் தொடங்கியுள்ளனர்.

2009 ஆம் ஆண்டு ஈழப்போர் ஈழப்போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதொரு பின்னணியில், இந்தோ பசுபிக் பாதுகாப்புப் போட்டியில் அமெரிக்காவும் சீனாவும் போட்டியிட ஆரம்பித்தன. இந்தியாவைப் பயன்படுத்தியே இந்தோ பசுபிக் பாதுகாப்பு விவகாரங்களில் இலங்கையைக் கையாளுகின்ற விடயங்களில் அமெரிக்கா ஈடுபட்டு வருகின்றது. மகிந்த ராஜபக்ச ஜனாதிபதியாகப் பதவி வகித்திருந்தபோது 2010 ஆம் ஆண்டு இந்த விவகாரம் சூடுபிடிக்க ஆரம்பித்திருந்தாலும், 2015 ஆம் ஆண்டு ஆட்சி மாற்றம் என்ற போர்வையில் மைத்திரி ரணில் அரசாங்கம் பதவியேற்ற பின்னரான சூழலிலேயே அமெரிக்கா, சீனா போன்ற வல்லாதிக்க நாடுகளுக்கு இலங்கை போட்டிக்களமாக அமைந்தது.

அரசியல் மற்றும் இராணுவச் செயற்பாடுகளில் எதிரும் புதிருமாக இருக்கின்ற அமெரிக்கா, சீனா, இந்தியா ஆகிய நாடுகளின் இராணுவ ஒத்துழைப்பை, ரணில் விக்கிரமசிங்க பிரதமராகப் பதவி வகித்திருந்த போது நன்கு பயன்படுத்தியிருந்தார். இலங்கையின் முப்படைகளுடனான உறவுகளை மேலும் பலப்படுத்த அமெரிக்கா ஆர்வமாக இருப்பதாக 2018 ஆண்டு கொழும்பில் அமெரிக்கத் தூதுவராக இருந்த அதுல் கெசாப் அந்த ஆண்டு ஜூன் மாதம் தாம்வெளியிட்ட அறிக்கையில் கூறியிருந்தார்.

அமெரிக்க, ஆயுதப்படைச் சேவைகள் குழுவின் தலைவர் மக் தோன்பெரி தலைமையில், 2018 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 29, 30ஆம் திகதிகளில், அமெரிக்க பிரதிநிதிகள் சபையின், உறுப்பினர்கள், கொழும்புக்கு பயணம் ஒன்றை மேற்கொண்டிருந்தனர். இதனையடுத்து கொழும்பில் அமெரிக்க தூதுவராக இருந்த அதுல் கெசாப் கொழும்பில் வெளியிட்ட அறிக்கையிலேயே அவ்வாறு கூறியிருந்தார்.

அமெரிக்காவின் பசுபிக் கட்டளைப் பீடத்தைச் சேர்ந்த கப்டன் ஜெப்ரி பென்டன் தலைமையிலான நான்கு படை அதிகாரிகளை உள்ளடக்கிய குழுவும் 2018இல் கொழும்புக்குப் பயணம் மேற்கொண்டிருந்தது. இந்த அமெரிக்க படை அதிகாரிகள் குழு, அப்போதைய இலங்கை இராணுவத் தளபதி லெப். ஜெனரல் மகேஸ் சேனநாயக்கவைச் சந்தித்தும் உரையாடியிருந்தது.

2009ஆம் ஆண்டு மே மாதத்தின் பின்னரான அரசியல் சூழலில், தமிழர் தாயக பிரதேசங்களில், மேற்கொள்ளப்பட்டு வரும் இராணுவ செயற்பாடுகள் மற்றும் அமெரிக்க படைகளிடம் இருந்து பெறப்பட வேண்டிய உதவிகள் குறித்தும் உரையாடப்பட்டது. இந்த உரையாடல் இலங்கையின் முப்படைச் செயற்பாடுகளுக்கு ஏற்றதாக இருந்ததென்று அப்போது அமைச்சராக இருந்த ராஜித சேனரட்ன கொழும்பில் செய்தியாளர்களிடம் கூறியுமிருந்தார்.

இதே காலப்பகுதியில்தான் சீன அரசின் படை அதிகாரிகள் குழுவும் கொழும்புக்கு வருகை தந்திருந்தது. இலங்கையின் தியத்தலாவவில் உள்ள இலங்கை இராணுவ பயிற்சி அக்கடமியில் சீனாவின் நிதியில் கட்டப்படவுள்ள அரங்க வளாகத்துக்கான தொழில்நுட்ப உதவிகளை வழங்குவதற்காக சீனப் படை அதிகாரிகள் குழு கொழும்புக்கு வருகை தந்திருந்ததாக பாதுகாப்பு அமைச்சின் அப்போதைய அதிகாரிகள் கூறியிருந்தனர். சீன இராணுவத்தின் கேணல் சாங் லூஹூவா தலைமையிலான இந்தக் குழுவும், இலங்கையின் அப்போதைய இராணுவத் தளபதி லெப். ஜெனரல் மகேஸ் சேனநாயக்கவைச் சந்தித்தும் உரையாடியது. இலங்கைப் படையினருக்கு மேலும் தேவைப்படுகின்ற தொழில்நுட்ப உதவிகள் குறித்து, இலங்கை, இராணுவத் தளபதி லெப். ஜெனரல் மகேஸ் சேனநாயக்கா விளக்கமளித்தாக கொழும்பில் அப்போது செய்தியாளர்களிடம் கூறப்பட்டிருந்தது.

ஆகவே இலங்கை இந்தோ பசுபிக் பிராந்திய பாதுகாப்பில் முக்கியமான கேந்திர நாடு என்ற அடிப்படையில் அமெரிக்காவும் சீனாவும் மற்றும் இந்தியாவும் போட்டியிடுகின்ற தன்மையைப் பயன்படுத்தியே இந்த மூன்று நாடுகளின் முப்படைகளோடும் கூட்டுச் சேர்ந்து பயற்சி மற்றும் உதவிகளைப் பெறுதல் என்ற அடிப்படையிலான அணுகுமுறைகளை மைத்திரி - ரணில் அரசாங்கமே உருவாக்கியதெனலாம்.

மஹிந்த ராஜபக்ச ஜனாதிபதியாக இருந்தபோது இந்த அணுகுமுறை போரை ஒழிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பின்னரான சூழலில், எதிரும் புதிருமாக இருக்கின்ற நாடுகளின் உதவிகளை அந்த நாடுகள்கூடக் கோபப்படாமல் இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்கிய இராஜதந்திரத்தை 2015 இல் உருவாக்கியவர் ரணில் விக்கிரமசிங்கதான். அம்பாந்தோட்டைத்துறைமுகம் 99 வருடக் குத்தைக்கு வழங்கப்பட்டமை, போர்ட் சிற்றி எனப்படும் சீன அரசின் திட்டத்தை கொழும்பு சர்வதேச நிதிவர்த்தக நகரம் என்று பெயர்மாற்றி அதற்குரிய தனியான சட்டதிட்டங்களை உருவாக்கவும் வழிசமைத்தவர் ரணில் விக்கிரமசிங்கவே. அதேகாலத்தில் அமெரிக்காவுடன் அக்சா எனப்படும் பாதுகாப்பு உடன்படிக்கைகூட ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கமே 2017 ஆம் ஆண்டு 183 பக்கங்கள் அடங்கிய விதிமுறைகளோடு கைச்சாத்திட்டிருந்தது. 2007 ஆம் ஆண்டு இதற்கான முதற் உடன்படிக்கையை மஹிந்த ராஜபசக்ச அரசாங்கம் 17 பக்கங்களில் உள்ளடங்கிய விதிமுறைகளுடன் கைச்சாத்திட்டிருந்தது.

சீன முதலீடுகள் இலங்கையில் ஆழமாகக் கால் பதிப்பதற்குரிய ஏற்பாடுகளைச் செய்தது ராஜபக்ச குடும்பம் என்றால், அதனை மேலும் அங்கீகரித்துச் செயற்படுத்தியது மைத்திரி- ரணில் அரசாங்கமே என்பதை அப்போது அமைச்சரவைப் பேச்சாளராக இருந்த ராஜித சேனரட்ன கொழும்பில் செய்தியாளர் சந்திப்பில் கூறிய தகவல்கள் உறுதிப்படுத்துகின்றன.

ஆகவே ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி என்ற இரண்டு சிங்களத் தேசியக் கட்சிகளுமே ஈழப்போரை இல்லாதொழித்து, இலங்கைத் தீவில் வல்லாதிக்க நாடுகளின் போட்டிகளுக்கும் வழிவகுத்தன என்ற முடிவுக்கு வரலாம். ஆனால் பௌத்தகுருமார் இதனைப் புரிந்துகொள்ள மறுக்கின்றனர். அத்துடன் சிங்கள ஆட்சியாளர்கள் மத்தியில் பிளவுகளை உருவாக்கிச் கட்சிகளே இல்லாதவொரு சிங்கள பௌத்த தேசிய இயக்கம் ஒன்றை உருவாக்குவது போன்றதொரு ஆபத்தும் தென்படுகின்றது.

கட்சி அரசியலைக் கடந்து வல்லாதிக்க நாடுகளின் இலங்கை மீதான ஆதிக்கத்தை இல்லாமல் ஒழிப்பதே பிரதான நோக்கமாக இருக்க வேண்டுமென ஞானசார தேரர் கூறுகின்றார். கண்டி மகாநாயக்கத் தேரர்களும் அவ்வாறான தொனியில் கருத்துக்களைத் தற்போது வெளியிடுகின்றனர். சிங்கள வார இதழ்களில் வெளிவரும் அரசியல் கட்டுரைகள் அமெரிக்க, இந்திய நாடுகளை எதிர்க்கும் அதேவேளை, சீனாவின் இலங்கை மீதான அபிவிருத்தித் திட்டங்களை மென்போக்கில் மாத்திரமே கண்டிக்கின்றன.

சீன அரசை இலங்கையில் பௌத்த சிங்களவர்களின் பாதுகாவலனாகவே சிங்கள வாத இதழ்களில் வெளிவரும் சில கட்டுரைகள் வெளிப்படுத்துகின்றன. இதன் பின்புலத்திலேதான் மகிந்த ராஜபக்ச, ரணில்விக்கிரமசிங்கபோன்ற சிங்கள அரசியல் தலைவர்களும் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் செயற்பாடுகள் அமைகின்றன.

இத்தகைய நிலையில். கொழும்பு சர்வதேச நிதி வர்த்தக நகரத்தின் நிர்மாணப் பணிகளைப் பார்வையிட இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. அதுவும் கொழும்பில் உள்ள சீனத் தூதரகமே அழைப்பை விடுத்துள்ளது. இது தொடர்பாக நாடளுமன்றத்தில் கேள்வி எழுப்பியுள்ள எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, எமது நாட்டுக் கடல் பிரதேசத்தை மூடி அமைக்கப்பட்டு வரும் நகரம் ஒன்றைப் பார்வையிட சீனத் தூதரகமா அழைப்புவிட வேண்டும்? . எமது பிரதேசத்தைச் சுயமாகச் சென்று பார்வையிட எமக்கு உரிமையில்லையா ? என்று அவர் வினவியுள்ளார்.

ஆனால் இதே சஜித் பிரேமதாசதான், 2017 ஆம் ஆண்டு வீடமைப்புத்துறை அமைச்சராக இருந்த போது, சீன முதலீடுகளை தமிழர் தாயகமான வடக்கு - கிழக்குக்குக் கொண்டுசெல்ல வேண்டுமென வலியுறுத்தியிருந்தார். திருகோணமலையில் உள்ள எண்ணெய்க் குதங்களை சீனாவுக்கு வழங்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்தார். அதாவது வடக்கு= கிழக்கு நிலத் தொடர்புகளைத் துண்டிக்கும் வகையில் சீன முதலீடுகளுக்கான திட்டங்களை இவரே வகுத்திருந்தார். அது இவருடைய தந்தையாரான பிரேமதாசாவின் இந்திய எதிர்ப்புத் தன்மையின் வெளிப்பாடென்றும் கூறலாம்.

உலகத்தையே புலனாய்வு செய்யக்கூடிய முறையில் கொழும்பு மருதானையில் அமைக்கப்பட்ட சீன அரசின் தாமரைக் கோபுர நிர்மாணப் பணிகளுக்கான முழு ஒத்துழைபபையும் வழங்கியவர் சஜித் பிரேமதாசவே. ஆகவே இவ்வாறானதொரு நிலையில் தற்போது கொழும்பு சர்வதேச வர்த்தக நிதி நகரம் தொடர்பாக ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியும் சஜித் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியும் கேள்வி எழுப்புவதும், அது சீன அரசின் கொலனியென வர்ணிப்பதும் வெறுமனே அவர்களின் கட்சி அரசியல் செயற்பாடுகள் மாத்திரமே. சீன அரசின் தேவைக்காகக் கொழும்புக் கடலில் அமைக்கப்பட்ட நகரத்துக்குத் தனியான சட்டம் உருவாக்குவதென்றால், தமிழ் ஈழத்தையே வழங்கியிருக்கலாம் என்ற கிண்டல் தொனியில் ஆளும்தரப்பு அமைச்சர்கள், எதிர்த்தரப்பு உறுப்பினர்கள் பலர் இன்று பேச ஆரம்பித்திருக்கின்றனர். அந்தப் பேச்சு கிண்டல் தொனியாக இருந்தாலும் அது அவர்களின் மனச்சாட்சியை உலுப்புகின்றதெனலாம்.

ஏனெனில் இலங்கைத்தீவில் உள்ள வடக்கு -கிழக்குப் பிரதேசங்களில் வாழும் தமிழ் மக்களுக்குச் சுயாட்சி அதிகாரத்தை வழங்க மறுத்த சிங்கள ஆட்சியாளர்கள், இன்று சீனா என்ற வல்லரசின் பிடிக்குள் அகப்பட்டு, இலங்கையின் ஒட்டுமொத்த இறைமைக்கே ஆபத்தை விளைவித்திருப்பதாக அவர்கள் உணருகின்றனர்.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவைப் பொறுத்தவரை கொழும்பு சர்வதேச நிதி வர்த்தக நகரம் என்பது சீன அரசின் தேவைக்கானதாகப் பேசப்பட்டாலும். அங்கு அமெரிக்க, பிரித்தானிய உள்ளிட்ட மேற்குலக மற்றும் ஐரோப்பிய நாடுகளின் முதலீட்டாளர்களை வரவழைப்பதன் மூலம் பொருளாதார ரீதியாக சீனாவோடும் இந்தோ பசுபிக் பாதுகாப்பில் அமெரிக்க இந்திய அரசுகளோடும் இணைந்து கொள்ள முடியுமென நம்புகின்றார். ஏனெனில் வல்லரசு நாடுகளிடையே 2009 ஆம் ஆண்டு மே மாதத்திற்குப் பின்னர் இலங்கையை மையப்படுத்திய பிராந்தியப் போட்டிக்கான வசதியை ஏற்படுத்திக் கொடுத்தவர் இவரேதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'கலைமுகம் 71' ஒரு நோக்கு




இராகவன்

கலைமுகம் எழுபத்தோராவது இதழ் பிரதம ஆசிரியர் நீ. மரியசேவியர் அடிகளின் கருத்துக்களோ வார்த்தைகளோ இன்றி வெளிவருகின்ற முதலாவது இதழாகத் தனது வருகையைப் பதிவு செய்துள்ளது. இவ் விதழின் தலையங்கமானது அவரது ஆளுமைக் கூறுகள் மற்றும் திறன்மிகு செயற்பாடுகளைக் குறிப்பிட்டு நோயோடு தன்னளவில் போராடிக்கொண்டிருக்கும் அவரது நலத்காக இறைவேண்டல் செய்யவும் கலைமுகத்தின் வாசகர்கள் மற்றும் கலை ஆர்வலர்களை ஊக்கமும் ஆதரவும் என்றென்றும் குன்றாதிருக்கவும் வேண்டி நிற்பதாக அமைகின்றது. துரதிர்ஷ்டவசமாக இந்தக் குறிப்பை எழுதும்போது நீ. மரிய சேவியர் அடிகள் காலமாகிவிட்டார் என்பதைத் துயரத்துடன் பதிவுசெய்ய வேண்டியுள்ளது.

வழமைபோல இவ் விதழும் கட்டுரைகள்; தொடர் கட்டுரை; கவிதைகள்; மொழிபெயர்ப்புக் கவிதைகள்; சிறுகதைகள்; மொழிபெயர்ப்பு சிறுகதை; நூல்மதிப்பீடுகள் மற்றும் பத்திகள் போன்ற உள்ளடக்கங்களோடு கனதியாகவே வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

கட்டுரைகளில் "போலிச் செய்திகளின் காலம் அல்லது ஒரே இரவில் கோட்பாடு இயற்பியலாளராக மாறுவது எப்படி? (இளவேனில்) சமகாலச் சூழலை இயல்பாக எடுத்துக்காட்டுகளுடன் பதிவு செய்த வகையில் முக்கியத்துவம் பெறுகின்றது. "கடலின் மூச்சுக்குள் சுழியோடி வந்தவர்" எனும் கோ.கைலாசநாதனின் கட்டுரை அமெரிக்க ஓவியரான Winslow Homer (1836.19.10) பற்றியும் அவரது முக்கிய ஓவியங்கள் பற்றியும் சிறப்பாக விபரிக்கிறது. ஓவியங்களைப் பற்றிய கட்டுரையில் எடுத்துக்காட்டப்படும் ஓவியங்கள் வரையப்பட்ட வண்ணத்திலேயே இடம்பெறுவது முக்கியமானதாகும். இல்லையெனில் அது வாசிப்பதுடன் நின்று விடும். ரசனை மட்டத்துக்கு இட்டுச் செல்லாது என்பது கவனிக்கத்தக்கதாகும். இதை எதிர்வரும் இதழ்களின் தயாரிப்பில் பொறுப்பாசிரியர் கவனத்தில் கொள்ளல் வேண்டும்.

தொ.பரமசிவன் பற்றி அய்யன் எழுதியிருக்கும் நினைவுக் குறிப்பு ஒருபக்க அளவிலிருந்தாலும் சிறப்பாகவுள்ளது. "ஹனாவின் டயறியும் ரவியின் குமிழியும் உயிர் மீண்ட சரிதங்கள்" எனும் தலைப்பில் செக்கோஸ் லொவேக்கியாவின் யூதப் பெண்மணியும் நடிகையுமான ஹானாப்பரவதா எழுதிய 'I Wish writing this diary for you, sasha என்ற புத்தகத்தையும், சுவிஸ் ரவி எழுதி அண்மையில் வெளிவந்த "குமிழி" என்ற புத்தகத்தையும் ஒப்பிட்டு எம். ரிஷான்ஷெரீப் நல்லதொரு கட்டுரையைத் தந்துள்ளார். "உடுவில் அரவிந்தன் சிறுகதைகளில் குறியீடுகள்" எனும் சி.விமலனின் கட்டுரை வரவேற்கத்தக்கதும், பாராட்டுக்குரியதுமாகும்.

நீர்வைப் பொன்னையனுடன் ஓரளவுக்குப் பரிச்சயமானவன் என்ற வகையில் தெளிவத்தை ஜோசப் அவரைப் பற்றி "மூத்த, முற்போக்கு எழுத்தாளர் நீர்வைப் பொன்னையன் நினைவலைகள்" என்னும் தலைப்பில் எழுதியிருக்கும் அஞ்சலிக்குறிப்பு நிதர்சனமானதும், நேர்மையானதுமாகும். அடுத்து முக்கியமாகக் குறிப்பிட வேண்டியது டி.சேதமிழன் எழுதியிருக்கும் "தனுஜாஈழத்திருநங்கையின் பயணமும் போராட்டமும்" எனும் தலைப்பிலமைந்த கட்டுரையாகும். தனுஜா என்ற ஈழத்திருநங்கையின் பயணமும் போராட்டமும் என்ற தன் வரலாற்று நூலை நயந்து ரசித்து நடுநிலையில் நின்று வாசிக்கத் தூண்டும் வகையில் (அந்த நூலை) சிறப்பாக எழுதியுள்ளார்.

ஈழத்தில் சிறுவர் நாடகம் ஒரு வரலாற்றுப் பார்வை எனும் யோ.யோண்சன் ராஜ்குமாரின் தொடர் கட்டுரை இவ்விதழுடன் நிறைவடைந்துள்ளது. ஈழத்தில் சிறுவர் நாடகம் தொடர்பில் முழுமையான தகவல்களை எடுத்துக்காட்டுகளுடன் இத் தொடர்மூலமாக யோ. யோண்சன் ராஜ்குமார் தந்துள்ளார்.

இத்துறை சார்ந்தவர்களுக்கு மட்டுமன்றி பொதுவாசகருக்கு ஏற்றவகையிலும் இத்தொடர் அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

கவிதைகளில் "ஒரு குருட்டுக் கொக்கிடமாவது ஞானம் தேடு" (ஃபஹீமா ஜகான்); "அமைதி குலாவும் அறை"; "காட்டின் அடைவுப் பாடல்" (கோ. நாதன்); "பொன்னொளிக் காலம்" (சித்தாந்தன்) மற்றும் கருணாகரன், அகமதுஃபைசல் கவிதைகள் வாசிப்பில் நெருக்கமாகி மனதுக்கு இதமளிக்கின்றன.

மொழிபெயர்ப்புக் கவிதைகளாக "நீ நீயாக" (ஆங்கில மூலம் புரூஸ் பி.வில்மர் தமிழில்: தீயன்) ஆகியவை இடம்பெற்றுள்ளன. இதில் இலங்கை அமெரிக்க கவிஞர் இராஜதந்திரி, கட்டுரையாசிரியர், மொழிபெயர்ப்பாளர் எனப் பலதளங்களில் அறியப்பட்டு ஸ்பானிஷ், பிரெஞ்சு, போர்த்துக்கீசியம் மற்றும் ஹைட்டியகிரியோல் மொழிகளில் கவிதை எழுதும் யாழ்ப்பாணம் அச்சுவேலியைப் பூர்வீகமாகக் கொண்ட இந்திரன் அமிர்தநாயகத்தின் கவிதைகள் சிறப்பாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

சிறுகதைகளின் வரிசையில் வனிதா சேனாதிராஜாவின் "இராவணம்" தட்டையான மொழியால் புனையப்பட்டுள்ளது. எம் ரிஷான் ஷெரீப் மொழிபெயர்த்துள்ள உகண்டா எழுத்தாளர் பியட்றிஸ் லம்வாகாவின் "சந்தை வியாபாரி" மெய்சிலிர்க்க வைக்கிறது. நூல் மதிப்பீடுகளின் வரிசையில் அருள்திரு இராசேந்திரம் ஸ்ரலின் மொழிபெயர்ப்பில் வெளிவந்திருக்கும் றிச்சாட் பாக்கின் "சாதனை படைக்கும் யோனத்தன் லிவிங்ஸ்ரன்" எனும் நா.நவராஜின் குறிப்பானது ஆழ்ந்த நோக்கில் ஒப்பியல் அணுகுமுறையில் எழுதப்பட்டுள்ளது.

பத்திகளில் தொடர்ந்து வெளிவரும் எஸ்.கே விக்கினேஸ்வரனின், "கனவும் நனவாகும் கதையும்" பகுதி இம்முறை "பொத்துவில் முதல் பொலிகண்டி வரை பேரணியும் படிப்பினைகளும்", அஷோரா: காலங்கடந்தும் வாழவல்ல ஒரு படைப்பு!, ஃபன்னி போய் (Funny Boy) திரைப்படம். மண்ணாங்கட்டியாக்கப்பட்ட ஒரு மாணிக்கம்!, "கொரோனா வீட்டுக் கதைகள்: எழுத்தினாலான ஒரு கோட்டோவியம்!, எனும் நான்கு தலைப்புக்களில் கனதியாக எழுதப்பட்டுள்ளது. ஒவ்வொரு உள்ளடக்கத்துக்கும் இடப்பட்டிருக்கும் தலைப்பே ஒரு கவிதை போல அந்த உள்ளடக்கத்தின் தன்மையைச் சிறப்பாக எடுத்துக்காட்டும் வகையில் அமைந்திருக்கின்றது.

"எச்சமும் சொச்சமும்" எனும் தலைப்பில் அருண்மொழிவர்மனால் எழுதப்பட்டிருக்கும் நளபாகம் பற்றிய பத்தியை ஒரு நல்ல இரசனைக் குறிப்பாகவும் பாலின சமத்துவத்தை மட்டுமல்ல, பண்பாட்டு அரசியல்பற்றி அறிவதற்கான சமையலறையை மையப்படுத்திய அழைப்பாகவும் கொள்ளலாம். இத்தகைய விடயங்களை உள்ளடக்கி இந்த நெருக்கடியான காலகட்டத்திலும் கலைமுகம் தனது வருகையைப் பதிவு செய்திருப்பது பாராட்டப்பட வேண்டியதாகும். தொடந்தும் பணி சிறக்க வாழ்த்துவோம். ■

# ஈஸ்ரர் ஞாயிறு...

(17ஆம் பக்கத் தொடர்ச்சி)

"ஈஸ்டர் தாக்குதலை ஏன் ஒரு திட்டமிட்ட நாடகம் என்று சொல்லக்கூடாது. அந்தத் தாக்குதலைத் திட்ட மிட்டவர்கள் ஒரு குறிப்பிட்ட மதத்தவர்கள் மற்றும் மத வழிபாட்டுத்தலங்கள் மீதான தாக்குதல்களை நடத்தியதன் காரணம் , மக்கள் பார்வையைத் திசை திருப்பவதற்காகான உபாயமென்றும் எண்ணமுடியுமல்லவா? " என்றும் அவர் கேள்வி எழுப்புகிறார். இது கால் பந்தாட்டத்தில் சொல்லப் படுவதைப்போல "சேம்சைட் கோல் "(Same Side Goal) ஆக ஏன் இருக்கக்கூடாது ? என எண்ணுபவர்களும் உண்டு. .

இது இஸ்லாமியரின் வளர்ச்சியைக் கட்டுப் படுத்த எடுத்த முயற்சி என்று குற்றம் சாட்டப்பட்ட நிலையில் கொழும்பைத் தளமாகக் கொண்டு வெளிவரும் ஒரு ஆங்கில நாளேடு வெளியிட்டிருக்கும் கட்டுரையில் சொல்லப்பட்ட பின்வரும் விடயம் மேற்சொன்ன அத்தனையையும் புரட்டிப் போட்டுள்ளது.

பொருளாதார நிலைகளையும் பூகோள அரசியலையும் குறிவைத்து நடத்தப்பட்ட இந்தத் தாக்குத்தலினூடாக சீன தேசத்துக்கு மறைமுகச் செய்தி ஒன்று சொல்லப் பட்டிருக்கிறது. இலங்கைசார் கடல் எல்லைக்குட்பட்ட இடங்களில் செல்வாக்குச் செலுத்துவதை நிறுத்த வேண்டும் என்பதே அந்த மறை முகச் செய்தியாகும்.

இந்து சமுத்திரப் பிராந்தியம் தொடர்பான பூகோள அரசியலில் மூலோபாய முக்கிய கேந்திர நிலையமாக இலங்கைக் கடல் பிராந்தியம் அமைந்துள்ளது.

அந்த வழியினூடாகவே அதிக சர்வதேச வர்த்தகம் நடைபெறுகிறது. அது மட்டுமல்ல வர்த்தகம் தொடர்பான தொடர்பாடல்களும் அவ் வழியினூடாகவே நடைபெறுவதாகக் காணப்படுகிறது. எரிபொருள் தாங்கிக் கப்பல்கள் அதிகம் இவ்வழியேதான் பயணிக்கின்றன. அது மட்டுமல்லாது உலகப் பொருளாதார நடவடிக்கைகளை ஒன்றிணைக்கும் கணனித் தரவுகளில் 90 வீதமான தரவுகளைக் கடத்துகின்ற "டேட்டா டகேபிள்" களும் இந்த ஆழ்கடல் வழியேதான் போடப்பட்டிருக்கின்றன.

அத்துடன் இந்தோ- பசுபிக் தொடர்பாக அமெரிக்கா கொண்டுள்ள ஒப்பந்தம் மற்றும் உடன்படிக்கையின்படி அதனைப் பாதுகாக்கின்ற நடவடிக்கைகளிலும் அவர்கள் அக்கறை காட்டுகின்றனர். 2017 இல் இந்தோ - பசுபிக் பிராந்தியம் தொடர்பாக அமைக்கப்பட்ட குவாட் என்ற கூட்டமைப்பின் நோக்கத்தைச் சரிவரப் புரிந்து கொண்டால் மேற் குறிப்பிட்ட மறைமுகச் செய்தி ஏன் அனுப்பப்பட்டது என்பது புரிந்துவிடும். ■

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# ஒரு கைதும் தவிக்கும் 4 ஜீவன்களும்!

பொ.சோபிகா



என் மகனுக்கு எதிரான வழக்கை மேலும் செயற்திறனுடன் முன்னகர்த்தி னால் மட்டுமே அவருக்கு விடுதலை கிடைக்குமெனச் சொல்கிறார்கள்.

ஆனால் அதற்கு போதுமான பொருத்தமான சட்டஉதவிகள் கிடைக்கப்பெற வில்லை. இனியாவது மகனது சட்ட உதவிக்கு எவரேனும் கைகொடுப்பார்களா? என கண்ணீர் கோரிக்கையை முன்வைத்துள்ளார், தமிழ் அரசியல் கைதியான சுப்பிரமணியம் சுரேந்திரராஜனின் தாயார் ராஜமணி,

தனது மகனின் திடீர் கைதுக்கான காரணம் அதன் பின்னர் நடந்த சம்பவங்கள் தன் குடும்பம் பட்ட துன்பங்கள், தனது கோரிக்கைகள் என்ன என்பதை உதயன் சஞ்சீவி வாசகர்களோடு பகிர்ந்து கொள்கிறார் அந்தத்தாய்.

மாத்தளை முத்துமாரி அம்மன் ஆலயத்துக்கு அண்மையில் உள்ள களுதாவளை தான் எங்கள் ஊர். கடந்த 2009 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 26 ஆம் திகதி முற்பகல் 1.40 மணியிருக்கும். வெள்ளைவான் ஒன்று எங்களது வீட்டுக் கேற்றடியில் வந்து நின்றது. திடீரென்று வாகனத்தில் இருந்து சிவில் உடை தரித்த இனந்தெரியாத ஆயுததாரிகள் சிலர் பாய்ந்திறங்கி, ஓடிவந்து , வீட்டைச் சுற்றிவளைத்துக் கொண்டனர்.

என்ன ஏதென்று அறியாத நாம் விழிபிதுங்கிப் போனோம். வீட்டுக்குள் நுழைந்த இருவர், சுகவீனம் காரணமாகப் படுத்திருந்த என் மகன் சுரேந்திரராஜனை பிடித்து, அவர்களது வாகனத்தை நோக்கி இழுத்துச் சென்றனர். நாங்கள் கத்திக் குழறி அவரை விடும்படி மன்றாடினோம்.

வந்தவர்கள் யார்? எதற்காக எங்கள் மகனைப் பிடித்து செல்கிறார்கள் ? எங்கே கொண்டு செல்கிறார்கள்? என எந்தத் தகவல்கைளையும் அவர்கள் சொல்லவேயில்லை. ஏழைகளான எங்களது கண்ணீர் அங்கே எள்ளி நகையாடப்பட்டது.

## புலிகள் விடயத்தில் தலையிடமாட்டோம்

மறைந்த முன்னாள் அமைச்சர் ஆறுமுகம் தொண்டமானின் கொழும்பில் உள்ள பணிமனையில் சாரதியாக வேலை செய்து வந்தவர் எனது மகன் . தன் குடும்பத்தையும் பெற்றவர்களான எம்மையும் ஒரு குறையுமின்றி அன்போடு கவனித்து வந்தார். அவரது கைது எங்கள் குடும்பத்தையே இருளில் மூழ்கடித்துவிட்டது. பின் வந்த நாட்களில், தனது இரண்டரை வயதுக் குழந்தையை சுமந்தபடி மருமகளும் (மகனின் மனைவி) , தள்ளாத வயதில் நானுமாக மகனைத் தேடி பொலிஸ் நிலையங்கள், மனித உரிமைகள் ஆணைக்குழு, சர்வதேச செஞ்சிலுவை சங்கம்,அரசியல் தலைவர்களின் அலுவலகங்கள் என அலைந்து திரிந்தோம். இவ்வாறு சுமார் 3 மாத காலம் கடந்தது. இந்த நிலையில் கொழும்புத் துறைமுக பொலிஸாரினால் தடுத்து வைக்கப்பட்டிருந்த எனது மகன், காலித்துறைமுக பொலிஸாரின் இரகசிய தடுப்புபிரிவுக்கு மாற்றப்பட்டுள்ளார் என்று தகவலொன்று கிடைக்கப்பெற்றது. பின்,பெரும் சிரமத்தின் பிரகாரம் அறிந்த தெரிந்தவர்களின் அனுசரணையோடு அவ்விடம் சென்று பார்த்தோம்.

விசாரணையாளர்களின் துன்புறுத்தல்களுக்கு ஆளான நிலையில் என் பிள்ளை உருக்குலைந்து போயிருந்தான்.

விசாரிக்கும் போதும், "வடக்கு, கிழக்கு தமிழனுக்குதான் பிரச்சினை இருக்கிதென்டு ஆயுதத்தை தூக்கினவங்கள். நீ மலையகத்திலே பிறந்து வளர்ந்து எங்கடை ஆக்களோடையே இருந்து கொண்டு எங்களுக்கு எதிராக சதி வேலை செய்கிறாயா.?எனக் கேட்டுக் கேட்டுத் தாக்கி துன்புறுத்தியதாக மகன் கண் கலங்கினார். அதன் போது அங்கிருந்த பொலிஸார், "உங்கள் மகனுக்கு தென்னிலங்கையில் இடம்பெற்ற சில குண்டுத்தாக்குதல்களுடன் தொடர்பு இருப்பதாக நாம் சந்தேகிக்கின்றோம். விசாரணைகள் முடிந்த பின்பு தான் இவரை விடுவிப்பதா ?இல்லையா? என்பதைத் தீர்மானிக்கமுடியும் என்று கூறினர். அதைக்கேட்டு அதிர்ச்சியுற்ற நாம்,மகன் வேலை செய்த கட்சி அலுவலகத்தாரிடம் சென்று உதவிகேட்டு மன்றாடினோம். அதற்கு அவர்கள்,புலிகள் அமைப்புடன் தொடர்புபட்ட விசாரணை என்பதால் நாம் அதில் தலையிடமுடியாது என கைகழுவி விட்டார்கள் . இருப்பினும் எம் பிள்ளையை விடுவிப்பதற்காக எமது கால்கள் நடப்பதை நிறுத்தவில்லை.

## பாரதூரமான குற்றச்சாட்டுகள்

நாட்கள் வேகமாக நகர்ந்தன. மகனை அம்பலாங்கொட பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு சென்ற கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவினர், எனது மகன் தானாக விரும்பி முன்வந்து ஒப்புக்கொண்டு கொடுத்த மாதிரியான ஒரு குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை தயார்ப்படுத்தியிருந்தனர். அதனையடுத்து, 2010 ஒக்ரோபர் 02 ஆம் திகதி அன்று கொழும்பு நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட மகன் கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டார்.

அதுவரையில் கொழும்பு மாத்தளை என்று அலைந்து திரிந்ததில் காது,கழுத்தை மறைத்திருந்த தங்க நகைகளும் அடைவுக்கு சென்று அறுதியாகிப் போய்விட்டது.

இப்படி அன்றாட சீவியத்துக்கே நாம் அல்லல் பட்டுக்கொண்டு இருக்கும் போது, மகனுக்கு எதிராக பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கொழும்பு மேல்நீதிமன்றில் பாரதூரமானதொரு வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. அதாவது, பாகிஸ்தான் நாட்டின் முன்னாள் தூதுவர் மீது, 2006 ஓகஸ்ட் 14 ஆம் திகதி விடுதலைப்புலிகளால் கொழும்பில் வைத்து மேற்கொள்ளப்பட்ட குண்டுத்தாக்குதலுக்கு வேவுத் தகவல் திரட்டி உதவியதாக சுமார் 28 குற்றச்சாட்டுக்குள் அடங்கிய குற்றப்பத்திரம் என் மகனுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டது. அதனையடுத்து அவர் கொழும்பு மகஸின் சிறைச்சாலைக்கு இடம்மாற்றப்பட்டார். பயங்கரவாத தடைச்சட்ட விதியின் கீழான மகனது வழக்கினை எதிர்கொள்வதற்கு எந்த சட்டத்தரணியை பிடிப்பது...? யாரிடம் உதவிகேட்பது? என அப்போது எதுவுமே எமக்கு தெரிந்திருக்கவில்லை.மகனது முயற்சியினால் சக அரசியல் கைதிகளின் ஆலோசனைக்கு அமைய சிரேஷ்ட சட்டத்தரணி கே.வி.தவராசாஅவர்களை நாடினோம்.

## ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்புதல் வாக்குமூலம்

ஆரம்பத்தில் அவருக்கான கொடுப்பனவை அருட்தந்தை சக்திவேல் வழங்கி உதவினார். 2017 ஆம் ஆண்டாகும் போது சட்டத்தரணிக்கேற்பட்ட உடல் உபாதை காரணமாக மகனது வழக்கை பிறிதொரு சிங்களச் சட்டத்தரணியிடம் அவரே ஒப்படைத்தார். புதிய சட்டத்தரணி வழக்கில் முன்னிலையாகி வந்தபோது அவருக்கான கொடுப்பனவிவை சக கைதிகளின் மூலம் கருணை உள்ளம் கொண்ட புலம்பெயர் தோழமைக் தாங்கள் அனுப்பி உதவினர்.

அவ்வாறிருக்கும் போது மகனுக்கெதிரான வழக்கின் ஒரே ஒரு முதன்மைச் சாட்சியமான குற்றஒப்புதல் வாக்குமூலம் "எதிரியால் சுய விருப்பத்துடன் தான் வழங்கப்பட்டுள்ளது"என நீதிமன்றினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு விட்டது. இந்த சம்பவம் ஏற்கனவே இருந்த கவலையை இரட்டிப்பாக்கி எதிர்காலம் தொடர்பில் பாரதூரமான கேள்வியை தோற்றுவித்துவிட்டது. குற்ற ஒப்புதல் வாக்குமூலம் ஏற்றுக்கொள்ளப்பட்டதன் பின்பு கடந்த 3 வருடங்களாக வழக்கு முன்கொண்டு செல்லப்படாது வெறுமனே நீண்டகாலமாகத் தவணையிடப்பட்டு வருகிறது.

## இரக்கம் காட்டாதா அரசாங்கம்?

27 வயதில் என் மகன் கைதுசெய்யப்பட்டார். குடும்பத்தின் ஒட்டுமொத்த பொறுப்பையும் கையேற்று பார்த்து பராமரித்து வந்த மகனை பிரிந்து அவரது மனைவி, மகள் உட்பட வயோதிபப் பெற்றோரான நாமும் கடந்த 12 வருடங்களாக பெரும் துயரத்துடன் வாழ்ந்து வருகிறோம்.அவரது மனைவி உளநலன் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளார். அன்றாடம் அதிகரித்து செல்லும் வாழ்க்கை செலவுகளுக்கு ஈடு கொடுக்க முடியாமல் தடுமாறுகிறோம்.

நாட்டின் வடக்கு = கிழக்கு பிரதேசங்களை சேர்ந்தவர்களுக்கு இப்படியான வழக்கு விடயங்கள் பழக்கப்பட்டவை. அதனால் நிலைமைகளை புரிந்துகொண்டு பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதில் தயக்கம் இருப்பதில்லை. எனினும்,மலையகப் பகுதிகளை பொறுத்தமட்டில் விடுதலை புலிகளுடன் தொடர்புபட்ட வழக்கு விடயம் என்றதுமே விலகிச் செல்லும் நிலையே தற்போதுவரைதொடர்கிறது. இப்படி இருக்கும் போதுஎமதுகுடும்பத்தின் கையறு நிலைமையைச் சற்றுஎண்ணிப்பாருங்கள். எனக்கு இப்போது 70வயதாகிறது. கணவருக்கு 72வயது. மருமகள்,வீட்டில் இருந்தபடியே ஆடைகள்தைப்பதால் கிடைக்கப்பெறுகின்ற சிறியதொரு வருமானத்தை கொண்டே எங்கள் நாளாந்தச் சீவியம் நகர்கிறது. 15 வயதாகின்ற மகனது பெண் பிள்ளை (எனது பேத்தி ) தரம் 10 இல் படிக்கிறாள். தந்தையின் நிலை உணர்ந்து நன்றாக படித்துக் கொண்டிருக்கும் சின்னவளின் கல்வியும்,எதிர்காலமும் எமதுபொருளாதார பிரச்சனையால் பாழாகி விடுமோ என அஞ்சுகிறேன்.

## பொருத்தமான சட்டஉதவிகள் இல்லை

மகனுக்கு எதிரான வழக்கை மேலும் செயற்திறனுடன் முன்னகர்த்தினால் மட்டுமே விடிவு கிடைக்குமென சொல்கிறார்கள். இதற்கும் போதுமான, பொருத்தமான சட்டஉதவிகள் கிடைக்கப்பெறவில்லை. பிள்ளையின் படிப்புக்கும் மகனது சட்ட உதவிக்கும் எவரேனும் கைகொடுப்பார்களாயின் எனது முதிய இதயம் அவர்களுக்கு என்றும் நன்றிபாராட்டும்.

மகன் மீதான புலன் விசாரணைக் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட துன்புறுத்தல்கள் காரணமாக இடதுபுற இடுப்பு மற்றும் கைகால்களில் விறைப்பு தன்மை ஏற்பட்டு அவர் உடல் உள ரீதியில் பாதிக்கப்பட்டுள்ளார்.

நடப்பு அரசாங்கமும் ஆட்சியாளர்களும் ஒன்றை புரிந்து கொள்ள வேண்டும்., சூழ்நிலைக் கைதியான எனது மகனது வழக்கு விடயத்தில், பாகிஸ்தான் நாட்டை திருப்திப்படுத்துவதற்காக வேண்டி தீர்மானம் எடுக்காமல் கருணைக் கண்கொண்டு நோக்கவேண்டும்.

பாகிஸ்தானுக்கும் எனது மகனுக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை. அதேபோல் சிறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளுக்கும் ஆட்சியாளர்களுக்கும் தனிப்பட்ட முறையில் எந்த விரோதங்களும் இல்லை.கடந்த காலத்தின் போர்ச்சூழல் என் மகன் போன்றோரை சந்தர்ப்ப சூழ்நிலையில் கைதிகளாக்கியுள்ளது.

இதனைச் சகோதர சிங்கள சமூகமும் ஆட்சியாளர்களும் புரிந்துணர்ந்து எழுது பிள்ளைகளின் விடுதலைக்கு ஏதேனுமோர் பொறிமுறையின் ஊடாக வழிசமைக்கவேண்டும் என்பதே இந்தத் தாயின் கண்ணீர் கோரிக்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறியப்படாதவர்கள் நினைவாக...

○ ம.பா. மகாலிங்கசிவம்



**மாடிவீட்டு ஜன்னலும் கூட**
**சட்டையைப் போட்டிருக்கு**
**சேரிக்குள்ளே சின்னப் பிள்ளை**
**அம்மண மாயிருக்கு**

என்பது 'பாடும் வானம் பாடி' படத்தில் இடம் பெற்ற ஒரு பாடலின் இடைப்பகுதி. 'வாழும் வரை போராடு, வழி உண்டு என்றே பாடு' எனத் தொடங்கும் இப்பாடலை வைரமுத்து இயற்றியுள்ளார். முதலாளி வர்க்கத்தின் ஆடம்பரவாழ்க்கையை அதாவது வீட்டு ஜன்னலுக்கே விலையுயர்ந்த கேட்டின் துணிபோடும் நிலையை தொழிலாளி வீட்டுப் பிள்ளை ஒன்று மானத்தை மறைக்கும் உடைவாங்குவதற்கே வழியற்று அம்மணமாக நிற்கும் நிலையுடன் ஒப்பிட்டுச் சிந்திக்க வைப்பதாகப் பாடல் உள்ளது.

இந்த முதலாளி-தொழிலாளி என்ற வர்க்கங்களிடையேயான உறவு மலைக்கும் மடுவுக்கும் இடையே உள்ளது போன்ற மிகப் பெரும் முரண்பாட்டை நீக்கிச் சமத்துவமான உலகம் உருவாக வேண்டும் என உலகின் பல நாடுகளிலும் காலந்தோறும் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

தொழிலாளி வர்க்கத்தின் விடுதலையை முன்னெடுக்கும் நோக்கம் கொண்டதாகக் கம்யூனிசம் என்ற சித்தாந்தமே உருவாக்கப்பட்டது.

எனினும் இந்த வர்க்க முரண்பாடு இன்றுவரை தொடர்ந்து கொண்டே இருக்கின்றது. முதலாளி வசதியாகவும், தொழிலாளி வறுமையிலும் வாழும் நிலை, வாழும் காலத்தில் மட்டுமல்ல கல்லறைவரை தொடர்கின்றது என் பதை அ.யேசுராசாவின் அறியப்படாதவர்கள் நினைவாக என்னும் கவிதை எடுத்துக்காட்டுகிறது.

'ஈழத்துக் கவிதைக் கனிகள்' என்னும் தொகுப்பில் இடம்பெற்ற இக்கவிதை இன்றைய தேன்கூட்டை அலங்கரிக்கின்றது.

## தேன் கூடு



குருநகரைப் பிறப்பிடமாகக் கொண்டவர் அ.யேசுராசா. 1968 இலிருந்து இலக்கிய ஆக்க முயற்சிகளில் ஈடுபட்டு வரும் இவர் கவிதை, விமர்சனம், சிறுகதை, இதழியல் எனப் பல தளங்களில் இயங்கி வருபவர். 'அறியப்படாதவர்கள் நினைவாக', 'காலம் எழுதியவரிகள்' ஆகிய கவிதைத் தொகுதிகளையும், 'பனிமழை' என்னும் மொழி பெயர்ப்புக் கவிதைத் தொகுப்பையும், 'பதிவுகள்' என்னும் பத்தி எழுத்துக்களின் தொகுதி குறிப்பேட்டிலிருந்து, தூவானம், திரையும் அரங்கும் கலைவெளியில் ஒரு பயணம், தமிழ்த்திரையுலகு பிரதான போக்குகளும் மாற்று முயற்சிகளும் முதலிய நூல்களை வெளியிட்டவர். தொலைவும் இருப்பும் ஏனைய கதைகளும் என்பது இவரது சிறுகதைத் தொகுப்பு ஆகும். கவிதை, தெரிதல் என்னும் சஞ்சிகைகளில் ஆசிரியராகவும் திசை, அலை சஞ்சிகைகளின் ஆசிரிய பீடத்துள் ஒருவராகவும் செயற்பட்டவர்.

இனிக் கவிதைக்குட் செல்லலாம். சமரசம் உலாவும் இடமாகக் கருதப்படும் ஒரே இடம் மயானம்தான். ஆனால் அந்த மயானத்திலும் கூட அரசனும் ஆண்டியும் சமமாக மதிக்கப்படவில்லை. அங்கும் வர்க்க முரண்பாடு காணப்படுகிறது என்பதை அறியப்படாதவர்கள் நினைவாக என்னும் இக்கவிதை உறுதியாகவும் ஆதாரங்களுடனும் கூறுகிறது.

**மரித்தோரின் திருநாள்**
**கல்லறைத் திருநாள்**
**விரிந்து கிடக்கின்ற**
**சவக்காலைக்கதவுகள்**
**வந்துபோனபடி பெரிய சனக்கூட்டம்**

எனக் கிறிஸ்தவமதப் பின்னணியிற் கவிதை தொடங்குகிறது. இறந்த அனைத்து ஆன்மாக்களினதும் நினைவாக நவம்பர் 2 ஆம் திகதி கிறிஸ்தவமக்களால் கடைப்பிடிக்கப்படுவது கல்லறைத்திருநாள் ஆகும். அன்றைய நாளில் இறந்தோரின் நினைவாகச் சவக்காலைக்குள் வந்து செல்பவர் பற்றிய அறிமுகத்தை முதலிலே தரும் கவிஞர், உயர் குடியினரின் ஆடம்பரக் கல்லறைகளை வாசகரின் மனக்கண்முன் படமாக வரைகிறார்.

**கல்லறைகள் எழுந்துள்ளன**
**வாழ்ந்து சொகுசாக**
**மறைந்து போனவரின்**
**நினைவுக் கல்லுகளில்**
**வரைந்த அடையாளம்**
**பூவெழுத்தில் விவரங்கள்**
**சிலுவை சம்மனசு**
**கன்னிமரியாளாய்ச்**
**சுரூபங்கள்**

இங்கு மரித்துப் போனவர்கள் வாழும் போதும் சொகுசாக வாழ்ந்தவர்கள். அந்தச் செல்வச் செழிப்பு கல்லறை வரை தொடர்கிறது. நினைவுக் கற்கள் நடப்பட்டு சிலுவை, யேசுநாதரின் தூதர், கன்னிமரியாள் ஆகியோரின் சுரூபங்கள் அங்கு பொறிக்கப்பட்டுள்ளன.

அதுமட்டுமா? தென்கிழக்கு மூலையிலும் கல்லறைகள் ஓர் ஒழுங்கமைப்புடன் வரிசையாக அமைக்கப்பட்டுள்ளன. அங்கே உயர் குழுக்களைச் சேர்ந்த சங்கைக்குரிய கன்னியர்கள், தந்தையர்கள் படுத்துக் கிடக்கிறார்கள் என்று கூறப்படுகிறது. விலையுயர்ந்த பளிங்குக் கற்களால் அவர்கள் நினைவு பொறிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு மரணத்திலும் வசதியான நிலையில் இடத்தில் ஒரு வர்க்கம் வாழுகின்றது.

**ஆனால் மறுபுறமோ**
**கிணற்றருகில்**
**தென்னை மரத்தடியில்**
**பட்டிப்பூ மலர்ந்துள்ள**
**சிப்பிச் சிலுவை**
**மேடுகளின் கீழெல்லாம்**
**மனிதர் புதைபட்ட அடையாளம்**

என இன்னொரு வர்க்கத்தினரின் அதாவது ஏழைத் தொழிலாளி வர்க்கத்தினரின் புதைமேடுகள் காணப்படுகின்றன. கல்லறை கட்டி பெயர், ஊர் எழுதப்படாத காரணத்தால் அவர்களின் பெயரையோ ஊரையோ அறிந்து கொள்ள முடியவில்லை. எனினும் அவர்களைக் குறிப்பாக உணர முடியும் என்ற நம்பிக்கையைக் கவிஞர் முன்வைக்கிறார். கரைவலை இழுத்தவர்கள் ஒருபுறம். அதுவும் "தாமிழுத்த மீனில் சம்மாட்டி கொழுத்திருக்க மெலிந்து கருவாடாய்க் காய்ந்தவர்கள்" என முதலாளிகளின் உழைப்புச் சுரண்டப்பட்ட நிலை குறிப்பாகக் கூறப்படுகிறது. மூட்டைசுமந்தவர்கள், கைவண்டியிற் பாரவிறகு இழுத்தவர்கள், வீதிகளிற் கழிவு அகற்றுவோர் என உழைப்பாளர்கள் தாம் புதைந்து கிடப்பார்கள் எனக் கவிஞர் உறுதியாகக் கூறுகிறார்.

**செத்துப் புதைபட்டுக்**
**கிடந்த மண்மீதும்**
**எல்லை கட்டி**
**கல்லறையாய் மேடுகளாய்**
**வர்க்கத்தின் முத்திரைகள்**

வர்க்கத்தின் முத்திரைகள் என புதைகுழிகளிலும் வர்க்க முத்திரை பதிக்கப்பட்டிருப்பதை மீண்டும் மீண்டும் கூறிக் கவிதை நிறைவுபெறுகிறது. சாவே சமன் செயும் கோல், சமரசம் உலாவும் இடம் முதலிய கோட்பாடுகள் கவிஞராற் சிதறடிக்கப்படுகின்றன என்றே கூறலாம். ■

மரித்தோரின் நாள்
கல்லறைத் திருநாள்!
விரிந்துகிடக்கின்ற
சவக்காலைக் கதவுகள்
வந்து போனபடி,
பெரிய சனக்கூட்டம்.

கல்லறைகள் எழுந்துள்ளன;
வாழ்ந்து சொகுசாக
மறைந்து போனவரின்,
நினைவுக் கல்லுகளில்
வரைந்த அடையாளம்,
பூவெழுத்தில் விவரங்கள்,
'சிலுவை' 'சம்மனசு'
'கன்னிமரியாளாய்ச்'
சுரூபங்கள்;
கூலிக் குழைத்த
மேசன் தொழிலாளர்
கைவண்ணம்
தென்கிழக்கு மூலை,
வரிசையாய்க் கல்லறைகள்,
'சங்கைக் குரிய கன்னியர்கள்
தந்தையர்கள்'
படுத்துக் கிடக்கிறாராம்;
பளிங்கில் அவர் நினைவு
பொறிக்கப் பட்டுள்ளன.

கிணற்றருகில்
தென்னை மரத்தடியில்,
பட்டிப்பூ மலர்ந்துள்ள

சிப்பி சிலுவை
மேடுகளின் கீழெல்லாம்
மனிதர் புதைபட்ட
அடையாளம்.
பேரும் தெரியாது.
ஊரும் தெரியாது.

யாரென்றும் அறியப்
படாத மனிதர்கள் இங்கு
புதைந்துள்ளார்.

யாரென்றறியப்
படாதவரென்றாலும்,
அவரைக் குறிப்பாக
உணர முடியுந்தான்.....!


'ஒருகரையில்' நின்றபடி
கரைவலையை இழுத்தவர்கள்;
தாமிழுத்த மீனில் சம்மாட்டி
கொழுத்திருக்க;
மெலிந்து கருவாடாய்க்,
காய்ந்து மடிந்தவர்கள்...

'அலுப் பாந்தி' அருகில்
மூட்டை சுமந்தவர்கள்; பார
விறகுவைக்க
கை வண்டில்
இழுத்தவர்கள்....

பொழுது புலராத விடிகாலை
தொடங்கியதும்
நகரை ஊடறுத்த
வீதிகளின் வீடுகளில்,
நாளும் அழுக்குகளைக்
களைந்து சுமந்தவர்கள்......
உழைப்பாளர் தாம்புதைந்து
கிடப்பார்கள்!

செத்துப் புதைபட்டுக்
கிடந்த மண்மீதும்
எல்லை கட்டி,
கல்லறையாய் மேடுகளாய்
வர்க்கத்தின் முத்திரைகள்
வர்க்கத்தின் முத்திரைகள்!

## கரைந்தழியும் நிமிடங்கள்



அலைந்து கொண்டிருக்கும்
மறுப்பின்வெளியில்
தீராத காற்று
எந்த பற்றுதல்களுக்கும்
உட்படுவதில்லை

எரிந்து கொண்டிருக்கும் திரியின்
ஒளிப்பிரிகைக்கு நீ என்று
பெயர்
அது மாய தாகம்

திரண்டு சிவந்து எழும் தீயின்
கூந்தல் கோதி முடித்து உதிரம்
உருக்கும் அகாலங்கள்
அவை கணப்பொழுதில் மறையும்
கானலாகிய வானவில் நிறங்கள்

தன்னிச்சையாக உருவாக்கி கொண்ட
ஜன்னலோரங்கள்
கரைந்தழியும் நிமிடங்கள்

வானமும் கடலும் தழுவிக்கொள்ளும்
தங்க நிறப் பொழுதுகளில்
ஏகாந்தம் என் கால் நனைக்கும்

கயூரி புவிராசா.

© 2000 Agfa-Gevaert N.V.
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# மண்ணை விட்டு விண்ணைத் தொட்டு...!

உலக உலா

ஆர்.பிரகாஷ்

ரஷ்யாவுக்கும் அமெரிக்க மேற்கத்தியக் கூட்டணிகளுக்கும் இடையில் தற்போது ஏற்பட்டிருக்கும் முறுகல்கள் போதாதென்று, பிறிதொரு விவகாரத்தில் உச்சக்கட்டப் பதற்றங்கள் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் மிகையாகத் தென்பட ஆரம்பித்துள்ளன. ஆனால், அந்தப் பதற்றம் இந்தப் புவியைச் சார்ந்ததாக இருக்காது. புவியின் எல்லைகளைக் கடந்து விண்ணுலகத்துக்கும் பரவப்போகின்றது. அதற்குரிய ஏதுநிலைகள் தென்பட ஆரம்பித்துள்ளன.

மேற்கத்திய நாடுகளுடன் ரஷ்யா கொண்டுள்ள விண்வெளி ஆய்வு மைய ஒப்பந்தம் 2024ஆம் ஆண்டுடன் முடிவுக்கு வருகின்றது. அலெக்சி நவால்னி விவகாரம், உக்ரைன் எல்லைப் பிரச்சினை என்று ஏகப்பட்ட விடயங்களில் ரஷ்யா உலக நாடுகளுடன் முரண்பட்டுக் கொண்டிருக்கின்றது. இன்னும் சொல்லப்போனால் ரஷ்யா தனிமைப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இப்படியொரு பின்னணியில் சர்வதேச ஆய்வு மைய ஒப்பந்தத்தைப் புதுப்பிக்க ரஷ்யா விரும்புமா?. இல்லவேயில்லை. இதன் விளைவாகவே 2025ஆம் ஆண்டில் தனக்கெனத் தனியாக விண்வெளி ஆய்வு மையத்தை அமைக்கப்போவதான அறிவிப்பை ரஷ்யா விடுத்துள்ளது. அத்துடன் அதற்கான நகர்வுகளையும் முன்னெடுத் துள்ளது. இதைத் தொடர்ந்துதான் ரஷ்யா - மேற்கத்திய அமெரிக்கக் கூட்டணிக்கு இடையில் விண்ணில் ஒரு மோதல் வெடிக்கலாம் என்கின்றனர் அவதானிகள்.


மண்ணில் யார் ஆதிக்கம் செலுத்துவது என்பதற்கான போர் ஒரு முனையில் இடம்பெற்றுக் கொண்டிருக்கையில், மண்ணையும்தாண்டி விண்ணில் ஆதிக்கத்தை நிலைநாட்ட உலக நாடுகள் புறப்பட்டு பலகாலம்.

இயற்கை இடர், வழிமாசு என்பவற்றை ஆய்வு செய்வதற்காக இன்று செய்மதிகளை அனுப்பாத நாடுகள் என்று இல்லை. ஆனால் விண்ணில் இராணுவ மயமான பாய்ச்சலை இலக்காகக் கொண்டு இனி இந்தப் போட்டிகள் மாறப்போகின்றன என்பதுதான் இங்கே கவனிக்க வேண்டிய விடயம். அமெரிக்கா இதில் உச்சப் பாய்ச்சலை நிகழ்த்தியுள்ளது.

ட்ரம்பின் ஆட்சிக்காலத்தில், அமெரிக்காவின் 'சீல்' படைகளுக்கு மேலதிகமாக விண்வெளிக்கு எனத் தனியான இராணுவப் படையை அமைக்க அத்திபாரம் இடப்பட்டாயிற்று. இந்தத் திட்டத்தின்படி விண்வெளியில் ஆயுதங்களையும் அணுவாயுதங்களையும் அமெரிக்கா நிலைநிறுத்தும் செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளது. இந்த நிலையில் ரஷ்யாவின் இந்த அறிவிப்பு அமெரிக்காவுக்கு நிச்சயம் எரிச்சலூட்டும் நடவடிக்கைதான்.

தனக்கென தனியான ஆய்வு மையத்தை ரஷ்யா நிறுவி விட்டால், அது பல நாடுகளுக்கு எச்சரிக்கையாகவும் அச்சுறுத்தலாகவும் அமையும் என்பது வெளிப்படை. ஆதலால், தனி ஆய்வு மையம் என்ற ரஷ்யாவின் இந்த அறிவிப்புக்கு அமெரிக்கா நிச்சயம் எதிர்வினை ஆற்றியே தீரும். விண்ணில் ஆயுதங்களை நிலைநிறுத்துவது என்ற தன் உச்ச வரம்பை இனி அமெரிக்கா அழித்து மாற்றும். அது ஒட்டுமொத்த உலகையும் நிச்சயம் பதற்றத்துக்குள் தள்ளும். அதைநோக்கித்தான் வல்லரசுகளின் அணிவகுப்புக்கள் நிகழ்ந்து கொண்டு இருக்கின்றன.

உள்நாட்டுப் போர்களாலும் சர்வதேசப் போட்டிகளாலும், இன்று ஏகப்பட்ட நாடுகள் சிதிலமாக்கப்பட்டுள்ளன. சிரியா, ஈரான், ஈராக், லிபியா, ஏமன், துருக்கி, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், சூடான் என்று இந்தப் பட்டியல் நீள்கின்றது. எண்ணற்ற மக்கள் பஞ்சத்துக்குள்ளும் பசிக்குள்ளும் தள்ளப்பட்டுள்ளனர். மீண்டுவர முடியாத பின்னடைவுக்குள் சில நாடுகள் உள்ளன. உலகின் துயரம் ஒரு முனையில் இவ்வாறு இருக்கையில் மறுமுனையில் விண்ணைக் கைப்பற்றும் விஷப்பரீட்சைகளும் இடம்பெற்றுக் கொண்டிருப்பதுதான் இன்றைய உலகின் யதார்த்தம்.



---

விளையாட்டு






# முதலிடம் எவருக்கு?

ஐ.பி.எல் தொடர் பரபரப்பு நிலையை அடைந்துள்ளது. இந்தத் தொடரில் இதுவரையான நிலவரத்தின்படி றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர், சென்னை சுப்பர் கிங்ஸ், டெல்லி அணிகள் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகின்றன. அதிலும் புள்ளிப்பட்டியலில் முதலிடத்தைக் கைப்பற்றுவதற்கு சென்னை, பெங்களூர் அணிகளுக்கு இடையில் மாறிமாறி போட்டி இருந்து வருகின்றது. இன்று மாலை 3.30 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் இந்த இரு அணிகளும் எதிர்த்துப் பலப் பரீட்சை நடத்துகின்றன.

பெங்களூர் அணி இதுவரை நான்கு ஆட்டங்களில் விளையாடி அனைத்திலும் வெற்றிபெற்று புள்ளிப்பட்டியலில் முதலிடத்தில் உள்ளது. சென்னை அணி நான்கு ஆட்டங்களில் விளையாடி மூன்று ஆட்டங்களில் வெற்றிபெற்று புள்ளிப்பட்டியலில் இரண்டாவது இடத்தில் உள்ளது. இன்றைய ஆட்டத்தில் சென்னை அணி வெற்றிபெற்றால் முதலிடத்துக்கு முன்னேறும். பெங்களூர் வெற்றிபெற்றால் புள்ளிப்பட்டியல் மாற்றமில்லாமல் தொடரும்.

சென்னை அணியைப் பொறுத்தவரையில் பலமான துடுப்பாட்ட வரிசையைக் கொண்டுள்ளது. பிளஸிஸ், ருத்ராஜ், மொயின் அலி, ரெய்னா என்று பட்டியல் நீள்கின்றது. பந்து வீச்சில் சென்னை சொல்லிக்கொள்ளும் படியாக இல்லாவிட்டாலும் அந்த அணி துடுப்பாட்டத்தை வைத்து தன் பலவீனங்களைச் சமன்செய்து வருகின்றது.

பெங்களூர் அணி பலமான துடுப்பாட்ட முன்வரிசையைக் கொண்டுள்ளது. கோலி, படிக்கல், மக்ஸ்வெல், வில்லியர்ஸ் என்று அந்த அணியின் முன்வரிசை மிகப்பலமாக உள்ளது. பந்து வீச்சில் சிராஜ், ஜெமிசன் கூட்டணி மிரட்டுகின்றது. ஆனால் இந்தக் கூட்டணியில் ஒருவரின் பந்துவீச்சு திசைமாறினாலும் சென்னையின் பக்கம் வெற்றிக்காற்று வீசும்.

**"காத்தடிக்குது காத்தடிக்குது**
**சென்னைப்பக்கம் காத்தடிக்குது"**

ஆர்.லயனல்

# நடராஜன் இல்லாத ஹைதராபாத் அணி



வெந்த புண்ணில் வேல் பாய்வது போன்று, ஏற்கனவே துன்பப்பட்டிருந்த ஹைதராபாத் அணிக்கு தற்போது இன்னுமொரு துன்பம் வந்து சேர்ந்துள்ளது. ஐ.பி.எல். தொடர் ஆரம்பிக்கும்போது ஹைதராபாத் அணியின் நட்சத்திர வீரரான வில்லியம்சன் உடற்தகுதி இல்லாமல் இருந்தார். அவர் இல்லாமல் விளையாடிய ஹைதராபாத் அணி முதல் மூன்று ஆட்டங்களிலும் தோல்வியடைந்து பெரும் பின்னடைவைச் சந்தித்தது. வில்லியம்சனின் மறுவருகையின் பின்னர் அந்த அணி பஞ்சாப்பை வீழ்த்தியது.

தற்போது ஹைதராபாத்தின் நம்பிக்கை வீரர்களில் ஒருவரான நட்டு எனப்படும் நடராஜன் முழங்காலில் ஏற்பட்ட காயம் காரணமாக தொடரில் இருந்து விலகியுள்ளார். தமிழக வீரரான நடராஜன் ஹைதராபாத் அணியில் விளையாடுகின்றார் என்பதற்காகவே அந்த அணியின் ரசிகர்களாக பலர் மாறியிருந்தனர். இந்த நிலையில் நடராஜன் விலகியுள்ளமை பலரை கவலைக்குள் ஆழ்த்தியுள்ளது.

**"புட்டு இல்லாத யாழ்ப்பாணியும்**
**நட்டு இல்லாத ஐ.பி.எல்லும் முழுமாகுமா?"**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org